பக்கங்கள்: 12+IV= பதினாறு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 7.00

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 பங்குனி 1 சனிக்கிழமை (15-03-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:109

## புதிய துணைவேந்தர் 19ஆம் திகதி பதவியேற்பு



யாழ்.பல்கலைக்கழகத்தின் ஐந்தாவது துணைவேந்தராக பேராசிரியர் எஸ்.மோகனதாஸ் எதிர்வரும் 19ஆம் திகதி பதவியேற்கின்றார்.

தனது நியமனக் கடிதத்தை அவர் ஜனாதிபதியின் செயலாளர் பாலபட்ட பெந்தியிடம் நேற்றுப் பெற்றுக்கொண்டார்.

யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தில் இரசாயனவியல் துறையின சிரேஷ்ட விரிவுரையாளராகவும் பின்

(12ஆம் பக்கம் பார்க்க)

# பேச்சுக்களில் பங்குபற்றுவதா? புலிகளின் முடிவு இன்று தெரியும்!

## கிளிநொச்சியில் செய்தியாளரிடம் மாலை அறிவிக்கப்படும்

கிளிநொச்சி,மார்ச்15

ஜப்பானில் எதிர்வரும் 18ஆம் திகதி ஆரம்பமாகும் ஆறாவது சுற்று சமாதானப் பேச்சில் விடுதலைப் புலிகள் பங்குபற்றுவார்களா, இல்லையா? இது குறித்து விடுதலைப் புலிகள் இன்று மாலை அதிகாரபூர்வமாக அறிவிப்பர்.

இது தொடர்பாக புலிகளின் தலைமைப்பீடம் இன்னமும் ஆராய்ந்துகொண்டிருப்பதாகவும் முடிவு இன்று மாலை அறிவிக்கபபடும் எனவும் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் நேற்று 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

நோர்வேப் பிரதி வெளிவிவகார அமைச்சர், கண்காணிப்புக்குழுத் தலைவர் ஆகியோருடன் கப்பல் தாக்கப்பட்ட சம்பவம் குறித்து நடத்திய பேசசுக்கள் தொடர்பாக ஆராய்ந்து கொண்டிருக்கும் நாம், ஜப்பான் பேச்சுக்களில் பங்குபற்றுவதா, இல்லையா என்பது குறித்து தொடர்ந்து ஆலோசனைகளை நடத்திவருகின்றோம் எனவும் அவர் சொன்னார்.

இதற்கிடையே, எதிர்வரும் 18 ஆம திகதி ஜப்பானில் ஆரம்பமாகும் சமா

(12ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ்மக்களுக்கு சுயாட்சி வழங்க சிங்களவருக்கு இறுதிச் சந்தர்ப்பம்!

## தவறவிட்டால் புலிகளின் நிர்வாகம் தனி அரசாகும் என்கிறார் பாலா

பளை,மார்ச்15

**தமிழ்மக்களுக்கு அவர்களது தாயகத்தில் ஒரு சுயாட்சி அதிகாரமுடைய நிர்வாகத்தை உருவாக்கிக்கொடுப்பதற்கு சிங்கள மக்களுக்கு இது இறுதிச் சந்தர்ப்பமாகும். இதனைத் தவறவிட்டால் புலிகள் இப்போது பேணிவருகின்ற நிர்வாகக் கட்டமைப்பு அப்படியே தனி அரசாக மாறுவது தவிர்க்கமுடியாததாகிவிடும்.**

**- இவ்வாறு எச்சரிக்கைத்தொனியில் தெரிவித்திருக்கின்றார் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம்.**

பளை மற்றும் யாழ்ப்பாணம் பிரதேச மக்களுக்கான தமிழீழ வைப்பகத்தின் கிளையை பளை நகரில் அன்ரன் பாலசிங்கம் நேற்று வைபவ ரீதியாக திறந்துவைத்தார். அதன் பின் அங்கு இடம்பெற்ற கூட்டத்தில் அவர் உரையாற்றினார்.


அவர் அங்கு கூறியதாவது:-

சில மாதங்களுக்கு முன்னர் லண்டனில் இருந்து ஒரு பத்திரிகையாளர் வன்னிக்கு வந்தார். வன்னியை ஒரு வாரமாகச் சுற்றிப் பார்வையிட்ட பின்னர் ஒரு பிரபல பத்திரிகையில் கட்டுரை ஒன்றை எழுதினார்.

வட இலங்கையில் ஏற்கனவே ஒரு தனியரசு உருவாகிவிட்டது. தமிழர்களுக்கென்று ஒரு தனியரசு அங்கு இயங்கிக்கொண்டிருக்கின்றது. அங்கே ஒரு காவல்துறை இருக்கிறது. தமிழர்களுக்கென்று இராணுவக் கட்டமைப்பு இருக்கின்றது. அவர்களுக்கென்று பல நிர்வாக அலகுகள் இருக்கின்றன. அவர்களுக்கென்று ஒரு வங்கியிருக்கின்றது.

ஓர் அரசுக்கு எத்தகைய நிர்வாக அலகுகள் தேவையோ அத்தனை அலகுகளும் தமிழர் தாயகத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஆகவே, அங்கே ஒரு தனியரசு இருக்கின்

(12ஆம் பக்கம் பார்க்க)



தமிழீழ வைப்பகத்தின் குடாநாட்டுக்கான கிளை அலுவலகத்தை நேற்று பளையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் நாடாவை வெட்டித் திறந்து வைப்பதைப் படத்தில் காணலாம். *(மேலும் படங்கள் 3ஆம் பக்கத்தில்)* *படம்: தேவா*

## பளையில் வைப்பகக் கிளை நேற்று திறந்து வைக்கப்பட்டது

யாழ்ப்பாணம்,மார்ச்15

தமிழீழ வைப்பகத்தின் கிளை ஒன்றை விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் பளை நகரில் நேற்று முற்பகல் சம்பிரதாய பூர்வமாக நாடாவை வெட்டி திறந்து வைத்தார்.

பச்சிலைப் பள்ளிப் பிரதேசசபையின் கட்டடத்தில் வைப்பகம் திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வை கிளிநொச்சி மாவட்ட கல்விப் பணிப்பாளர் வ.அரியநாயகம் சுடரேற்றி ஆரம்பிதது வைத்தார். தமிழீழத் தேசியக்கொடியை விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனும் வைப்பகத்தின் கொடியை தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசனும் ஏற்றிவைத்தனர். கிளிநொச்சி அரச அதிபர் வி.இராசநாயகம் வைப்பகத்தின் பெயர்ப் பலகையைத் திறந்துவைத்தார்.

வைப்பகத்தின் அலுவலகத்தைத் திறந்து வைத்து அன்ரன் பாலசிங்கம் சிறப்புரையாற்றினார்.

இந்த நிகழ்வில் நிதித்துறைப் பொறுப்பாளர் தமிழ்க்குமரன், நிதித்துறை மேலாளர் தமிழேந்தி, விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி உட்பட பலர் கலந்துகொண்டனர்.

## நம்பியாரின் அறிக்கை இரண்டொரு நாள்களில்?

வடக்கில் படையினரின் உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பான தமது நிபுணத்துவ அறிக்கையை இந்தியாவின் முன்னாள் இராணுவ அதிகாரி லெப்டினன்ட் ஜெனரல் சதீஷ் நம்பியார் இரண்டொரு நாள்களில் இலங்கை அரசுக்குச் சமர்ப்பிப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான ஆறாவது சுற்று சமாதானப் பேச்சுக்கள் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை ஜப்பானில் ஆரம்பமாகின்றன. அதற்கு முன்னர் நம்பியாரின் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுவிடும் எனவும் -

பேச்சுக்களின்போது இந்த அறிக்கையை இரு தரப்பும் பரிசீலிக்கக்கூடியதாக இருக்கும் எனவும் -

விடயமறிந்த வட்டாரங்கள் நம்பிக்கை வெளியிட்டன.

வடக்கில் மக்களின் வாழ்விடங்கள், உயர்பாதுகாப்பு வலயங்கள் என்ற பெயரில் ஆக்கிரமிக்கப்பட்டிருப்பதைக் கடுமையாக ஆட்சேபிக்கும் புலிகள், பொதுமக்கள் அங்கு மீளக்குடியமர அனுமதிக்கப்படவேண்டும் என வலியுறுத்தி வருகின்றார்கள்.

இவ்விடயம் குறித்து நிபுணத்துவக் கோரிக்கை வழங்கும்படி ஜெனரல் நம்பியாரை இலங்கை அரசு கோரியுள்ளது. இந்த நிபுணத்துவ ஆலோசனையின் அடிப்படையில் இப்பிரச்சினைக்கு தீர்வுகாணலாம் என்றும் அரசுத் தரப்பு யோசனை கூறியிருக்கிறது.

அத்தகைய அறிக்கையை பரிசீலிக்கத் தயார் என்று புலிகள் ஏற்கனவே கூறியிருந்தனர்.

எனவே, நம்பியாரின் அறிக்கை எதிர்பார்க்கப்பட்டபடி ஓரிரு தினங்களில் அரசுக்குச் சமர்ப்பிக்கப்பட்டால் உத்தேச ஜப்பான் பேச்சுக்களில் அந்த விடயமும் முக்கியத்துவம் பெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ஐ)

### நாடாளுமன்றத்தைக் கலைக்கும் எண்ணமில்லை

## மாற்று அரசு அமைக்க முடியும் என்ற நம்பிக்கையே இருக்கிறது – ஜனாதிபதி

கொழும்பு,மார்ச்15

நாடாளுமன்றத்தைக் கலைக்கும் எண்ணம் எனக்கில்லை. மாற்று அரசு ஒன்றை அமைக்கமுடியும் என்ற நம்பிக்கையே என்னிடமிருந்து வருகிறது என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூறியிருக்கிறார்.

நேற்றுமுன்தினம் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டமைப்பு தூதுக்குழு பிரதிநிதிகளைச் சந்தித்தபொழுதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

அவ்வாறான ஓர் அரசின் கீழ் முஸ்லிம் மக்களின் பிரச்சினை குறித்து மிகுந்த கவனத்துடன் செயற்பட தான் நடவடிக்கை எடுப்பதாகவும் ஜனாதிபதி அச்சந்திப்பின்போது கூறியிருக்

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி பயணம்

கொழும்பு,மார்ச்15

ஐரோப்பிய நாடுகளுக்கான உத்தியோகபூர்வ மற்றும் தனிப்பட்ட விஜயம் மேற்கொண்டு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்றுப் பயணமானார் என ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐரோப்பிய நாடுகளுக்கான விஜயத்தை முடித்துக்கொண்டு ஜனாதிபதி அடுத்தவாரம் நாடு திரும்புவார் எனவும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ)

### இலங்கைச் சிறையில் உள்ள

## தமிழக மீனவர்களை மீட்காவிடின் தீக்குளிப்போம் என எச்சரிக்கை!

### இராமேஸ்வரத்தில் பதற்றம்!!

இராமேஸ்வரம்,மார்ச்15

இலங்கைச் சிறைகளில் இருக்கும் தமிழக மீனவர்களையும் கடலில் மூழ்கிவிட்ட 8 படகுகளையும் உடனடியாக மீட்காவிட்டால் தீக்குளித்து சாகப்போவதாக இராமேஸ்வரம் மீனவர்கள் எச்சரித்துள்ளனர்.

இராமேஸ்வரம், நாகபட்டினம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 139 தமிழக மீனவர்கள் சமீபத்தில் இலங்கை மீனவர்களாலும் கடற்படையினராலும் கடத்திச் செல்லப்பட்டனர். அவர்களில் 93 மீனவர்கள் மட்டுமே விடுவிக்கப்பட்டனர்.

இந்நிலையில், கடந்த 3ஆம் திகதி கடத்திச் செல்லப்பட்ட இராமேஸ்வரம் மீனவர்களில் சிலர் இன்னும் சிறைவைக்கப்பட்டுள்ளனர். மேலும, அவர்கள் சென்ற எட்டுப் படகுகள் கட

(12ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

என்றென்றும் தரம்
அது நிரந்தரம்
10 YEARS WARRANTY Japanese Technology
உங்களின் மனதில் என்றுமே முதல்வன்!
Lumala
Bicycles Supreme

MICRO PC SYSTEMS
◆ கணனி விற்பனை ◆ பழுதுபார்த்தல் ◆ பராமரிப்பு
intel IBM hp Mercury PROLINK
175/3, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பெ. 077-7308417
MPAQ COMPUTERS

SHARP
உத்தரவாதத்துடன் கூடிய விற்பனைக்குப் பிந்திய சிறந்த சேவை
89, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி: 021-2225150
Browns ELECTRONICS

# அன்வரின் ஓய்வு ஒத்திவைப்பு!

இஸ்லாமாபாத்,மார்ச்15

பாக். கிரிக்கெட் வீரர் சயீட் அன்வர் சர்வதேச ஆட்டங்களில் இருந்து ஓய்வுபெறும் திட்டத்தை ஒத்திவைத்துள்ளார்.

ஓய்வு பெறுவதற்கே நான் எண்ணியிருந்தேன். ஆனால் டெஸ்ட் வீரர்கள் உட்பட எனது நண்பர்களும், மதத் தலைவர்களும் என்னைத் தொடர்ந்து விளையாடுமாறு வலியுறுத்துகின்றனர். என்னால் இன்னும் சிறப்பாக விளையாட முடியுமென அவர்கள் கூறுகின்றனர்."

- இவ்வாறு நேற்றுமுன்தினம் சயீட் அன்வர் செய்தியாளர்களிடம் கூறினார்.

உலகக்கிண்ணத் தோல்விகளை அடுத்து பாக்.அணியின் சிரேஷ்ட வீரர்களை நீக்குவதற்கு பாக். கிரிக்கெட் சபையின் தலைவர் தாரிக்ஸியா திட்டமிட்டுள்ளார்.

ஆனால், சிரேஷ்ட வீரர்கள் ஓரணியாக நின்று இத்திட்டத்தை எதிர்ப்பதற்குத் தீர்மானித்துள்ளனர். அதன் ஒரு பகுதியே சயீட் அன்வரின் மன மாற்றத்திக்குக் காரணம் எனக் கூறப்படுகிறது.

(ம-5)

# அன்டி பிளவருக்காகவாவது இன்று வென்றாகவேண்டும்

## அணித் தலைவர் ஸ்ரீக் தெரிவிப்பு

ஈஸ்ட் லண்டன்,மார்ச் 15

இன்றுடன் ஓய்வுபெறும் அன்டி பிளவருக்காகவாவது இலங்கையுடனான ஆட்டத்தில் தாம் வெல்வது முக்கியம் என்று சிம்பாப்வே அணித் தலைவர் ஹீத் ஸ்ரீக் தெரிவித்துள்ளார்.

"அவர்கள் (இலங்கை) சிறந்தவர்கள். ஆனால், இது அன்டி பிளவர் சிம்பாப்வே அணிக்காக ஆடும் இறுதி ஆட்டம். இந்த ஆட்டத்தை நாம் வென்றால், அது அவருக்கான மிகச் சிறந்த நினைவுப் பரிசாக இருக்கும்" - என்றார் ஸ்ரீக்.

நேற்று பத்திரிகையாளர்களிடம் பேசும்போது அவர் இப்படித் தெரிவித்தார்.

இன்று நடைபெறும் இலங்கை - சிம்பாப்வே அணிகள் இடையிலான ஆட்டம் இரு அணிகளுக்குமே 'சுப்பர் சிக்ஸி'ல் கடைசி ஆட்டம். 'சுப்பர் சிக்ஸ்' பட்டியலில் ஏற்கனவே கடைசியில் இருப்பது சிம்பாப்வே. இன்று அது வென்றாலும் அதனால் அரையிறுதி ஆட்டத்துக்குச் செல்ல முடியாது.

இந்த உலகக் கிண்ணப் போட்டி முடிந்ததும் தனது சர்வதேச கிரிக்கெட் வாழ்க்கைக்கு முடிவு கட்டப் போவதாக சில வாரங்களுக்கு முன்

(11ஆம் பக்கம் பார்க்க)

SHARP Action of the day



நேற்று தன் முதலாவது ஓவரிலேயே இரு விக்கெட்டுக்களை வீழ்த்திய மகிழ்ச்சியில் இந்திய வேகப்பந்து வீச்சாளர் சஹீர் கான் சகாக்களுடன் சேர்ந்து குதூகலிப்பதைக் காணலாம்.

பிரவுன்ஸ் எலக்ரோனிக்ஸ் BROWNS ELECTORINICS Browns Group of Companies




## சஹீட் அவ்ரிடிக்கு தடை

இஸ்லாமாபாத்,மார்ச்15

சார்ஜா முக்கோண கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தான் அணி வீரர் சஹீட் அவ்ரிடி பங்குபற்றுவதற்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது. பாக்.கிரிகெட் சபை இத்தடையை விதித்துள்ளது.

இந்தியாவுடனான உலகக்கிண்ண ஆட்டத்தில் சச்சின் டெண்டுல்கர், வீரேந்திர ஷேவாக் மற்றும் நடுவர் டேவிட் செப்பர்ட் ஆகியோருடன் மோதியமையே இதற்குக் காரணம்.

பாக்.கிரிக்கெட் சபை இத் தீர்மானத்தை அறிவித்துள்ளது.

'இது தொடர்பான முறைப்பாட்டை ஐ.சி.சி எமக்கு ஆதாரங்களுடன் அனுபபியது. விசாரணையில் அவ்ரிடி குற்றவாளியாகக் காணப்பட்டுள்ளார்.

(11ஆம் பக்கம் பார்க்க)

# இந்திய அணிக்கு 7 தலைவர்கள்

## வெற்றியின் ரகசியம் அதுதான்

செஞ்சூரியன்,மார்ச்15

இந்திய அணியின் வெற்றி இரகசியம் என்ன என்பது குறித்து உலகக் கிண்ணத்தின் அதிகாரபூர்வ இணையத் தளத்தில் தகவல்கள் வெளியாகியுள்ளன. அதில் இந்தியாவுக்குத் தற்போது 7 தலைவர்கள் செயற்பட்டு வருகிறார்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்திய அணிக்குத் தற்போது இரண்டு துடுப்பாட்டத் தலைவர்களும், இரு பந்துவீச்சுத் தலைவர்களும், இரண்டு களத்தடுப்புத் தலைவர்களும் உள்ளனர். ஒட்டுமொத்தமாக தலைவர் ஒருவர் இருக்கிறார். நீண்ட ஆலோசனைக்குப் பிறகு இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

உண்மையான தலைவர் தவிர்தத 6 தலைவர்களும் அணியில் உள்ள மற்ற வீரர்களை வழிநடத்துகின்றனர்.



விக்கெட் வீழ்ந்த பின் எப்படி கூடி மகிழ்வதுஎன பயிற்சி எடுக்கும் இந்திய அணி வீரர்கள்.

அடுத்த ஆட்டத்தின்போது, அணி அவர்களிடம் என்ன எதிர்பார்க்கின்றது என்பதைக் கற்றுக் கொடுக்கின்றனர்.

அணியின் துடுப்பாட்ட தலைவர்களாக சச்சின் டெண்டுல்கரும் ராகுல்

(11ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கை அரையிறுதிக்கு செல்லுமா? இன்று தெரியும்

கிழக்கு லண்டன்,மார்ச்15

கிரிக்கெட் உலகக் கிண்ணத் தொடரில் 'சுப்பர் சிக்ஸ்' ஆட்டங்கள் ஒருவாறு இன்றுடன் நிறைவுக்கு வருகின்றன. இன்றைய ஓர் ஆட்டத்தில் இரண்டு அணிகளின் தலைவிதி தங்கியுள்ளது. இலங்கையின் வெற்றி தோல்வியில் நியூஸிலாந்தின் விதி தங்கியுள்ளது.

இன்று இரண்டு ஆட்டங்கள் நடைபெறுகின்றன. எனினும், பரபரப்பான எதிர்பார்ப்புக்குரியது ஓர் ஆட்டம் மட்டுமே. இலங்கை - ஸிம்பாப்வே அணிகளுக்கிடையிலான ஆட்டம் அது.

நேற்று இந்திய நியூஸிலாந்து அணிகளுக்கிடையில் நடைபெற்ற ஆட்டத்தில் இந்தியா வெற்றிபெற்றதன் மூலம் இலங்கைக்கு அரையிறுதிக்குச் செல்லும் வாய்ப்பு பிரகாசமாகியுள்ளது. தற்போது இலங்கை அணியுள்ள நிலையில் இந்த அரிய சந்தர்ப்பத்தைச சரிவரப் பயன்படுத்துமா என்பதே கேள்வி.

ஸிம்பாப்வேயைப் பொறுத்தவரை இந்த ஆட்டத்தில் வென்றாலும் தோற்றாலும் அது இச்சுற்றுடன் வெளியேறுவது உறுதியாகிவிட்டது.

ஆனால், இலங்கையைப் பொறுத்தவரை இன்றைய ஆட்டத்தை வெனறு

(11ஆம் பக்கம் பார்க்க)

# இந்திய அணிக்கு 4 மடங்கு வெகுமதி

புதுடில்லி,மார்ச்15

"இந்திய அணி உலகக்கிண்ணத்தை வென்று வந்தால் ஒவ்வொரு வீரருக்கும் 50 லட்சம் இந்திய ரூபா பரிசாக அளிக்கப்படும்" என இந்திய கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது. கிரிகெட் உலகக் கிண்ணப் போட்டியில் இந்திய அணி அரையிறுதி வரை எட்டியுள்ளது. இதனால் மகிழ்ச்சி அடைந்துள்ள இந்திய கிரிக்கெட் சபை, அரையிறுதியில் நுழைந்ததற்காக இந்திய அணிக்கு ஒரு கோடியே 87 லட்சம் ரூபா பரிசளிக்கப்படும் என அறிவித்துள்ளது.

அரையிறுதியில் வெற்றி பெற்று

(11ஆம் பக்கம் பார்க்க)

# சைமண்ட்ஸ் குணமடைந்தார்; தேர்வாளர்களுக்குத் தலையிடி


ஆஸ்திரேலிய அணியின் சகலதுறை வீரர் அன்ரூ சைமண்ட்ஸ் காயம் காரணமாக இலங்கையுடனான ஆட்டத்தில் பங்குபற்றவில்லை.

தற்போது அவர் குணமடைந்துள்ளார். எனினும் கென்யாவுடனான ஆட்டத்தில் அவரை சேர்ப்பதா வேண்டாமா எனபதில் ஆஸி.அணித் தேர்வாளர்களுக்கு சிக்கல் ஏற்பட்டுள்ளது.



சைமண்ட்ஸை அணியில் சேர்த்தால் பந்துவீச்சாளர் இயன் ஹார்வியை நீக்கவேண்டும். ஆஸ்த்திரேலியாவுடனான இறுதி இரு ஆட்டங்களிலும் சிறப்பாகப் பந்துவீசியவர் ஹார்வி. இலங்கையுடனான ஆட்டத்தில் 7 ஓவர்களில் 29ஓட்டங்களை மாத்திரம் கொடுத்தார். நியூஸிலாந்துடனான ஆட்டத்தில் 15 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டை வீழ்த்தினார்.

சைமண்ட்ஸ் பாகிஸ்தானுடனான ஆட்டத்தில் 125 பந்துவீச்சுக்களில் ஆட்டமிழக்காமல் 143 ஓட்டங்களைப பெற்றவர். இந்நிலையில் சைமண்ட்ஸ், ஹார்வி இருவரில் யாரை சேர்ப்பது என்று தீர்மானிப்பதில் தேர்வுக்குழுவினர் பெரும் சங்கடத்தை எதிர்நோக்கி யுள்ளனர். (ம-5)




ஆஸ்திரேலிய அணியின் துணைத் தலைவரும் விக்கெட் காப்பாளருமான அடம்ஸ் கில்கிறிஸ்ட் தென்னாபிரிக்காவில் உள்ள பூங்கா ஒன்றில் மோதங்கஎான சிங்கக் குட்டியொன்றை தூக்கி மகிழ்வதை காணலாம்.

ரூ. 16910 முதல்
தொலைக்காட்சிப் பெட்டிகள்
சிங்கர்
புதிய பார்வை
இல.1, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே.: 021-2225408

ASIAN
COMPUTER EDUCATION
தரமான கணனிப் பாடநெறிகள்
2G,ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்

எக்ஸ்போ ஏவியேஷனில் கொழும்புக்கு பயனியுங்கள்
இலவச போக்குவரத்து வசதி
யாழ்ப்பாணம் - பலாலி - யாழ்ப்பாணம்
கொட்டாஞ்சேனை - ரத்மலானை - கொட்டாஞ்சேனை
எக்ஸ்போ ஏவியேஷன் (பிரைவட்) லிமிட்டட்
Expo Aviation (Pvt) Ltd
1#, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021-2223891, 071-349999
296,A/1, காலி வீதி, கொழும்பு 6
தொ.பேசி: 01-360290,360291,074-512666

# தமிழீழ வைப்பகம் கிளை திறப்புவிழா

1)அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தேசியக் கொடியேற்றுகிறார்.
2)கிளிநொச்சிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.அரியரட்ணம் பொதுச் சுடர் ஏற்றுகிறார்.
3)தமிழீழ வைப்பகக் கொடியை காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் ஏற்றிவைக்கிறார்.
4)நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினர்.
5)மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் உரையாற்றுகிறார்.
(படங்கள்:தேவா)





## திருகோணமலை நேற்று செயலிழந்தது! மூதூர், கிண்ணியாவிலும் கடைகள் பூட்டு

திருகோணமலை,மார்ச்15

திருகோணமலையில் நேற்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. நகரிலும் புறநகர்ப் பகுதியிலுமுள்ள சகல கடைகளும் பூட்டப்பட்டிருந்தன. வாகனப் போக்குவரத்துகள் நடைபெறவில்லை. பாடசாலைகளும் இயங்கவில்லை. அரச நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் என்பனவும் செயலிழந்திருந்தன.

தமிழ் கைதிகள் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டிருப்பதையும் புலிகளின் கப்பல் தாக்கப்பட்டதையும் பொ.ஐ.மு. - ஜே.வி.பி. இனவாத நடவடிக்கைகளைக் கண்டித்தும் இந்தக் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. 'திருமலை வாழ் தமிழ் மக்கள்' என்ற அமைப்பால் இந்த ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

திருகோணமலை நகரம் மட்டுமல்லாது புறநகர்ப் பகுதிகளும் வெறிச்சோடிக் காணப்பட்டன. மூதூர், கிண்ணியா ஆகிய இடங்களிலும் கடைகள் பூட்டப்பட்டிருந்தன. அப்பகுதி மக்களும் ஹர்த்தாலுக்கு பூரண ஆதரவு நல்கினர் எனத் தெரியவருகிறது.

வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவைத் தவிர ஏனைய பிரிவுகள் இயங்கவில்லை. வீதிகள் வெறிச்சோடிக்கிடந்தன. மாகாணக் கல்வி அமைச்சு அலுவலகம் திறக்கப்படாத நிலையிலும் தொண்டர் ஆசிரியர்களின் போராட்டம் தொடர்ந்தது.

நேற்று கிறீன் வீதியில் ஆங்காங்கே கறுப்புக் கொடிகளும் கட்டப்பட்டிருந்தன. (ஐ)

## கரடியனாறில் பயிற்சி முடித்த 89 புலிகளுக்கு பட்டமளிப்பு

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான கரடியனாறிலுள்ள புலிகளின் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சியை முடித்துக்கொண்ட 89 புலிப் போராளிகள் நேற்றுமுன்தினம் அங்கிருந்து வெளியேறினர்.

அவர்களுக்குச் சான்றிதழ்களும் கௌரவ சின்னங்களும் வழங்கும் பட்டமளிப்பு வைபவம் அக்கல்லூரியில் நடைபெற்றது. பயிற்சி முடித்தோரில் 49பேர் பெண்களாவர்.

கரடியனாறு மைதானத்தில் நடைபெற்ற வைபவத்தில் பட்டம் பெற்றோரின் அணிவகுப்பு மரியாதையை புலிகளின் சிரேஷ்ட தளபதியான கேணல் வி.கருணா ஏற்றுக்கொண்டார்.

மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களின் விசேட தளபதி ரி.ரமேஷ், தளபதி ரொபர்ட், பெண்கள் அணித் தளபதி நிலாவினி ஆகியோரும் இதில் கலந்துகொண்டனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான இ.கிருஷ்ணபிள்ளை, ஏ.சந்திரநேரு, பட்டம் பெற்ற போராளிகளின் பெற்றோர், அரசாங்க அதிகாரிகள், பெருந்திரளான பொதுமக்கள் ஆகியோரும் இந்த வைபவத்தைக் காண ஒன்றுகூடியிருந்தனர். (ஐ)

## அடையாள வேலை நிறுத்தத்துக்கு 86 தொழிற்சங்கங்கள் தீர்மானம்

சம்பள உயர்வு உட்பட பல கோரிக்கைகளை முன்வைத்து எதிர்வரும் 26ஆம் திகதி ஒருநாள் அடையாள வேலை நிறுத்தத்தை மேற்கொள்வதென 86 தொழிற்சங்கங்கள் தீர்மானித்திருக்கின்றன.

ரயில்வே, சுகாதாரம், அரசாங்க அச்சகம், அரசு வங்கிகள் உட்பட அரசாங்க சேவைகளைச் சேர்ந்த 86 சங்கங்கள் கடந்த 11ஆம் திகதி கூடி இத்தீர்மானத்தை மேற்கொண்டிருக்கின்றன.

வேலை நிறுத்தத்தோடு கொழும்பில் ஆர்ப்பாட்டதில் ஈடுபடுவதெனவும் பொதுக்கூட்டமொன்றை நடத்துவதெனவும் இச்சங்கங்கள் தீர்மானித்திருக்கின்றன.

இதற்கிடையே, அரச, ஊழியர்களுக்கு உடனடியாக சம்பள உயர்வு வழங்குவது குறித்து நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்தப்படவேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ அரசைக் கோரவிருக்கின்றார்.

எதிர்க்கட்சிகளின் கூட்டுப் பிரேரணையாக இந்தக் கோரிக்கை முன்வைக்கப்படும் என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்திருக்கிறார். (ம)

## கணனி தொடர்பான கருத்தமர்வுகள்

யாழ்ப்பாணம்,மார்ச்15

தமிழீழ மாணவர் அமைப்பின் யாழ்.மாவட்ட பிரிவின் ஏற்பாட்டில் எக்ஸ்பிரஸ் கணனி நிறுவனத்தால் கணனி தொடர்பான கருத்தமர்வுகள் இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியிலும் -

நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியிலும் - இடம்பெறவிருக்கின்றன.

இக்கருத்தமர்வுகளில் பங்குபற்றிப் பயிற்சி பெறுபவர்களுக்கு இறுதியில் சான்றிதழ்கள் வழங்கப்படும். (ஒ-3)

## புற்றுநோய் சிகிச்சை நாளை முதல் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,மார்ச்15

மகரகம புற்றுநோய் நிலைய மருத்துவ அதிகாரி யாழ்ப்பாணத்தில் புற்றுநோய்க்கான சிகிச்சைகளை மேற்கொள்ள உள்ளதாக மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

நாளை ஞாயிற்றுக்கிழமை முதல் எதிர்வரும் 18ஆம் திகதி செவ்வாய் கிழமை வரையிலான மூன்று நாள்கள் இச்சிகிச்சைகள் வழங்கப்படுமென்று தெரிவிக்கப்பட்டது.

நாளை ஞாயிற்றுக்கிழமை யாழ். போதனா வைத்தியசாலையின் சத்திரசிகிச்சைப் பிரிவில் பெண்களுக்கும், குழந்தைகளுக்கும் -

நாளைமறுதினம் திங்கட்கிழமை தெல்லிப்பழை புற்றுநோய் சிகிச்சைப் பிரிவிலும் -

மறுநாள் செவ்வாய்க்கிழமை மீண்டும் யாழ்.போதனா வைத்தியசாலையிலும் -

மேற்படி வைத்தியநிபுணரால் சிகிச்சைகள் வழங்கப்படும்.

சிகிச்சை பெற வருபவர்கள் சிகிசசைப் பதிவேடுகளை எடுத்துவருமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஒ-3)

## செய்தி ஊடகங்கள் மீது அமுனுகம குற்றச்சாட்டு!

கொழும்பு,மார்ச்15

விடுதலைப் புலிகள் புரிந்துணர்வு உடன்படிக்கையினை கடுமையாக மீறுகின்றனர். ஆனால் அந்த விடயத்தில் ஊடகங்கள் மௌனம் சாதிக்கின்றன.

- இவ்வாறு குற்றஞ்சாட்டியிருக்கிறார் பொ.ஐ.முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் அமுனுகம.

நேற்று கொழும்பில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'விடுதலைப் புலிகள் விமான எதிர்ப்பு ஆயுதங்களை அதிகளவில் கொள்வனவு செய்தமைக்கு சாட்சியங்கள் இருக்கின்றன. இது பற்றிச் சுட்டிக்காட்டப்பட்டுள்ள போதும் உள்ளூர் சிங்கள பத்திரிகைகள் மௌனத்தைக் கடைப்பிடிக்கின்றன.

இவ்வாறான செய்திகளை வெளியிடுவதற்கு பத்திரிகைகள் தயங்குமானால் அவற்றுக்கு விளம்பரங்கள் கிடைப்பதை தடுப்பதற்குரிய திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய அவசியம் ஏற்படும்.

எதிர்க்கட்சிகளின் அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்திற்கு முக்கியத்துவம் அளிக்காத பத்திரிகைகள் அரசின் பொதுக்கூட்டத்துக்கு முக்கியத்துவம் அளிக்கின்றன.

வடக்கிலும் கிழக்கிலும் துரித அபிவிருத்தி வேலைகள் தற்போது நடைபெற்றுவருகின்றன. கட்டடப் பொருள்களின் விலை அதிகரிப்பால் இந்த நடவடிக்கைகளுக்கு தடை ஏற்பட்டிருக்கின்றது.

அரசாங்கத்தின் புதிய வரித் திட்டங்களினால் மோசடிக்காரர்களே அதிக நன்மை அடைகின்றார்கள்.

- என்றார் அமுனுகம எம்.பி.(ஒ-4)

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம்,மார்ச்15

ஆசிரியர் தில்லையம்பலம் மதிவதனன்' எழுதிய "ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாறு" நூல் வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு காரைநகர் யாழ்ரன் கல்லூரி அதிபர் ந.பரமசிவம் தலைமையில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ஒ-10-28)



சிவமயம்

## கரைச்சி புளியம்பொக்கனை நாகதம்பிரான் ஆலய பொங்கல் விழா

மேற்படி ஆலய பொங்கல்விழா எதிர்வரும் 18-03-2003 செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது. 11-03-2003இல் விளக்கு வைக்கும் வைபவம் ஆரம்பமாகியுள்ளது. மீசாலை, புத்தூர்ச் சந்தி, பண்டமரவடியில் இருந்து 17-03-2003 திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு பண்டம் புறப்பட்டு, பொங்கல் தினத்தன்று கோயிலைச் சென்றடையும்.

அடியார்கள் ஆலயத்திற்கு வருகை தருவதற்கு போக்குவரத்து வசதிகள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன.

- ஆலய பரிபாலனசபை.

(15583)



## 31 ஆம் நாள் ஆத்மசாந்திப் பிரார்த்தனை



திருமதி
சின்னம்மா பொன்னையா

மண்ணுலகில் 1926.10.17 ✝ விண்ணுலகில் 2003.02.13

எமது அன்புத் தாயார் திருமதி சின்னம்மா பொன்னையா அவர்கள் இறைவனுக்கு நாற்சான்று பகர்பவராக வாழ்ந்தமைக்காக நன்றி நவிலும் வழிபாடும் அதனை தொடர்ந்து மதியபோசனமும் இன்று (15.03.2003) சனிக்கிழமை பகல் 11.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும் அவ்வழிபாட்டிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு உங்களை குடும்ப சகிதமாக அன்புடன் அழைக்கின்றோம்.

*சாந்த வளவு,*
*அளவெட்டி தெற்கு, அளவெட்டி.* (C-26937)

கந்தசாமி குடும்பத்தினர்.
(மகன்)


## நூல் அறிமுகவிழா

வலி.தெற்கு,மார்ச்15

சுன்னாகம் குமாரசாமிப்புலவரின் பூட்டன் சி.சிறிஸ்கந்தராசா எழுதிய 'திருக்குறள் ஓவியத்தில் திகழும் வர்ணஜாலங்கள்', 'நகைச்சுவைக் கதம்பம்', 'பஞ்சவர்ணக்கதம்பம்' ஆகிய மூன்று நூல்களின் அறிமுக விழா நாளை ஞாயிற்றுக்கிழமை சுன்னாகம் கதிரைமலை சிவன் தேவஸ்தான மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நூல் அறிமுக விழாவில் நூல்களின் நயப்புரைகளை முறையே - கவிஞர்.சு.துரைசிங்கம், சி.சிவசரவணபவன் (சிற்பி), சிவதெட்சணாமூர்த்தி ஆகியோர் நிகழ்த்துவர். (ம-152)

## ஆங்கில படிப்பு வட்ட கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,மார்ச்15

யாழ்.ஆங்கிலப் படிப்பு வட்டம் நடத்திவரும் கருத்தரங்குத் தொடரில் அடுத்த அமர்வு நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

எழுத்தாளர் ஐயாத்துரை சாந்தனின் ஆங்கில வசனக் கவிதைத் தொகுப்பு நூலான 'உயிர் வாழ்தலும் எளிய விடயங்களும்' (Survial and Simble things) நூல் பற்றிய பார்வை அங்கு இடம்பெறும்.

பலாலி ஆசிரிய கலாசாலையின் ஓய்வுபெற்ற அதிபர் சோ.பத்மநாதன், யாழ்பல்கலைக்கழக ஆங்கிலத்துறையைச் சேர்ந்த எஸ்.சுந்தரேஸ்வரன் ஆகியோர் கருத்துரை வழங்குவர்.(ஐ)

## குருநகர் மீனவருக்கு விசேட அ.அட்டை

கடற்றொழில் அமைச்சின் அங்கீகாரத்துடன் தயாரிக்கப்பட்டுள்ள விசேட அடையாள அட்டைகள் குருநகர் மீனவர்களுக்கு குருநகர் மீன்பிடிக் கூட்டுறவுச்சங்கம் மூலம் வழங்கப்படவுள்ளன.

இவ்விசேட அடையாள அட்டைகள் இன்று சனிக்கிழமை தொடக்கம் 18ஆம் திகதி வரை குருநகர் மீன்பிடிக் கூட்டுறவுச் சங்கப் பணிமனையில் வைத்து வழங்கப்படவுள்ளதாகவும், உரியவர்கள் தமது குடும்ப அட்டை, அடையாள அட்டை ஆகியவற்றுடன் வந்து பெற்றுக்கொள்ளலாம் என்றும்-

குருநகர் மீன்பிடி கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் மிக்கேல்ராசா அறிவித்துள்ளார். (ஓ-51)




## யாழ்ப்பாண ரஸிக ரஞ்ஜன சபா

(விநாயகர் மண்டபம்)

## சங்கீதக் கல்லூரி

**புதிய மாணவர்களுக்கு இசைப்பயிற்சி**

வாய்ப்பாட்டு, வயலின், மிருதங்கம், நடனம், வீணை
ஆகிய இசைப்பாடங்களை
புதிய மாணவர்களுக்கு கற்பிக்கும் பொருட்டு
18.03.2003 செய்வாய்க்கிழமை
காலை 10.45மணிக்கு
புதிய இசை வகுப்புகளை ஆரம்பிக்கவுள்ளோம்.

இப்பாடங்களை பயில விரும்பும் மாணவர்கள் அன்றைய தினம் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

*31, மணிக்கூட்டு வீதி,*
*யாழ்ப்பாணம்.* (15556)

– விநாயக மண்டப நிர்வாகசபை.



# உதயனின் கிரிக்கெட் கொண்டாட்டம்

**உதயனின் கிரிக்கெட் கொண்டாட்டம்**

**தினம் ஒரு பரிசு - 34**

இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் டெண்டுல்கர் சதம் பெறுவாரா?

முழுப்பெயர் : ..............................
முகவரி : ..............................
அ.அட்டை எண்: ..............................

இக்கேள்விக்கான விடையை இதே கூப்பனில் எழுதி நாளை (16.03.2003) நண்பகல் 1மணிக்குள் தினம் ஒரு பரிசு - 34 , உதயன் பணிமனை, 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம என்ற முகவரிக்கு தபாலில் அனுப்பலாம் அல்லது உதயன் அலுவலகத்தில் உள்ள இதற்கான பெட்டியில் நேரில் சேர்க்கலாம். உடனே விரையுங்கள்.

உதயன்

'அருணஸ்' பரிசுக் கூப்பன்களை வெல்வதற்கான கேள்விகள் விரைவில்



முதற் பரிசு மைக்கிறோ பிசி தரும் கணனி

2ஆம் பரிசு சிங்கர் நிறுவனம் தரும் தொலைக்காட்சி

விசேட பரிசுகள் அருணஸ் ஸ்போட்ஸ் ஸ்பொட்டின் கூப்பன்கள்

SuperSix பரிசு ஓமாலா நிறுவனம் தரும் சைக்கிள்கள்

3ஆம் பரிசு ஷார்ப் நிறுவனம் தரும் வானொலி

தினம் தினம் ஒரு பரிசு ஏசியன் நிறுவனம் தரும் கழிவுக் கூப்பன்கள்

ஆறுதல் பரிசுகள் எக்ஸ்போ நிறுவனம் தரும் விமான ரிக்கெட்டுக்கள்

**உதயனின் கிரிக்கெட் கொண்டாட்டம்**

கிரிக்கெட் உலகக் கிண்ணம் - 2003

**மாபெரும் இறுதிப் போட்டி**

1. இறுதியில் கிண்ணத்தை வெல்லப்போகும் அணி எது?
(..............................)
2. இறுதியாட்டத்தின் ஆட்டநாயகன் யார்?
(..............................)

**உதயன்** 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். முடிவு திகதி: மார்ச் 15

முழுப்பெயர் : ..............................
முகவரி : ..............................
அ.அட்டை எண்: ..............................

**தினம் தினம் ஒரு பரிசு:**

ஆட்டம் நடைபெறும் நாளுக்கு முதல் நாள் கேட்கப்படும் கேள்விக்கு நீங்கள் விடையளிக்க வேண்டும். சரியான விடை எழுதுபவருக்கு ஏசியன் நிறுவனம வழங்கும் 1000ரூபாவுக்கான 50கழிவுக் கூப்பன் கிடைக்கும்.

**விசேட பரிசுக் கூப்பன்கள்:**

முக்கிய ஆட்டங்களின்போது மேலதிகமாக ஒரு கேள்வி கேட்கப்படும். அதில் வெல்லும் அதிர்ஷ்டசாலிக்கு அருணஸ் ஸ்போட்ஸ் பொட் வழங்கும் 500 ரூபா பெறுமதியான பரிசுக் கூப்பன் கிடைக்கும்.

**மாபெரும் இறுதிப் போட்டி:**

இது பெரும் பரிசுகளைக் கொண்டது. வெல்லும் 3 அதிர்ஷ்டசாலிகள் 1ஆம், 2ஆம், 3ஆம் பரிசுகளைப் பெறுவர். ஆறுதல் பரிசுகளாக 10 இருவழி விமானப் பயண ரிக்கெட்டுக்கள் காத்திருக்கின்றன. இதற்கான முடிவு திகதி மார்ச் 15 ஆகும்.

**விதிகள்:-**

ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்பலாம், போட்டோப் பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா, அ.அட்டை பெறும் வயதுக்குக் குறைந்தவர்கள் பெற்றோரின் அ.அட்டை எண்ணைக் குறிப்பிடலாம், உதயன் மற்றும் உதயன் சார்ந்த நிறுவனங்களின் ஊழியர்கள், அவர்களது குடும்பத்தவர்கள் போட்டிகளில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள், நடுவர் குழுவின் தீர்ப்பே இறுதியானது, முடிவுகள் குறித்து எந்த விளக்கங்களுக்கும் தொடர்புகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. அனைத்து முடிவுகளும் மார்ச் மாதம் 27ஆம் திகதிய உதயனில் அறிவிக்கப்படும்.

உதயன்

# பொ.ஐ.மு. - ஜே.வி.பி. கனவு பலிக்குமா?

பேரினவாத விஷத்தைக் கக்கிவரும் ஜே.வி.பி யுடன் இணைந்து கூட்டமைப்பு ஒன்றை உருவாக்க பொதுமக்கள் ஐக்கிய முன்னணி தீவிரமாக முயன்று வருகின்றது. இது தொடர்பாக பொ.ஐ. முன்னணித் தலைவியும் ஜனாதிபதியுமான சந்திரிகா குமாரதுங்க, ஜே.வி.பியின் மூத்த தலைவர்களோடு பல சுற்றுப் பேச்சுக்களை நடத்தியிருக்கின்றார். இருதரப்பினரும் கூட்டமைப்புத் தொடர்பாக புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொள்ளத் தயாராகி வருகின்றார்கள்.

பொது எதிரியான ஐக்கிய தேசிய முன்னணி அரசைக் கவிழ்ப்பதுதான் அவர்களின் ஒரே நோக்கம். அதற்காக எதையும் செய்ய அவர்கள் சித்தம் கொண்டுவிட்டார்கள்.

தான் விரும்பிய எந்தநேரத்திலும் அரசைக் கவிழ்க்கும் - கலைக்கும் - அதிகாரம் ஜனாதிபதி என்ற முறையில் சந்திரிகாவின் கைகளில் இப்போது உள்ளது. எனவே, பொ.ஐ.முன்னணி - ஜே.வி.பி. கூட்டு, தான் விரும்பும் எந்தச் சமயத்திலும் பிரதமர் ரணிலின் அரசை வீட்டுக்கு அனுப்ப முடியும். ஆனால், அதன்பின் என்னவென்பதே கேள்வி.

ஐ.தே.முன்னணி அரசைக் கலைத்தால், இப்போதிருக்கும் நாடாளுமன்றத்தை வைத்துக் கொண்டு பொ.ஐ.மு.- ஜே.வி.பி.கூட்டமைப்பால் மாற்று அரசு ஒன்றை அமைக்க முடியாது. ஒவ்வோர் அரசியல் கட்சியும் கொண்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை மாற்று அரசு ஒன்றை எதிரணியினர் அமைப்பதற்கு அறவே வாய்ப்பாக இல்லை.

எனவே, அடுத்தவழி புதிய பொதுத் தேர்தல் ஒன்றை நடத்துவதுதான்.

அதனால் பொ.ஐ.மு. - ஜே.வி.பி. கூட்டமைப்புக்குச் சார்பான ஓர் அரசியல் சூழ்நிலையை நாட்டில் உருவாக்கிவிட்டு, தற்போதைய நாடாளுமன்றைக் கலைத்து, தமக்கு உசிதமான வேளையில் தேர்தலை நடத்தி, அரசைக் கைப்பற்றுவது. இதுதான் உத்தேச எதிரணிக் கூட்டமைப்பின் உத்தி; தந்திரம்.

புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை நடத்தி அமைதித்தீர்வு காண்பேன் என்ற கோஷத்தைக் கடந்த தேர்தலின்போது மக்களின்முன் வைத்தார் ரணில். மக்கள் அவருக்கு ஏகோபித்த ஆதரவை வழங்கினர். வாக்குறுதியளித்தபடி புலிகளுடனான யுத்தத்தை நிறுத்தி, புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து, சமாதானப் பேச்சுக்களை ஆரம்பித்துள்ளார் பிரதமர் ரணில்.

சமாதானப் பேச்சுகளுக்கிடையில் பல இடைஞ்சல்கள், குழப்பங்கள், நெருக்கடிகள், பின்னடைவுகள் தோன்றுகின்றன என்பது உண்மைதான். ஆயினும், அமைதி முயற்சிகள் தொடர்கின்றன. யுத்தத்தின் அவலச்சாவுகள் நிறுத்தப்பட்டுள்ளன. சமாதான சூழ்நிலை நீடிக்கின்றது. அமைதிநிலை தொடர்வதையே மக்கள் பெரிதும் விரும்புகின்றார்கள்.

இந்தப் பின்னணியில் ஒரு பொதுத் தேர்தல் நடத்தப்பட்டால் அமைதி வழியை நாடும் - விரும்பும் - பிரதமர் ரணில் தலைமையிலான அணிக்கே மக்கள் ஆதரவு பெருமளவில் கிட்டும் என்பதும், யுத்த சன்னதம் கொண்டுநிற்கும் ஜே.வி.பி.சார்புக் கூட்டமைப்பை மக்கள் அடியோடு நிராகரித்து ஒதுக்கி விடுவார்கள் என்பதும் அரசியல் தலைவர்களுக்குத் தெரியாததல்ல.

அமைதிநிலை - சமாதானச் சூழல் - நீடிக்கும் வேளையில் ஐ.தே.மு.அரசைப் பதவி கவிழ்த்து தேர்தல் மூலம் ஆட்சியைக் கைப்பற்ற முடியாது என்பது எதிரணிக் கூட்டமைப்புக்குத் தெளிவாகத் தெரிகின்றது.

அமைதிநிலை குழம்பி, மீண்டும் அரசுப் படைகள் - புலிகள் யுத்தம் வெடித்தால், சமாதான முயற்சிகளை வலியுறுத்தி நின்ற ரணிலை விட, யுத்த சன்னதம் கொண்டு நின்ற - நிற்கின்ற - தங்களுக்குத் தென்னிலங்கை மக்கள் அதிக ஆதரவு தருவார்கள் என்று கணக்கிடுகின்றது எதிரணிக் கூட்டமைப்பு.

அதனால்தான் தற்போதைய சமாதான முயற்சிகளைக் குழமபச செய்து, போரை மீண்டும் வெடிக்க வைப்பதில் கங்கணம் கட்டிக்கொண்டு முனைப்பாக நிற்கின்றது அந்தக் கூட்டமைப்பு.

அவர்கள் குடிப்பது மனப்பால். அது நிஜப்பாலாகுமா என்பதற்கும் அவர்களது கனவு பலிக்குமா என்பதற்கும் காலம்தான் பதில் சொல்ல வேண்டும்.

**வலிகாமம் மேற்குப் பகுதியில்**

# கட்டாக்காலிகளால் அழியும் பயிர்கள்

வலி.மேற்கு,மார்ச்15

வலிகாமம் மேற்குப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட எள்ளு, பயறு போன்ற சிறுதானிய பயிர்ச்செய்கை கட்டாக்காலி ஆடு, மாடுகளினால் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இப்பகுதியில் நெல் அறுவடையைப் பூர்த்திசெய்த விவசாயிகள் அந்த நிலத்தில் எள்ளு, பயறு போன்ற சிறுதானியச் செய்கையில் ஈடுபட்டுள்ளனர். எனினும், ஈரத்தன்மை குறைவாகக் காணப்பட்டதனால் பெரும்பாலான வயல் நிலங்களில் விதைக்கப்பட்ட எள்ளு, பயறு என்பன முளைக்கவில்லை. முளைத்த சில வயல் நிலங்களிலும் கட்டாக்காலி ஆடு, மாடுகள் மேய்ந்ததினால் பயிர்கள் அழிந்துவிட்டன என இப்பகுதி விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

அண்மையில் நடைபெற்ற வலிகாமம் மேற்கு பிரதேச விவசாயக் குழுக்கூட்டத்திலும் இந்தக் கட்டாக்காலி ஆடு, மாடுகளினால் பயிர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் பற்றி ஆராயப்பட்டுள்ளது. (ம-175)

## மாதர் மான்மியம்

**குலமகளே வாழ்க!**



குடித்துவிட்டு நிதமும் வந்து
கூந்தலைப் பிடித் திழுத்து
அடியுடன் உதையும் தந்து
அயலவர் சிரிக்க வைப்பான்
நடித்த கள் வேலை செய்ய
கூடுவர் அயலோர் ஒன்றாய்
டித்த அப்பட்ட தாரி தன்னை
பாங்குடன் நேசிக்கின்றாய்
டி கடவா பத்தினி உன்
பண்பினை மெச்சுகின்றேன்
குடிமகன் தன்னைப் பேணும்
குலமகள் வாழ்க நீடு!

- விகடகவி.

# மரக்கறிப் பயிர்ச்செய்கை குடாநாட்டில் விஸ்தரிப்பு

வலி.கிழக்கு,மார்ச்15

யாழ்.குடாநாட்டில் அண்மைக் காலமாக மரக்கறிச் செய்கை அதிகரித்து வருகின்றது. முன்னைய ஆண்டைவிட இப்போது ஆயிரம் ஹெக்ரேயர் கூடுதல் நிலப்பரப்பில் மரக்கறிச் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு 2002 பெப்ரவரி மாதம் வரையில் 978 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் மரக்கறிச் செய்கை மேற்கொள்ளப்பட்டது. அடுத்த ஒரு வருட காலத்தில் அதாவது, கடந்த பெப்ரவரி மாதம் வரையில் ஆயிரத்து 917 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் மரக்கறி செய்கைபண்ணப்பட்டுள்ளது.

ஏ-9 பாதை திறக்கப்பட்டு இங்கிருந்து மரக்கறி வகைகள் தென்பகுதிக்கு எடுத்துச்செல்லப்பட ஆரம்பித்த பின்பே மரக்கறிச் செய்கையில் இந்த திடீர் அதிகரிப்பு ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து குடாநாட்டிலும் மரக்கறி வகைகளுக்கு பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளது.

இதேவேளை -

தற்போது குடாநாட்டில் அறுவடை முடிந்த வயல்காணிகள் பலவற்றிலும் மரக்கறிச் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட விவசாய உதவிப் பணிப்பாளர் க.சின்னத்துரை தெரிவித்தார்.

கிணறு வசதியுள்ள இடங்களில் அதிக வருவாய்தரும் மரக்கறி வகைகளான வெங்காயம், பீற்றூட் போன்ற பயிர்களும்-

நீர்ப்பாசன வசதி குறைந்த இடங்களில் சுழற்சிமுறை பயிர்செய் தானியங்களான பயறு, கௌபி மற்றும் எள்ளு போன்றவையும் பயிரிடப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பயிர்ச்செய்கை தொடர்பான தெளிவான ஆலோசனைகளையும் பூச்சி நோய்த் தாக்கங்கள் குறித்த விடயங்களையும் அவ்வப் பகுதி விவசாயப் போதனாசிரியர்களிடம் இருந்து பெற்றுக்கொள்ளலாம் என்று விவசாய உதவிப் பணிப்பாளர் தெரிவித்தார். (ம-180)

# புலிகளின் கப்பல் தாக்கப்பட்டமை மக்களைக் கொந்தளிக்க வைத்துள்ளது

## பொது அமைப்புக்களின் ஒன்றியம் அறிக்கை

யாழ்ப்பாணம்,மார்ச்15

சர்வதேச கடற்பரப்பில் சென்றுகொண்டிருந்த விடுதலைப் புலிகளின் வர்த்தகக் கப்பலை இலங்கைக் கடற்படையினர் வலிந்து தாக்கிய சம்பவம் தமிழ் மக்களை கொந்தளிப்புக்குள்ளாக்கியுள்ளது.

- இவ்வாறு தெரிவித்து யாழ்ப்பாண மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவருக்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அமைதி நிலையைக் குழப்பியடித்து மீண்டும் ஒரு போர் முனையைத் திறப்பதற்கு இலங்கைக் கடற்படையினர் ஆயத்தமாகி வருகின்றனர். சர்வதேச கடற்பரப்பில் சென்று கொண்டிருந்த புலிகளின் வர்த்தகக் கப்பலைத் தாக்கியதன் மூலம் இதற்கான அடித்தளத்தை கடற்படையினர் இட்டுள்ளனர். புரிந்துணர்வு உடன்படிக்கையை அப்பட்டமாக மீறும் வகையிலும் சர்வதேச சட்டதிட்டங்களுக்கு முரணான வகையிலும் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

புலிகளை ஆத்திரமூட்டும் வகையில் கடற்படையினரும் இராணுவத்தினரும் தொடர்ந்து செயற்பட்டு வருகின்றமையால் பொதுமக்கள் பெரும் சீற்றமடைந்துள்ளனர். எனவே, இவ்வாறான பொறுமை இழக்க வைக்கும் சம்பவங்கள் நிரந்தர சமாதானத்திற்கு உதவப்போவதில்லை.

எனவே, மிகப் பாரதூரமான இச்சம்பவத்தை சாதாரண ஒரு விடயமாகக் கருதாமல் இது தொடர்பாகத் துரித விசாரணைகளை ஆரம்பிக்கவேண்டும். அத்துடன், இது போன்ற சம்பவங்கள் எதிர்காலத்தில் இடம்பெறாதிருக்க அரசு நடவடிககைகளை எடுக்கவேண்டும். இதன் மூலமே நிரந்தர சமாதான நடவடிக்கைகளுக்கு வழிவகுக்க முடியும் - என்றுள்ளது. (ம-8)

# அப்பலோ மருத்துவமனையுடன் இணைந்து புதிய காப்புறுதித் திட்டம்

யாழ்ப்பாணம்,மார்ச்15

வரையறுக்கப்பட்ட இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் கொழும்பிலுள்ள அப்பலோ மருத்துவமனையுடன் இணைந்து 'சுகஜீவன' என்ற பெயரில் புதிய காப்புறுதித் திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்தி இருக்கின்றது.

இந்தக் காப்புறுதித்திட்டத்தின் கீழ் இணைந்துகொள்ளும் ஒருவர் மற்றும் அவரது குடும்பத்தினர் (குடும்பத்தின் 4அங்கத்தவர்கள் மட்டும்)சுகவீனம் காரணமாக கொழும்பு அப்பலோ மருத்துவமனையில் சிகிச்சை பெற்றால் அதற்குரிய விடுதிக்கட்டணம் மற்றும் மருத்துவச் செலவுகளை காப்புறுதிக் கூட்டுத்தாபனமே செலுத்தும் என்றும் -

வருடம் ஒன்றுக்கு 5ஆயிரம் ரூபா தவணைக் கட்டணமாக செலுத்தும் ஒருவருக்கு அந்த வருடத்தில் அப்பலோ மருததுவமனையில் சிகிச்சை பெறுவதற்கான கட்டணமாக உயர்ந்த பட்சம் ஒரு லட்சம் ரூபாவரை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் செலுத்தும் எனவும் - காப்புறுதிக் கூட்டுத்தாபன அதிகாரி ஒருவர் தொிவித்தார்.

பொதுக் காப்புறுதியின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இப்புதிய திட்டத்தில் காப்புறுதி செய்பவர் வருடாந்தம் செலுத்துவதற்கு உடன்பட்ட காப்புறுதிக் கட்டணத் தொகையைப் பொறுத்து மேற்படி மருத்துவ செலவின் உச்சத் தொகை அதிகரிக்கும் எனவும் கூறப்பட்டது.

இதனால் இந்தத் திட்டத்தில் இணைந்து கொள்வதில் நாடளாவிய ரீதியில் பெருமளவானோர் ஆர்வம் காட்டி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.(ம-4)

## நாளை

பங்குனி 02
ஞாயிற்றுக்கிழமை
(16.03.2003)
திதி : திரயோதசி
முன் இரவு 8.36வரை.
நட்சத்திரம: ஆயிலியம்
காலை 7.02வரை.
மகம்
வைகறை 06.18 வரை.
பிரதோஷ விரதம்
சுபநேரம் : 9.21 - 10.51
ராகுகாலம்:4.51 - 6.21
(பழைய நேரப்படி)

## உதய வாக்கு

மறதி என்பது இல்லையென்றால் வாழ்க்கை ஒரு நரகம்...

**வலி.மேற்குப் பிரதேசத்தில்**

# ஊரத்தி, கல்விளான் ஆகியன மாதிரிக் கிராமங்களாகத் தெரிவு

அராலி மத்தியிலுள்ள ஊரத்தி கிராமமும் பொன்னாலையிலுள்ள கல்விளான் கிராமமும் வலிகாமம் மேற்குப் பிரதேச செயலர் பிரிவில் மாதிரிக் கிராமங்களாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

இந்த இரண்டு கிராமங்களும் சகல துறைகளிலும் அபிவிருத்தி செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதற்கான சகல நடவடிக்கைகளையும் உதவிப் பிரதேச செயலரும் திட்டமிடல் உதவிப் பணிப்பாளருமான கே.தர்மராசா மேற்கொண்டுள்ளார்.

பிரதேச செயலக திட்டமிடல் பகுதியினர் வலிகாமம் மேற்குப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பின்தங்கிய கிராமங்களுக்கு நேரடியாகச் சென்று மேற்கொண்ட ஆய்வின்போதே இந்த இரு கிராமங்களும் மாதிரிக் கிராமங்களாகத் தெரிவு செய்யப்பட்டன.

அராலி மத்தியிலுள்ள ஊரத்திக் கிராம அபிவிருத்திக்கு 23 லட்சம் ரூபாவிற்கான திட்டமும்-

பொன்னாலையிலுள்ள கல்விளான் கிராம அபிவிருத்திக்கு 19 லட்சம் ரூபாவுக்கான திட்ட முன்மொழிவுகளும் அரசாங்க அதிபரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. (ம-175)

## தீர்ப்பாய் இடரை வேருடனே!

மண்ணில் மக்கள் துயர்தீர
வழிகள் பலவும் அமைவாக
எண்ணம் எல்லாம் நிறைவாக
சிவத்தில் நன்றாய்ப் பொருந்திடவே
வண்ணை நகரில் வீதியிலே
வலமாய் இவரும் காட்சிதனை
கண்டு தொழுதேன் வைத்தீஸா!
தீர்ப்பாய் இடரை வேருடனே.

- கவிஞர் சந்திரசிவம்.

(வண்ணை வைத்தீஸ்வரன் ஆலய பதினாறாம்நாள் திருவிழா இன்று)

# சீருடைத்துணி விநியோகம்

சண்டிலிப்பாய்,மார்ச்15

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் மானிப்பாய் ப.நோ.கூ.சங்கத்தினால் பாடசாலை மாணவர்களுக்கு சீருடைத்துணி வழங்கப்படவுள்ளது.

இன்று முற்பகல் 9மணிக்கு மானிப்பாய் இந்துக்கல்லூரியிலும், பிற்பகல் 2.மணிக்கு ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தியாலயத்திலும் நாளை முற்பகல் 9மணிக்கு சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியிலும் பிற்பகல் 2மணிக்கு சுதுமலை சிந்மயபாரதி வித்தியாலயத்திலும் சீருடைத்துணிகள் வழங்கப்படும். (ஒ-135)


## விடுதிக்காப்பாளர் பதவிக்கான வேலைவாய்ப்பு அறிவித்தல

நவஜீவனம் சிறுவர் பராமரிப்பு நிறுவனத்திற்கு விடுதிக்காப்பாளர் தேவை.

தேவையான தகைமைகள்.

- கல்வித் தகைமை:- க.பொ.த (உ/த) சித்தி
- வயதெல்லை:- 25 - 40 வருடங்கள் (ஆண்)
- சம்பளம்:- நேரில் பேசித் தீர்க்கப்படும்.

விண்ணப்பதாரி கிறீஸ்தவ மதத்தைச் சார்ந்தவராக இருத்தல் வேண்டும். *(றோ.க. உட்பட)*

உணவும் தங்குமிட வசதியும் இலவசமாக வழங்கப்படும். சுயவிவரத்துடன் கூடிய விண்ணப்பங்கள் 31.03.2003 இற்கு முன்னர் கீழ் வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

நிர்வாகி,

**நவஜீவனம்** தருமபுரம், பரந்தன்.

(சி-26930)



We Serve

## மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகம்

நடத்தும்

## இலவச மருத்துவ முகாம்

காலம் : 16.03.2003 (ஞாயிறு) காலை 8.00மணிமுதல்

இடம் : விக்ரோறியா கல்லூரி, சுழிபுரம்

இம்முகாமில் சேவையாற்றவிருக்கும் சிரேஷ்ட வைத்திய அதிகாரிகள்

லயன் வைத்திய கலாநிதி இராஜேந்திர பிரசாத் M.B.B.S.
லயன் வைத்திய கலாநிதி நவமலர் கனகரத்தினம் M.B.B.S.
லயன் வைத்திய கலாநிதி K.இரத்தினசிங்கம் M.B.B.S.

இம்முகாமில் பயன்பெறுவோருக்கு மருந்துகளும் இலவசமாக வழங்கப்படும். நீரிழிவுப் பரிசோதனையும் மேற்கொள்ளப்படும்.

*குறிப்பு :* சுழிபுரத்தையும் அதனை அண்டிய கிராமங்களிலும் வாழும் மக்களையும் பயன்பெறவேண்டுகின்றோம்.

லயன் எஸ்.சிவன்நேசன் கழகத் தலைவர். (சி-26936) லயன் எஸ்.எஸ்.தங்கராஜா சேவைத்திட்டத் தலைவர்.


# இரண்டாவது வருட நினைவஞ்சலி



மலர்வு 17 - 11 - 1937

உதிர்வு 06 - 03 - 2001

## கந்தவனம் தவராசா

*உரிமையாளர் இலட்சுமி மில், நெல்லியடி*

திதி: 15-03-2003

விண்ணகத்தில் இறைவனுடன் அமைதியாய் நீர்
மண்ணகத்தில் உம் பிரிவால் நித்தம் அழுகின்றோம் - நாம்
அனைவரையும் அரவணைக்கும் நல்லுள்ளம் உமக்கு
உமக்கு நிகர் பாரினிலே யாருமில்லை எமக்கு!

நித்தம் உம் பிரிவால் தவிக்கும்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்.

*முருகமூர்த்தி வீதி, நெல்லியடி, கரவெட்டி.* (சி-26938)

# 11ஆம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம் 10 - 05 - 1926

மறைவு 15 - 03 - 1992

## அமரர் காசிப்பிள்ளை சபாரத்தினம்

திதி: 15-03-2003

அன்போடும் பண்போடும் வாழ்ந்து
ஆதரவாய் அரவணைத்து எம்மை
வீட்டுப் பிரிந்து பதினோராண்டுகள்
சென்றாலும் - பப்பா!
உங்கள் நினைவுகளோடு வாழ்கின்றோம்.

*உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:*
அன்பு மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

*சுன்னாகம் தெற்கு, சுன்னாகம்.* (15524)

# நீர்நிலைகளை புனரமைக்க 'கெயர்' நடவடிக்கை

யாழ்ப்பாணம்,மார்ச்15

இந்தவருடம் குடாநாட்டிலுள்ள சில பகுதிகளில் உள்ள குளங்கள் மற்றும் விவசாயக் கிணறுகளைப் புனரமைப்பதற்கு 'கெயர்' நிறுவனம் திட்டமிட்டிருக்கின்றது.

'சீடா' அமைப்பின் நிதியுதவியுடன் முன்னெடுக்கப்படவுள்ள இப்புதிய திட்டத்துக்கு மாதகல் (ஜே/150), வட்டுக்கோட்டை (ஜே/157), பண்டத்தரிப்பு (ஜே/146), அச்செழு (ஜே/279), புத்தூர் (ஜே/278), கட்டுவன்புலம் (ஜே/239), பெரியவிளான் (ஜே/253), சிறுப்பிட்டி (ஜே/271) ஆகிய 8 கிராமங்கள் தெரிவுசெய்யப்பட்டிருக்கின்றன.

மேற்படி பகுதிகளிலுள்ள குளங்கள் மற்றும் விவசாயக் கிணறுகள், வெள்ளவாய்க்கால்கள் என்பவற்றைத் திருத்திப் புனரமைப்பதுடன் இப்பகுதிகளிலுள்ள விவசாயிகள் எதிர்நோக்கும் ஏனைய பிரச்சினைகளுக்கும் இயன்றவரையில் தீர்வினைப் பெற்றுக்கொடுப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும் என்று கெயர் நிறுவனத்தின் யாழ்.மாவட்ட இணைப்பாளர் திருமதி ஜோய் றோஸ் ஞானேஸ்வரன் தெரிவித்தார்.

எனினும் மேற்படி பகுதிகள் சிலவற்றில் குளங்கள் மற்றும் விவசாயக் கிணறுகளை அண்டிய பகுதிகளில் மிதிவெடி மற்றும் கண்ணிவெடிகளின் அபாயம் இருப்பதாகவும் -

இதனால் இப்புனரமைப்புப் பணிகள் சில இடங்களில் தடங்கல்கள் ஏற்படலாம் என்றும் - அவர் மேலும் தெரிவித்தார். (ஒ-4)

# கடிகாரம் கண்டெடுப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்15

யாழ். போதனா வைத்தியசாலையில் பெண்களுக்கான கைக்கடிகாரம் கண்டெடுக்கப்பட்டுள்ளது. தொலைத்தவர்கள் ஆதாரம் காட்டி காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளும்படி மருத்துவமனைப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (ஒ)

# பனைவடலிகள் வெட்டிச் சேதம்

வரணி,மார்ச்15

வடமராட்சி கிழக்கு, வல்லிபுரக் கோவிலில் இருந்து பொலிகண்டிப் பிரதேசம்வரை பருத்தித்துறை - மருதங்கேணி பிரதானவீதி இருமருங்கிலும் சுமார் 15வருடங்களுக்கு முன்பு பனை அபிவிருத்திச் சபையினால் நடப்பட்ட பனை வடலிகள் நாளாந்தம் ஓலைச்சார்பு வெட்டுவோரால் வெட்டி சேதமாக்கப்பட்டு வருவதனைக் காணக்கூடியதாகவுள்ளது. அத்துடன் சிறுவர்கள் இந்த வடலிகளை குருத்து எடுப்பதற்காக வெட்டி வருவதாகவும் கூறப்படுகிறது.

இதேவேளை -

நாவற்காடு புனைவேலி, கள்ளுத் தவறணை வேலி விசமிகளால் தீ மூட்டி எரிக்கப்பட்டுள்ளது. கொடிகாமம் பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான இத்தவறணை வேலி சுமார் ஆறு மாதங்களுக்கு முன்பும் வெட்டி சாய்க்கப்பட்டிருந்தது - பின்னர் அச்சங்கத்தினால் சீர் செய்யப்பட்ட அதேவேலியே மீண்டும் எரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-170)





முதன் முறையாக

தொழிற்சாலையின் 5 வருட உத்தரவாதம்

License No : 50445

BS No : 5412:1996
License No : KM41240

ஏக முகவர்கள்:
செண்ட் அந்தனீஸ் ஹாட்வெயார் (பிரைவேட்) லிமிட்டட்
516, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.
தொலைபேசி: 337286 (நேரடி), 324261-5, 337283-5
பெக்ஸ்: 446554

WATERTEC

முத்திரையை அவதானியுங்கள்

விநியோகஸ்தர்:
நாராயணா கட்டிடப்பொருட்கள் வர்த்தகர், 95/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

Access Graphics



## சாவகச்சேரி அருள்மிகு ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

அம்பிகை அடியார்களே!

மேற்படி ஆலய தேவஸ்தானம் பங்குனித் திங்கள் நான்கு கிழமையும் அதிகாலை முதல் நடைதிறந்திருக்கும். சித்திரைப் புதுவருடம் ஆகிய சுபானு வருடத்தன்றும் அதிகாலை 5.00மணிமுதல் அவ்வாறே திறந்திருக்கும்.

அடியார்களின் வசதியை முன்னிட்டு மருத்து நீரும் பெற்றுக்கொள்ள வசதி செய்யப்பட்டுள்ளது. திருப்பணி வேலைகளும் நடைபெறுகின்றன.

ப.மகாகணபதி சர்மா
தர்மகர்த்தா.

(15395)


# ஓராண்டு நினைவலைகள்



மலர்வு 18 - 08 - 1931

உதிர்வு 25 - 03 - 2002

## அமரர் வேலுப்பிள்ளை கந்தசாமி

திதி: 15-03-2003

அளவிலா அன்பு காட்டி
ஆனந்தமாய் நாம் வாழ
வழி சமைத்த எம் அன்புத் தெய்வமே!
உங்கள் நினைவு என்றும் மறையாது.

*"வையகத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் - வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்."*

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

*வீரபத்திர கோயிலடி, உடுப்பிட்டி.* (15438)

# முதலாம் ஆண்டு நினைவலைகள்



## செல்வி செல்வநிலா சுப்பிரமணியம்

மண்ணில் 01-01-1978

விண்ணில் 17-03-2002

மாதகலைப் பிறப்பிடமாகவும் 10ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பை தற்காலிக முகவரியாகவும் கொண்ட யா/பல்கலைக் கழக நுண்கலைப்பீட மாணவி அவர்களின் முதலாம் ஆண்டு நினைவையொட்டி 17.03.2003 திங்கட்கிழமையன்று புதுக்குடியிருப்பில் அவரது இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்தில் உற்றார், உறவினர், நண்பர்கள், ஆசிரியர்கள், மாணவமணிகள் அனைவரும் கலந்து சிறப்பிக்குமாறு வேண்டுகின்றோம்.

*10ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு.* (15453)

தகவல்:
குடும்பத்தினர்.

### உடதலவின்ன படுகொலை வழக்கு:

# சாட்சியத்தில் சதிராடிய சாட்சியை விளக்கமறியலில் வைக்க உத்தரவு!

## நீதிபதி எரிக் பஸநாயக்க விடுத்தார்

அநுருத்த ரத்வத்தைக்கு எதிரான வழக்கு விசாரணையின்போது பொய்ச் சாட்சியளித்த டபிள்யூ.எம்.ஜயசூரிய என்பவரை வழக்கு விசாரணை முடியும்வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி எரிக் பஸநாயக்க கடந்த புதனன்று உத்தரவிட்டார்.

உடதலவின்ன படுகொலைகள் விசாரணை கடந்த புதனன்று கொழும்பு மேல்நீதிமன்றத்தில் நடைபெற்றபோது ஊர்காவல் படையைச் சேர்ந்த டபிள்யூ.எம்.ஜயசூரிய என்பவர் தனது சாட்சியத்தில் முன்னுக்குப்பின் முரணாக சாட்சியமளிப்பதை அரச சட்டவாதி பிரதி சொலிசிட்டர் ஜெனரல் பாலித பெர்னாண்டோ சுட்டிக்காட்டியதையடுத்து நீதிபதி எரிக் பஸநாயக்க சாட்சியை இரண்டு தடவைகள் எச்சரிக்கை செய்தார்.

தேர்தல் தினத்தன்று தான் வாக்குச் சாவடியில் பாதுகாப்பு உத்தியோகத்தராகக் கடமையாற்றியபோது ஒரு ஜீப்பில் சிவில் உடையணிந்த சிலர் வந்தனர். அவர்களுடைய கையில் துப்பாக்கி இருக்கவில்லை என்று கடந்த புதனன்று சாட்சியத்தின்போது ஜயசூரிய கூறினார்.

அரச தரப்பில் ஆஜராகியிருந்த சொலிசிட்டர் ஜெனரல் பாலித பெர்னாண்டோ சாட்சியைக் குறுக்கிட்டு நீ இரகசியப் பொலிஸாருக்கு அளித்த வாக்குமூலத்தில் தேர்தல் தினத்தன்று குறிப்பிட்ட வாக்குச்சாவடிக்கு ஆறு, ஏழு வாகனங்களில் சீருடை அணிந்தவர்கள் துப்பாக்கிகளுடன் வந்ததாக அல்லவா கூறியிருக்கிறீர்? இதில் எது உண்மை? எது பொய்? என சாட்சியிடம் கேட்டார். இரகசிய பொலிஸாருக்கு கொடுத்த வாக்குமூலம் உண்மையெனப் பதிலளித்தார் சாட்சி.

இத்தருணத்தில் நீதிபதி சாட்சியைப் பார்த்து, "நீ திட்டமிட்டுப் பொய் சொல்லுகின்றீரா?" எனக் கேட்டார். தனக்கு ஞாபகம் இல்லையெனப் பதிலளித்தார் சாட்சி.

இதனையடுத்து, சாட்சியை விசாரணை முடியும்வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

இதேவேளை -

உடதலவின்ன வழக்கு விசாரணையில் சாட்சியமளிப்பவர்களுக்கு கொலை அச்சுறுத்தல் இருப்பதாக தெரியவந்துள்ளதால் இதுகுறித்துப் பூரண விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு 'ட்ரயல் அட்பார்' நீதிபதிகள் குழு பொலிஸ்மா அதிபருக்கு உத்தரவிட்டுள்ளது. (ஓ)

### ஆசிரியர் இடமாற்றங்களில் முறைகேடு:

# அமைச்சின் செயலாளருக்கு வழங்கிய அதிகாரம் அரசமைப்புக்கு முரணானது!

## தொழிற்சங்கச் செயலாளர் குற்றச்சாட்டு

கொழும்பு,மார்ச்15

ஆசிரியர்களை இடமாற்றம் செய்யும் அதிகாரத்தை கல்வி அமைச்சின் செயலாளருக்கு வழங்கும் அரச சேவை ஆணைக்குழுவின் தீர்மானம் அரசமைப்பின் 55(4) பிரிவை மீறுவதாயுள்ளதாக ஆசிரிய தொழிற்சங்கச் செயலாளர் வசந்த தர்மசிறி, அரச சேவை ஆணைக்குழுச் செயலாளரின் கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளார்.

கடந்த மாதம் 21ஆம் திகதியிடப்பட்ட ஈ/2/83/2/IV/பிஎஸ் இலக்கம் கொண்ட கடிதத்தின் பிரகாரம் குறிப்பிட்ட அதிகாரம் கல்வி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. இதனையடுத்து இதுவரையில் அரசியல்வாதிகள் மற்றும் நெருங்கியவர்களது விருப்பத்தின்பேரில் தேசிய பாடசாலைகளைச் சேர்ந்த ஐம்பது வரையிலான ஆசிரியர்களுக்கு இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளன. ஆனால், இந்த இடமாற்றங்கள் அரசமைப்பு விதிகளின்படி இடமாற்றல் சபையொன்றினால் தீர்மானிக்கப்படவில்லை எனவும் அச்சங்கத்தின் செயலாளர் கூறியுள்ளார்.

ஆசிரியர் இடமாற்றத்தின் போது கடைப்பிடிக்கப்படவேண்டிய நடைமுறைகள் தொடர்பாக அமைச்சரவை தெளிவான தீர்மானத்தை மேற்கொண்டுள்ள போதிலும் அத்தீர்மானத்தின்படி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டிய அமைச்சின் செயலாளர் நடவடிக்கை எடுக்கவில்லை. பதிலாக அரசசேவை ஆணைக்குழு வழங்கியுள்ள இந்த அதிகாரம் காரணமாக அமைச்சரவையின் தீர்மானமே செல்லாக் காசாகிவிட்டது எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஓ)

# ஊடகம், உள்நாட்டுப் பாதுகாப்பு அமைச்சுகள் ஜனாதிபதியிடம்?

கொழும்பு,மார்ச்15

ஊடகத்துறை மற்றும் உள்நாட்டு பாதுகாப்பு அமைச்சுக்களை உடனடியாக ஜனாதிபதியின் பொறுப்பில் கொண்டுவருவதற்கான திட்டம் தீட்டப்பட்டுள்ளதாக கொழும்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஊடகத்துறை, உள்நாட்டு பாதுகாப்புத்துறை ஆகிய இரு அமைச்சுகளையும் ஜனாதிபதியின் கீழ் கொண்டுவந்த பின்னர் அந்த அமைச்சுகளுக்கு நியமிக்கப்படவுள்ள அதிகாரிகள் ஏற்கனவே தெரிவுசெய்யப்பட்டுள்ளனர் என பொ.ஐ. முன்னணியின் குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டி.பி.ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

அரசமைப்பில் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தியே இந்த இரு அமைச்சுக்களையும் ஜனாதிபதி பொறுப்பேற்கவுள்ளார் என அவர் தெரிவித்தார்.

உள்நாட்டு பாதுகாப்பு அமைச்சின் கீழ்வரும் பொலிஸ் திணைக்களத்தைச் சேர்ந்த ஒரு சில பொலஸ அதிகாரிகளைப் பயன்படுத்தி அரசு பொ.ஐ.முன்னணியினைத் துன்புறுத்துவதாகவும் -

செய்திஊடகங்கள் இச்செய்திகளை வெளியிடுவதில்லை எனவும் -

இவ்விடயம் ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதையடுத்தே ஜனாதிபதி இந்தத் தீர்மானத்திற்கு வந்துள்ளார் எனவும் -

ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

# காணாமற்போனோர் தொடர்பாக மீண்டும் விசாரணைக்கு அழைப்பு

வடபகுதியில் கடந்த 1996 ஆம் ஆண்டு காலப்பகுதியில் படையினரால் கைதுசெய்யப்பட்டுக் காணாமற்போனோர் பற்றிய விசாரணைகள் மீண்டும் எதிர்வரும் 29ஆம் திகதி முதல் 3 நாள்கள் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளன.

இந்த விசாரணைகளை மேற்கொள்வதற்கென மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட யாழ் மாவட்ட முன்னாள் அரச அதிபர் தேவநேசன் நேசையா தலைமையிலான குழுவே விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளது.

விசாரணைகள் எதிர்வரும் 29ஆம், 30 ஆம் திகதிகளில் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ் அலுவலகத்திலும் -

31ஆம் திகதி உடுவில் பிரதேச செயலக மண்டபத்திலும் இடம்பெறவுள்ளன.

கடந்த ஜனவரி மாதமும், இம் மாதம் 2ஆம, 3ஆம் திகதிகளிலும் இக்குழு தனது விசாரணைகளை இங்கு மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (எ-10-5)

# மரவேலைப் பயிற்சிக்கு விண்ணப்பங்கள் அனுப்பலாம்

யாழ்ப்பாண பிரதேச செயலகத்தின் கீழ் இயங்கும் அரச இயந்திர சாதன மரவேலைப் பயிற்சிப் பாடசாலைக்குப் பயிற்சியாளர்களைச் சேர்ப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக யாழ்.பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

14 வயதுக்கும் 30 வயதுக்கும் இடைப்பட்ட 8ஆம் ஆண்டு சித்தியெய்திய ஆண்,பெண் இருபாலாரும் இப் பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம்.

எந்தப் பிரதேச செயலகப் பிரிவில் உள்ளோரும் இப்பயிற்சிக்கு சேர்த்துக்கொள்ளப்படுவர். பயிற்சிக் காலத்தில் ஆறு மாதங்களுக்கு ஊக்குவிப்புப் பணமாகத் தொழில்துறைத் திணைக்களத்தினால் நாள் ஒன்றிற்கு ரூபா 30 மற்றும் உணவு செய்யும் கூலியில் 80வீத லாபப் பணமும் வழங்கப்படும். ஒருவருட பயிற்சியின் முடிவில் தொழில்துறைத் திணைக்களத்தால் பரீட்சை நடத்தப்பட்டு சான்றிதழ் வழங்கப்படும். விண்ணப்பங்கள் வந்து சேரவேண்டிய இறுதிநாள் எதிர்வரும் 25ஆம் திகதியாகும்.

விண்ணப்பங்களை பிரதேச செயலாளர், பிரதேச செயலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு காகித உறையின் இடதுபக்க மேல் மூலையில் மரவேலைப் பயிற்சி நெறி 2003 எனக் குறிப்பிட்டு விண்ணப்பப் படிவத்தினை சுயமாகத் தயாரித்து அனுப்பவும் - என்று யாழ்.பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (ஓ)

# யாழ். வைத்தியசாலைக்கு மேலும் ஒரு கண் மருத்துவர்

யாழ்ப்பாணம்,மார்ச்15

யாழ்போதனா வைத்தியசாலைக்கு மேலும் ஒரு கண் சிகிச்சை நிபுணர் நியமிக்கப்பட்டுள்ளார்.

நீண்டகாலமாக யாழ். ஆஸ்பத்திரியில் மருத்துவ நிபுணர் டாக்டர் ஸ்குகதாசன் மட்டுமே கண்சிகிச்சை நிபுணராக சேவையாற்றி வந்தார். தற்போது கண் சிகிச்சை நிபுணர் டாக்டர் வி.சிவந்தா என்பவரும் கடந்த புதன்கிழமை முதல் சேவையாற்றி வருகிறார்.

இதேவேளை, நீண்டகாலமாக யாழ். மருத்துவமனையில் வெற்றிடமாக இருந்துவந்த கதிரியக்க நிபுணர் பணிக்கும் அடுத்த வாரமளவில் கொழும்பு புற்றுநோய் வைத்தியசாலையில் பணியாற்றிய ஒருவர் நியமிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ஓ-15-139)

### குடாநாட்டுச் சந்தைகளில்

# பொருள்களின் விலை, எடை என்பவற்றை விவசாயிகளே நிர்ணயிக்க வேண்டும்!

## விவசாயச் சங்கக் கூட்டத்தில் வலியுறுத்து

வலிகாமம் தெற்கு,மார்ச்15

"குடாநாட்டிலுள்ள சந்தைகளில் பொருள்களின் விலைகளை நிர்ணயிப்பதும் எடைகளில் கழிவுகளை நிர்ணயிப்பதும் விவசாயிகளாகவே இருக்கவேண்டும். அவற்றை நிர்ணயிப்பவர்களாக இடைத் தரகர்களோ, சந்தைக் குத்தகையாளர்களோ இருக்கக் கூடாது."

உடுவில் கமநல சேவை நிலையத்தில் நடைபெற்ற கமநல சேவை நிலையத்துக்குட்பட்ட விவசாய சங்கங்களின் கூட்டத்தில் பல விவசாயிகள் இதனை வலியுறுத்திக் கூறினர்.

மேற்படி சங்கங்களின் சமாசத் தலைவர் செ.இலகுநாதன் இக்கூட்டத்துக்கு தலைமை வகித்தார்.

இக்கூட்டத்தில் உள்ளூர் சந்தைகளில் விவசாயிகள் எதிர்நோக்கியுள்ள பல பிரச்சினைகள் முன்வைக்கப்பட்டு ஆராயப்பட்டன.

சந்தைகளுக்குத் தமது உற்பத்திப் பொருள்களை விற்பனைக்காக எடுத்துவரும்போது தாம் கொண்டுவரும் ஒவ்வொரு பொருளுக்கும் நிர்ணயிக்கப்பட்ட விலை எவ்வளவு என்பதை ஒவ்வொரு விவசாயியும் அறிந்துகொள்ளக்கூடியதாக இருக்க வேண்டும்.

சந்தையில் செயற்பட்டுவரும் இடைத்தரகர்கள் தாம் நினைத்தவாறு பொருள்களுக்கான விலைகளைத் தீர்மானிப்பது, நல்ல பொருள்களாக இருந்தும்கூட அவற்றில் எடைக் கழிவாக அதிக நிறையைக் குறைப்பது போன்ற செயற்பாடுகள் விவசாயிகளைப் பெரிதும் பாதிக்கின்றன.

ஆகவே, சந்தைகளில் இருந்து இடைத்தரகர்களை நீக்கவேண்டும். அல்லது சந்தையில் விவசாயிகள் தமது பொருள்களுக்கான விலைகளை நிர்ணயித்து விற்பதற்குத் தேவையான தனியான ஓர் இடம் ஒதுக்கிக் கொடுக்கப்படவேண்டும். இடைத்தரகர்கள் இல்லையானால் எமது மக்களுக்குக் குறைந்த விலையில் பொருள்கள் கிடைக்கச் செய்ய முடியும். இவ்வாறு கூட்டத்தில் சுட்டிக் காட்டப்பட்டது. பொருள்களை சந்தைப் படுத்துவது பற்றியும் கூட்டத்தில் விமர்சிக்கப்பட்டது.

விவசாயிகள் தாம் உற்பத்தி செய்யும் பொருள்களை உரியமுறையில் சந்தைப்படுத்த முடியாமையால் பெரும் நஷ்டம் அடைவதாகத் தெரிவித்தனர்.

குறிப்பாக இவ்வருடம் விளைந்த நெல்லை உரியமுறையில் சந்தைப் படுத்த முடியாமல் இருப்பதால் உற்பத்திச் செலவைவிட குறைந்த விலைக்கே விற்கக்கூடியதாக உள்ளது என அவர்கள் எடுத்துக் கூறினர்.

மேலும் கட்டாக்காலி கால்நடைகளின் தொல்லை அதிகரித்துள்ளதாகவும் சுட்டிக்காட்டினர். கட்டாக்காலி கால்நடைகளை கட்டுப்படுத்தும் விதத்தில் செயற்படும் விவசாய சங்க உறுப்பினர்கள் அடாவடித்தனம் செய்வோரால் அச்சுறுத்தப்படுவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

தமது இக்குறைபாடுகள் நீங்க விவசாய சங்கங்களின் சம்மேளனம் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர். (ஓ-152)



சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் மொத்த விற்பனை நிலையம் அண்மையில் சங்கத் தலைவர் கு.ந.பாலச் சந்திரனால் திறந்து வைக்கப்பட்டபோது எடுக்கப்பட்டபடம். சங்க பொதுமுகாமையாளர் சி.தேவகுமாரன் மற்றும் சங்க இயக்குநர் சபை உறுப்பினர்கள், பொதுச்சபை உறுப்பினர்கள், கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர் ஆகியோரும் படத்தில் உள்ளனர் (ஓ-117)

## முன்பள்ளி மாணவரிடையில் காரைநகரில் போட்டிகள்

காரைநகர்,மார்ச்15

காரைநகர் வாரிவளவு நல்லியக்கச் சபை முன்பள்ளி மாணவர்களிடையே மாதாந்தம் நடத்தும் கல்வி ஊக்குவிப்பு போட்டித் தொடரில் மார்ச் மாதத்துக்கான போட்டிகள் இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளன.

வாரிவளவு நல்லியக்கச் சபை மண்டபத்தில் காலை 9 மணி தொடக்கம் நடைபெறும் இப்போட்டிகளில் காரைநகரில் உள்ள முன்பள்ளி மாணவர்கள் பங்குபற்றவுள்ளனர்.

இதேவேளை - காரைநகர் பகுதியில் உள்ள முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கற்பித்தல் தொடர்பான கருத்தரங்கு அன்று முற்பகல் 10 மணிக்கு நல்லியக்கச் சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் திருமதி புஸ்பரத்தினம் கருத்துரை வழங்கவுள்ளதாக நல்லியக்கச் சபை செயலாளர் ச.பத்மநாதன் அறிவித்துள்ளார். (எ-73)

### யாழ்.மாவட்டத்தில்

# கணவனை இழந்த பெண்களின் எண்ணிக்கை 25 ஆயிரத்து 773

யாழ்ப்பாணம்,மார்ச்15

யாழ்.மாவட்டத்தில் உள்ள 15 பிரதேச செயலர் பிரிவுகளிலும் மொத்தமாக 25 ஆயிரத்து 773 பெண்கள் கணவனை இழந்துள்ளதாக செயலகப் பதிவுகளில் இருந்து தெரிய வருகிறது.

இந்த எண்ணிக்கையில் 3 ஆயிரத்து 368 பெண்கள் தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவில் உள்ளனர். கணவனை இழந்தவர்களில் 16வயதிற்கு உட்பட்ட 9பேரும் 17 வயது முதல் 30வயதிற்குட்பட்ட 937பேரும், 31வயது முதல் 50 வயதுக்கு உட்பட்ட 7 ஆயிரத்து 989 பேரும், 50 வயதுக்கு மேற்பட்ட 16 ஆயிரத்து 838 பேரும் உள்ளனர்.

பிரதேச செயலர் பிரிவுகள் ரீதியாக கணவனை இழந்த பெண்களின் எண்ணிக்கை வருமாறு:

நெடுந்தீவு - 187, வேலணை - 554, ஊர்காவற்றுறை - 487, யாழ்ப்பாணம் - ஆயிரத்து 910, நல்லூர் - 2ஆயிரத்து 571, சண்டிலிப்பாய் - ஆயிரத்து 753, சங்கானை - ஆயிரத்து 924, உடுவில் - ஆயிரத்து 554, தெல்லிப்பழை - 852, கோப்பாய் - ஆயிரத்து 893, தென்மராட்சி - 3ஆயிரத்து 368, கரவெட்டி - ஆயிரத்து 836, மருதங்கேணி - 306, பளை -290. (ஓ-10)

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள FORD ESCART கார், LML ஸ்கூட்டர் சகல ஆவணங்களுடன் விற்பனைக்குண்டு. (கார் மோட்டார் சைக்கிளுக்கு மாற்றிக் கொடுக்கப்படும்) தொடர்பு: இல.36, வைமன் வீதி, யாழ்ப்பாணம். (15579)

சிங்கப்பூரில் இருந்து தருவிக்கப்பட்ட Made in Japan Sony 2020, 2182, 2102, 1902, 1400 National T.V.க்கள் Sony National FH7, FH10, றேடியோக்கள், வீடியோ டெக் வகைகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: 142, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.(15551)

நல்ல நிலையிலுள்ள பஜாஜ் ஸ்கூட்டா விற்பனைக்குண்டு. தொடர்பு: 162, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (15572)

நிறைகூடிய புறொயிலர் தினமும் சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம். புறொயிலர் மொத்தமாகவும் விற்பனை செய்யப்படும். வியாபாரிகளுக்கு விசேட கழிவுகள் வழங்கப்படும். தொடர்பு: 21/61, இராமநாதன் வீதி, கலட்டி (மிலேனியம் பாருக்கு முன்பாக). (15562)

Prima, Broiler மற்றும் இறைச்சிக்கோழிகள் சுகாதார முறைப்படி சுத்தம் செய்து உங்களுக்குத் தேவையான நிறைகளில் நியாயமான விலையில் தினமும் பெற்றுக்கொள்ளலாம். (Electronic நிறுவை) 19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்றர் வளவு), முத்திரைச் சந்தையடி, நல்லூர். (15588)

புறொயிலர் இறைச்சிக்கோழி விற்பனைக்குண்டு. 1Kg 140/- சுத்தம் செய்து வேண்டிய நிறையில் பெற்றுக்கொள்ளலாம். வியாபாரிகளுக்கு கழிவு வழங்கப்படும். தொடர்பு: றாஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி. T.P. 3529. (15573)

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் விற்பனைக்குண்டு. 1Kg க்கு20/- விலை குறைக்கப்பட்டுள்ளது. வேண்டிய நிறைகளில் சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: சிவா, இராமலிங்கம் வீதி, முடமாவடி, திருநெல்வேலி கிழக்கு. (15598)

கல்பேட் புறொயிலர் (1Kg 140/-) விற்பனைக்குண்டு. சுத்தம் செய்தல் இலவசம். தொடர்பு: மாண்ஸ் பாடசாலை வீதி, டச்றோட், உடுவில். (15591)

### நாய்க்குட்டிகள விற்பனை

காவலுக்குரிய Great Dane X Dobermann Pincher நாய்க்குட்டிகள விற்பனைக்குண்டு. 19, முருகேசர் ஒழுங்கை, (நல்லூர் வீடியோ சென்றர் வளவு) முத்திரைச் சந்தையடி, நல்லூர். (15589)

### மணமகள் தேவை

1968, சதயம், செவ்வாய் பாவமற்ற, படித்த, U.K. இல் வதிவுடமை பெற்ற, யாழ்.வந்துள்ள மணமகனுக்கு படித்த, அழகான மணப்பெண் தேவை. தொடர்பு: துரை விமலா, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். (15574)

யாழ்இந்து கௌரவ குடும்பத்தைச சேர்ந்த, செவ்வாய் இலக்கினத்திலுள்ள, வயது 33, நல்லழகும், நற்குணமும் பொருந்திய பட்டதாரி ஆசிரியையான தமது ஏக புத்திரிக்கு பெற்றோர் கிரகபாவம் 70ற்கு குறையாத அரச சேவையிலுள்ள அல்லது நிரந்தர வருமானமுடைய படித்த மணமகனைத் தேடுகின்றனர். ஜாதகத்துடன் தொடர்பு கொள்ளவும். தொடர்பு: C/o வி.இ. 1820, உதயன். (15561)

### கடை வாடகைக்கு

நல்லூர்ப் பகுதியில் சிறிய கடை ஒன்று வாடகைக்குண்டு. தொடர்பு: 284, நாவலர் வீதி, இராசாவின் தோட்டச் சந்தி, யாழ்ப்பாணம். T.P. 0777-273620 (பிற்பகல் 6 மணியளவில் தொடர்புகொள்ளவும்.) (15585)

### தவறிவிட்டது

13-03-2003 அன்று காலை வதிரிக்கும் புத்தூருக்கும் இடையில் கைச் சங்கிலியொன்று தவறிவிட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கிராம அலுவலர் மு.வேதாபரணத்துடன தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். மு.வேதாபரணம், T.P 2263340. (சி-26939)

பரமானந்தன் மலர்விழி, பரமானந்தன் வசந்தினி என்பவர்களுடைய தே.அ.அ.(இல.665781046V), வி.அ.அ., வங்கிப் புத்தகங்கள் 12-03-2003 அன்று முகமாலை பஸ்ஸில் பேர்ஸுடன் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தொடர்பு: K.நித்தியானந்தன் (G.S), அம்மன் வீதி, திருநெல்வேலி. (15559)

### தென்மராட்சியில் சைக்கிள் இலக்கத்தகடு விநியோகம்

சாவகச்சேரி பிரதேச சபையின் கச்சாய், மிருசுவில், வரணி, சரசாலை, கைதடி, நாவற்குழி ஆகிய உப அலுவலகங்களில் இவ்வருடத்திற்கான சைக்கிள் இலக்கத் தகடுகள் விநியோகிக்கப்படுவதாக பிரதேச சபை செயலாளர் கு.ந.பாலச்சந்திரன் அறிவித்துள்ளார். (எ-117)

### விஞ்ஞான வினாவிடைப் போட்டி

யாழ்.கல்வி வலயத்தைச் சேர்ந்த வகை II பாடசாலைகளில் தரம் 2இல கற்கும் மாணவர்களிடையே இலங்கை விஞ்ஞான முன்னேற்றச் சங்கத்தினால நடத்தப்படவுள்ள விஞ்ஞான வினாவிடை மற்றும் பேச்சுப் போட்டிகள் இன்று சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு கொக்குவில் இந்துக்கல்லூரியில் நடைபெறும் என யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் அறிவித்துள்ளார். (ஐ-6)

### தேவை

எமது ஸ்தாபனத்துக்கு
அனுபவமுள்ள
வெல்டர் லேத்மன்
உடன் தேவை.

**சிவம் இரும்புத் தொழிலகம்**
370, மணிக்கூட்டு வீதி,
*(வெலிங்டன் சந்தி அருகில்)*
(15599) யாழ்ப்பாணம்.

### தேவை

கொம்பியூட்டர்
ரைப்செற்றிங் தெரிந்த
பக்க வடிவமைப்பாளர்கள்
(பெண்பிள்ளைகள்)
தேவை.

தொடர்பு:
**திருவள்ளுவர் அச்சகம்**
593, பருத்தித்துறை வீதி,
*(யாழ்.மாநகரசபை அருகில்)*
நல்லூர்,
(15590) யாழ்ப்பாணம்.


## நீங்கள் இன்னும் வாசிக்கவில்லையா?

திருமதி அடேல் பாலசிங்கம் எழுதிய

# சுதந்திர வேட்கை

தமிழீழ விடுதலைப் போராட்டம் தொடர்பான ரசமான பல சம்பவங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

உதாரணத்திற்கு இதோ:-

பலமணிநேரம் கழிய காயத்தோடு வந்த பலரோடு அல்லாடி முடிய, உடைந்த உடலங்களையும் பழுதுபார்த்துச் செப்பனிட்டு முடிய, காயக்காரர் படுக்கைப் பிரிவுக்கு உயிரோடு போராட அனுப்பி வைக்கப்பட்டு முடிய, அறுவைச் சிகிச்சைக் கூடத்தை துப்புரவாக்கும் பணியே மீதமிருந்தது. அசுர பணி நடந்த அந்த அறையை பார்த்துக் கொண்டிருந்தேன். வழுவழுப்பான வெள்ளைத் தரையில் வளைந்து நெளிந்து செல்லும் சிவப்பு இரத்த சிற்றோடைகள். குப்பைச் சாக்குகள் மனித உடலுறுப்புக்களால் நிரம்பியிருந்தன. அவற்றிலிருந்து கையும் காலும் நீட்டிக்கொண்டிருந்தன. பார்ப்பவர்களுக்கு முதுகெலும்பின் ஊடாக ஒரு நடுக்கம் ஏற்படும் நிலை! வாளிகளில் இரத்தம் ஊறிய பஞ்சுப் பொதிகள். எண்ணற்ற அறுவைச்சிகிச்சைகள் நடந்ததற்கு சாட்சியாகக் கிடந்தன. கை கழுவும் நீர்க்கிண்ணங்களில் நீர் சிவப்பாக இருந்தது. பயன்படுத்தப்பட்ட கையுறைகள், அடுத்த ஆட்டத்துக்காக உலர்த்தி வைத்த நிலையில் இருந்தன.

*இதே போல் இன்னும் பல சம்பவங்கள்*
*இனியும் தாமதிக்காதீர்கள்*

உதயன் பத்திரிகை முகவர்களிடமும்,
பிரபல புத்தக நிலையங்களிலும்
பெற்றுக்கொள்ளலாம்.

**பக்கங்கள்: 479** **விலை 500/-**



வடமராட்சி மண்ணில் கிடைக்கவில்லையே என்று ஏங்கிக் கொண்டிருந்த
யாழ்.போதனா வைத்தியசாலை பிரபல வைத்திய நிபுணர்களின்
வைத்திய ஆலோசனைகளும் சேவைகளும்.

மீண்டும்

# K.K.S. கிளினிக்

வைத்திய ஆலோசனைக்காக வீண் அலைச்சல் படாமல் உங்கள் ஊரிலேயே சுலபமாக வைத்திய ஆலோசனை பெற்று நோயற்ற வாழ்வு வாழ்வதற்காக எமது நிறுவனம் மீண்டும் மங்களகரமாக ஆரம்பிக்கப்படுகிறது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.

**காலம்: இன்று (15-03-2003) சனிக்கிழமை**

மீண்டும் ஆரம்பித்து வைப்பவர்;
ENT சத்திர சிகிச்சை நிபுணர் - யாழ்.போதனா வைத்தியசாலை
**DR.S. சிவசுப்பிரமணியம்**

எமது நிலையத்தில் வழங்கப்படும் வைத்திய ஆலோசனைகள்

*01. கண் வைத்திய ஆலோசனையும் சத்திர சிகிச்சையும்*
*02. காது, மூக்கு, தொண்டை வைத்திய ஆலோசனையும் சத்திர சிகிச்சையும்*
*03. மகப்பேற்று வைத்திய ஆலோசனை*
*04. பெண்ணியல் வைத்திய ஆலோசனையும் சத்திர சிகிச்சையும்*
*05. பொது வைத்திய ஆலோசனைகள்*
*06. சத்திரசிகிச்சை வைத்திய ஆலோசனையும், சத்திரசிகிச்சையும்*

இவை யாவற்றையும் சிறப்புற வழங்குபவர்கள்:
**யாழ். போதனா வைத்தியசாலை பிரபல வைத்திய நிபுணர்கள்.**

குறிப்பு: உங்கள் நன்மைக்காக உடனடியாக 15-03-2003 சனிக்கிழமை முற்பதிவு இல்லாமல்
☆ *கண் வைத்திய ஆலோசனை.*
☆ *ENT வைத்திய ஆலோசனை.*

(15580)

**K.K.S. கிளினிக்**
(மந்திகை ஆதார வைத்தியசாலை - கந்த முருகேசனார் சிலை அருகில்)
**மந்திகை.**

# அரசு ஆயுதங்களை இறக்குமதி செய்தால் நாமும் அதைச் செய்வது தவிர்க்கமுடியாதது

## அப்போதுதான் இராணுவ சமநிலையை பேணமுடியும் என்கிறார் பாலா



கிளிநெச்சி,மார்ச்15

ஸ்ரீலங்கா அரசு தன் படைகளுக்குத் தேவையான ஆயுதங்களை இறக்குமதி செய்தால், நாங்களும் ஆயுதங்களைக் கொண்டு வருவது தவிர்க்கமுடியாதது. அப்போதுதான் இராணுவ சமநிலை பேணப்படும் என்று விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார்.

கிளிநொச்சி நடுவப்பணியகத்தில் நேற்றுமுன்தினம் பிற்பகல் நடந்த செய்தியாளர் சந்திப்பில் அவர் இப்படிக் கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

ஸ்ரீலங்கா அரசு ஆயுதங்களை இறக்குமதி செய்து தங்களது இராணுவத்தைப் பலப்படுத்துவதென்பது, இராணுவ சமநிலையைப் பேணும் கோட்பாட்டுக்கு முரணான ஒரு விடயம்.

ஆயுதங்களைக் கொண்டுவருதை முதலில் அவர்கள் நிறுத்தவேண்டும். விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கொண்டுவருவதற்கோ, ஆயுதக் கப்பலைக் கொண்டுவருவதற்கோ போர் நிறுத்த ஒப்பந்தத்தில் தடை ஏதும் இல்லை. ஆகவே, இந்தப் பிரச்சினை குறித்து இரு தரப்பும் விரிவாகக் கதைக்கவேண்டியுள்ளது.

ஸ்ரீலங்கா அரசு ஆயுதங்களை இறக்குமதி செய்தால் நாங்களும் ஆயுதங்களைக் கொண்டுவருவதைத் தவிர்க்கமுடியாது. அப்போதுதான் இராணுவ சமநிலையை எங்களால் பேணமுடியும்.

ஆயுதத்தை நாம் கொண்டுவருவதை நிறுத்தவேண்டுமாயின், ஆயுதங்களை இறக்குமதி செய்வதை அரசு முதலில் நிறுத்தவேண்டும். பாதுகாப்பு செலவீனங்களை முற்றாகக் குறைக்கவேண்டும்; ஆயுத இறக்குமதி செய்வதை நிறுத்தவேண்டும். அப்படி நிறுத்தாத பட்சத்தில், எம்மீது அப்படியான கட்டுப்பாடுகளைத் திணிக்கமுடியாது.

யுத்த நிறுத்த உடன்படிக்கையின்படி இரு தரப்பும் இராணுவச் சமநிலையைப் பேணவேண்டும்.

இல்லாவிட்டால் போர்நிறுத்தம் நிலைத்துநிற்பது சாத்தியம் அற்றது.

போர்நிறுத்த உடன்பாட்டில் கடல் நடமாட்டம் குறித்து தெளிவான வரைவிலக்கணங்கள், விதிமுறைகள் இல்லை. இது ஒரு பெரிய குறைபாடாக கடந்த ஒரு வருட காலமாக நீடிக்கிறது. இந்தக் குறைபாட்டைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி, இலங்கை கடற்படை புலிகள். மீது சில கட்டுப்பாடுகளைக் கொண்டுவர முயற்சி செய்கின்றது.

எந்தக் காரணத்தைக் கொண்டும் நாம் மீண்டும் போரை ஆரம்பிக்கப் போவதில்லை. போர்நிறுத்த உடன்பாட்டை இறுக்கமாகப் பேணுவோம்; அமைதியைப் பேணுவோம். இதை எமது மக்களுக்கு உறுதியாக, தெளிவாகக் கூறிவைக்க விரும்புகின்றோம். இது குறித்து மக்கள் அச்சம் அடையத் தேவையில்லை.

போராளிகளை வன்னிக்கு அழைத்ததையிட்டு மக்கள் அச்சம் கொள்ளத்தேவையில்லை. ஒரு பகுதியினர் மட்டுமே அழைக்கப்பட்டனர். எமது பொறுப்பாளர்கள் அங்கு தொடர்ந்து இருக்கிறார்கள் - என்றார் அவர். (ம-3)

## நீதிவான் இல்லம் மீது கைக்குண்டுத் தாக்குதல்!

கொழும்பு,மார்ச்15

கெஸ்பாவ நீதிவான் முனிதாஸ நாணயக்காரவின் உத்தியோகபூர்வ இல்லம் மீது கடந்த புதன்கிழமை அதிகாலை கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இத்தாக்குதல் நடத்தப்பட்ட பொழுது நீதிவான் இல்லத்தில் இருந்தார் எனவும், தாக்குதலால் வீட்டிலிருந்த எவருக்கும் காயங்கள் ஏற்படவில்லை எனவும் பிலியந்தல பொலீஸார் தெரிவித்தனர்.

கைக்குண்டுத் தாக்குதலில் வீட்டின் ஜன்னல் கண்ணாடிகள் நொருங்கின எனவும் பொலீஸார் தெரிவித்தனர். சம்பவம் குறித்து விசாரணைகள் நடைபெறுகின்றன. (ஐ)

## தென்மராட்சி கல்வி வலயத்துக்கு விரைவில் நிரந்தர கட்டடம்

தென்மராட்சி,மார்ச்15

தென்மராட்சிக் கல்வி வலயத்திற்கு நிரந்தர கட்டடம் அமைப்பதற்கு கல்வித் திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

சாவகச்சேரி செருக்கல் பிள்ளையார் ஆலயத்திற்கு அண்மையில் உள்ள காணி ஒன்றில் இக்கட்டடம் அமைக்கப்பட வுள்ளது.

தென்மராட்சி கல்வி வலயம் நிரந்தரக் கட்டடமில்லாததால் இது வரை காலமும் தற்காலிகமாக தனியார் வீடுகளில் இயங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-117)

# எதிர்பார்த்தவாறு சகாக்களின் சடலங்களை மலக்குழியில் தேடியபோது காணவில்லை!

## மிருசுவில் படுகொலை வழக்கில் சாட்சி தெரிவிப்பு

எனது சகாக்களின் சடலங்கள் மலசலகூட குழியில்தான் இருக்கும் என்று எண்ணி கொங்கிறீட் பிளாட்டை திறந்து பார்த்தேன். ஆனால், நான் எதிர்பார்த்தவாறு அங்கு எதுவும் இருக்கவில்லை.

- இவ்வாறு மிருசுவில் படுகொலைகள் சம்பந்தமான வழக்கு விசாரணையின்போது கடந்த புதனன்று கொழும்பு மேல் நீதிமன்றில் சாட்சியமளித்த பொன்னுத்துரை மகேஸ்வரன் கூறினார்.

அன்றைய விசாரணையின்போது எதிர்த் தரப்புச் சட்டத்தரணி அனில் சில்வா, சாட்சியை குறுக்கு விசாரணை செய்தார்.

*கேள்வி:-* 2000ஆம் ஆண்டு டிசெம்பர் 19ஆம் திகதி சம்பவம் நடைபெற்றபின் எத்தனை மணிக்கு உமது சின்னம்மாவின் வீட்டுக்கு நீர் வந்தீர்?

*பதில்:-* மாலை 6.45 மணியளவில்.

*கேள்வி:-* டிசெம்பர் 23ஆம் திகதி நீர் இராணுவப் பொலீஸாருக்கு வாக்குமூலம் கொடுத்தீரா?

*பதில்:-* ஆம்.

*கேள்வி:-* அந்த வாக்குமூலத்தில் இரண்டு இராணுவ வீரர்கள் உமைத் தூக்கி வேலிக்கு மேலால் எறிந்ததாகக் கூறியிருந்தீரா?

*பதில்:-* ஆம்.

*கேள்வி:-* அப்போது இருட்டு வேளை. ஆகவே உம்மைத் தூக்கி எறிந்தவர்களை அடையாளம் காண உம்மால் முடியவில்லை. அப்படித் தானே?

*பதில்:-* அப்போது கும்மிருட்டாக இருக்கவில்லை. சற்று வெளிச்சம் இருந்தது.

*கேள்வி:-* அவர்களை நீர் பார்த்தீரா?

*பதில்:-* பயத்தின் காரணமாக அவர்களை நான் பார்க்கவில்லை. என்னைத் தூக்கி எறிந்தவர்களில் ஒருவரின் கண் சிறியதாக இருந்தது. மற்றவர் தடித்த உருவம் கொண்டவர்.

*கேள்வி:-* உமது கண்களைக் கட்டியிருந்த துணியை அவிழ்த்த பின்புதான் உம்மைத் தூக்கி எறிந்தவர்களைப் பார்த்தீரா?

*பதில்:-* ஆம்.

*கேள்வி:-* நீங்கள் விறகு வெட்டுவதற்காக பாம் தோட்டத்திற்குச் சென்றபோது உங்களை வழிமறித்த இராணுவத்தினர் என்ன கூறினார்கள்?

*பதில்:-* நாங்கள் கையில் வைத்திருந்த கத்தி, கோடாலி போன்ற ஆயுதங்களைக் கீழே போடும்படி கூறுகிறார்கள் என்று எனது சித்தப்பா தான் எங்களிடம் கூறினார்.

*கேள்வி:-* நீங்களும் ஆயுதங்களை உடனே கீழே வைத்துவிட்டீர்களா?

*பதில்:-* ஆம்.

*கேள்வி:-* இராணுவப் பொலீஸாருக்கு வாக்குமூலம் கொடுத்த சில தினங்களுக்குப் பின் நீதிவான் நடத்திய பிரேதப் பரிசோதனையின் போது நீர் சாட்சியமளித்தீரா?

*பதில்:-* ஆம்.

*கேள்வி:-* அப்போது உம்மைத் தூக்கியெறிந்தவர்களில் இருவரை உமமால் அடையாளம் காட்ட முடியவில்லை என்று கூறியிருந்தீரா?

*பதில்-* நான் அப்படிக் கூறவில்லை.

# மனித உரிமை பேணும் விடயம் தொடர்பாக காவல்துறையினருடன் ஐ.நா.அதிகாரி சந்திப்பு

மனித உரிமைகள் பேணுதல் தொடர்பாக தமிழீழ காவல்துறையினருடன் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழு தலைவர் இயன்மாட்டின் நேற்றுமுன்தினம் கிளிநொச்சியில் விரிவான கலந்துரையாடல் ஒன்றினை நடத்தினார்.

காவல்துறை சார்பில் அதன் பொறுப்பாளர் பா.நடேசன், தமிழீழ சட்ட ஆலோசகர் கலாநிதி சோமஸ்கந்தன் ஆகியோரும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

இந்தச் சந்திப்பின்போது குற்றச் செயல்கள் புரிந்தவர்களை விசாரணைக்கு உட்படுத்தும் சந்தர்ப்பங்களில் மனித உரிமைகள் எவ்வாறு பேணப்படுதல் வேண்டும் என்பது தொடர்பாகவும் -

ஏனைய உலக நாடுகளில் இத்தகைய விவகாரங்களில் மனித உரிமைகள் எவ்வாறு பேணப்படுகின்றன என்பது தொடர்பாகவும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

சந்திப்பின் இறுதியில் இயன் மாட்டினுக்கு நடேசனால் நினைவுப் பரிசொன்றும் வழங்கப்பட்டது. தொடர்ந்து கிளிநொச்சி காவல் பணிமனைக்குச் சென்ற இயன் மாட்டின், பணிமனைப் பொறுப்பாளரும் பரிசோதகருமான இரஞ்சித்குமாரைச் சந்தித்து உரையாடியதுடன் காவல் பணிமனையையும் பார்வையிட்டு, அதன் செயற்பாடுகள் பற்றியும் கேட்டறிந்து கொண்டார்.

அத்துடன் பணிமனையில் வைக்கப்பட்டிருந்த - கிளிநொச்சிப் பிரதேசம் சீருடையினரின் ஆக்கிரமிப்புக்கு உட்பட்டிருந்தவேளை படுகொலைசெய்யப்பட்ட பொதுமக்களின் எலும்புக்கூடுகளைப் பார்வையிட்ட அவர், அது தொடர்பான விவரங்களையும் கேட்டறிந்து கொண்டார்.

பின்னர் சீர்திருத்தப் பிரிவுக்குச் சென்று அந்தப் பிரிவின் பொறுப்பாளர் நரேனைச் சந்தித்து உரையாடியதுடன், அங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ள சுமார் 50பேர் தங்கியுள்ள இடத்தினையும் பார்வையிட்டார்.

தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்கள் சிலருடன் அவர் தனியான பேச்சுக்களையும் நடத்தினார். (எ-6)



கிளிநொச்சிக்கு விஜயம் மேற்கொண்டிருந்த ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் இயன் மார்டினை சந்தித்த தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், நினைவுப் பரிசு ஒன்றை வழங்குகின்றார்.

# பேரின்பக் கரை சேர்வோம்!

உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாய் இருக்கிறதென்றும் நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறிவீர்களா? ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால் அவனைத் தேவன் கெடுப்பார். தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாய் இருக்கிறது. நீங்களே அந்த ஆலயம்.

சகோதரரே! பரிசுத்தம் இல்லாமல் ஒருவனும் கடவுளைத் தொழுது கொள்ளமுடியாது. இப்பிரபஞ்சத்தின் அந்தகார சக்திகளுக்கு மத்தியில் மனித குலத்தின் பரிசுத்தத்தைக் கெடுக்கும் காரணிகளாக மனிதர்களின் அகத்தில் இருந்து புறப்படுபவைகள் அனேகமாய் இருக்கிறது. அசுத்தம், விபசாரம், வேசித்தனம், தீயசிந்தனைகள் இவைகளால் மதிமயங்கி கடவுளிடத்தில் இருந்து கிரயமாகப் பெற்றுக்கொண்ட நம் சரீரம் பரிசுத்தம் குறைச்சலாக்கப்படுகிறது. இதன் மூலமாக, நாம் நம்பியிருக்கின்ற பேரின்பக் கரையைக் காணமுடியாதவர்களாக இருக்கின்றோம்.

**தவக்காலச் சிந்தனை**
**-பதினொராம் நாள்-**

நம் சரீரமானது உலகமென்னும் சமுத்திரத்தின் ஊடாகக் கரைசேர்வதற்காய் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் ஒரு தோணி. எந்த மதிகேடன் தான் ஏறிச்செல்லும் தோணியின் கீழ்ப்பாகத்தைக் கொத்துவான். ஆயினும், பலரும் அதையே செய்து வருகிறார்கள். தாங்கள் கையாடுவது கோடரி என்று அறியாதிருக்கிறார்கள். மதுபானம் ஒரு கோடரி, புகைத்தல் ஒரு கோடரி, போதைவஸ்து ஒரு கோடரி, பயம், துக்கம், அசுத்த நினைவுகள் யாவும் நம் சரீரத்தைக் கொத்தும் கோடரிகளே.

மதிகேடனே! உன்கோடரியைச் சமுத்திரத்திலே எறிந்துவிடு. உன் தோணி அறியாமை என்னும் கற்பாறையில் மோதி நீ மாண்டு போகாதபடிக்குப் பகுத்தறிவு என்னும் சுக்கானை ஜாக்கிரதையாகக் கையாளு. ஆத்துமா என்னும் பாயைக் காற்று வழமாய் விரி. தேவ ஆவி என்னும் காற்று அதன்மேல் வீசி உன்னை பேரின்பக் கரைக்குத் தீவிரமாய் கொண்டே சேர்க்கும். தேவ ஆவி இவ்வண்ணமாக மெதடிஸ்த திரு அவையின் ஸ்தாபகரான கனம் யோன் வெஸ்லி ஐயர் என்னும் அடியான் மூலமாக ஆண்டவர் மக்கள் சமூகத்திற்கு அருளிய வார்த்தையாகும்.

**சகோதரன் க.திருவம்பலம்**

அன்பானவர்களே! நம்மைக் கரை சேர விடாதபடி வஞ்சிக்கின்ற அசுத்தக் கிரியைகளைக் குறித்து எச்சரிக்கையாக இருப்போம். அழிவில்லாத நித்திய ஜீவனைத் தருவேன் என்பதே ஆண்டவர் நமக்குத் தந்த வாக்குத்தத்தமாகும். வாக்கு மாறாத கடவுளின் வார்த்தைக்குச் செவி கொடுப்போம். மகிமையுள்ள பேரின்பக் கரை சேர்வோம். ஆமென். ☆

# அமைச்சர்கள் 15பேர் இன்று கல்முனைப் பகுதிக்கு விஜயம்

## ஐ.தே.க. ஆதரவாளர்களின் குறைகள் தீர்ப்பதற்கு

இதுவரை என்றுமில்லாதவாறு 15 அமைச்சர்களைக் கொண்ட குழு ஒன்று ஒரே நாளில் கல்முனையை உள்ளடக்கிய அம்பாறை மாவட்டக் கரையோரப் பகுதிக்கு விஜயம் செய்கிறது. இந்த விஜயம் இன்று சனிக்கிழமை நடைபெறுகிறது.

இந்தப் பிரதேசத்தில் உள்ள ஐ.தே.க. ஆதரவாளர்களின் குறைபாடுகளை நேரில் கேட்டறிந்து அவற்றை நிவர்த்திசெய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை உடனுக்குடன் எடுப்பதே அமைச்சர் குழுவின் இந்த விஜயத்தின் நோக்கம் ஆகும்.

திகாமடுல்ல மாவட்ட ஆளும் கட்சி எம்பி. மயோன் முஸ்தபா கடந்த ஞாயிற்றுக்கிழமை செய்தியாளர்கள் மாநாடு ஒன்றை நடத்தி ஐ.தே.க. ஆதரவாளர்களை அரசாங்கம் நட்டாற்றில் கைவிட்டுவிட்டது என்றும் - இந்த நிலை தொடர்ந்தால் தாம் இனியும் ஐ.தே.க. எம்.பியாக இருப்பதில் அர்த்தமில்லை என்றும் - வெளிப்படையாகக் கூறி அரசுக்கு கண்டனம் தெரிவித்தார்.

ஆதரவாளர்களைப் படுகுழியில் தள்ளுவதற்குத் தம்மால் துணைபோக முடியாது என்றும் மயோன் முஸ்தபா மிகுந்த ஆத்திரத்தோடும் எரிச்சலோடும் கூறினார்.

அதன் விளைவுதான் 15 அமைச்சர்கள் குழுவின் இந்தத் திடீர் விஜயம் என்று நம்பப்படுகிறது. கல்முனைப் பிரதேசத்திற்கு இன்று காலை 10மணிக்கு அமைச்சர் குழாம் விஜயம் செய்கிறது. சாய்ந்தமருது படகு இறங்குதுறை, கிட்டங்கி பாலம், அழிந்த நிலையில் உள்ள சவளக்கடை அரிசி ஆலை, தபால் அலுவலகம், நெற்சந்தைப்படுத்தும் நிலையம், வாடி வீடு முதலானவற்றை அமைச்சர் குழு பார்வையிடும்.

இதன் பின்னர் அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேசத்திலுள்ள ஐ.தே.கட்சி ஆதரவாளர்களைச் சந்திப்பதற்கான விரிவான ஏற்பாடுகள் கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியில் செய்யப்பட்டிருக்கின்றன.

அன்றைய தினம் மாலை கல்முனைப் பிரதேசத்திலுள்ள திணைக்களத் தலைவர்களுடனான கூட்டத்திலும் அமைச்சர்கள் கலந்துகொள்வார்கள்.


குழுவில் இடம்பெறும் அமைச்சர்களின் விவரம் வருமாறு:-

ஜோன் அமரதுங்க, திலக் மாரப்பன, டாக்டர் ராஜித சேனாரட்ன, மஹிந்த விஜயசேகர, சுரனிமல ராஜபக்ஷ, வஜிர அபேவர்த்தன, எம்.எச்.முஹமட், தி.மகேஸ்வரன், கபீர் ஹஸீம், லக்ஸ்மன் சேனாரட்ன, காமினி ஜெயவிக்கிரம பெரேரா, ஜோன்ஸன் பெர்னாண்டோ, அலிக் அலுவிகார, இம்தியாஸ் பாக்கீர் மாக்கார், ஏ.எச்.எம்.அஸ்வர்.

மக்களை அமைச்சர்கள் சந்திப்பதற்கான சகல ஏற்பாடுகளையும் ஐ.தே.கட்சி மயோன் முஸ்தபா விரிவான முறையில் செய்துள்ளார்.

அமைச்சர்கள் குழு சம்மாந்துறை, பொத்துவில் பகுதிகளுக்கும் செல்கிறது.

# வடக்கின் மாபெரும் போர்



'வடக்கின் பெரும் மோதல்' கிரிக்கெட் ஆட்டத்தின் ஆரம்பத்தில் யாழ்.மத்திய கல்லூரி அணித் தலைவர் வீ.ரஜீவ்குமாரும் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணித்தலைவர் சி.அகிலனும்

யாழ்ப்பாணம்,மார்ச்15

வடக்கின் மாபெரும் போர் என்று வர்ணிக்கப்படும் யாழ். மத்திய கல்லூரி மற்றும் சென். ஜோன்ஸ் கல்லூரி கிரிக்கெட் அணிகளுக்கிடையிலான ஆட்டம் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணித்தலைவர் வெற்றி பெற்று யாழ். மத்திய கல்லூரியைத் துடுப்பெடுத்தாடுமாறு கேட்டுக்கொண்டார்.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். மத்திய கல்லூரி அணி தனது முதல் இன்னிங்ஸில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 144 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. மத்திய கல்லூரியின் அணி சார்பாக எஸ். கார்த்தீபன் 40 ஓட்டங்களைப் பெற்றார். அணித் தலைவர் ஆர். மதுஷன் 19 ஓட்டங்களையும், சி.ஜசிந்தன் 15 ஓட்டங்களையும் பெற்றனர்.

சென்ஜோன்ஸ் கல்லூரியின் பந்து வீச்சாளர்களில் சி.அகிலன் 25 ஓட்டங்களைக் கொடுத்தும பி.லவேந்திரா 52 ஓட்டங்களைக் கொடுத்தும் தலா 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சென் ஜோன்ஸ கல்லூரி அணி நேற்றைய ஆட்ட முடிவில் 4 விக்கெட்டுக்களை இழந்து 90 ஓட்டங்களைப பெற்றிருந்தது. இதில் ஈ.எஸ்வில்சன் 40 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். எஸ்.லவேந்திரா, எம். டினேஸ் இருவரும் ஆட்டமிழக்காமல் முறையே 9, 2 ஓட்டங்களுடன் உள்ளனர்.

பந்துவீச்சில் 14 ஓவர்கள் பந்து வீசிய யாழ் மத்திய கல்லூரி அணித்தலைவர் விரஜீவ் குமார் 17 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

ஆட்டம் இன்றும் தொடரும். (ஒ-5-86)

# பொன் அணிகளின் போர்

'பொன் அணிகளின் போர்' என வர்ணிக்கப்படும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மற்றும் சென்பற்றிக்ஸ் கல்லூரி அணிகளுக்கிடையேயான கிரிக்கெட் போட்டி நேற்று யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமானது.

நேற்றுக் காலை நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணித் தலைவர் யாழ்ப்பாணக் கல்லூரியை துடுப்பெடுத் தாடுமாறு கேட்டுக்கொண்டார்.


யாழ்ப்பாணக் கல்லூரி அணி முதல்இன்னிங்ஸில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 59 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. கே.உதயகுமார், எஸ்.தனஞ்சயன் ஆகியோர் அதிகபட்சமாக தலா 14 ஓட்டங்களைப் பெற்றனர்.

சென்.பற்றிக்ஸ் கல்லூரி பந்து வீச்சாளர்கள் ஆர்.விநோதன் 4 விக்கெட்டுக்களையும், ஜி.செல்வின் லொயிட், எஸ்.அருநாத் ஆகியோ தலா 3 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி தனது முதல் இன்னிங்ஸில் அனைத்து விக்கெட்டுக் களையும் இழந்து 166ஓட்டங்களைப் பெற்றது. இவ்வணியின் எம்.றொஷாந்தன் 43ஓட்டங்களையும், ஜி.செல்வின் லொயிட் 41 ஓட்டங்களையும், எல்.சுஜீவன் 25 ஓட்டங்களையும் பெற்றனர்.

யாழ்ப்பாணக் கல்லூரியின் பந்து வீச்சாளர்களில் எம்.திலீபன் 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். வை.தனுயன, ஜே.ராஜ் குமார் தலா 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

நேற்றைய ஆட்டநேர முடிவில் தனது இரண்டாவது இன்னிங்ஸில் விக்கெட் இழப் பின்றி 11ஓட்டங்களென்ற நிலையில் இருந்தது யாழ்ப்பாணக்கல்லூரி அணி. ஆட்டம் இன்று தொடரும் (ஒ-5)



'பொன் அணிகள் போர்' கிரிக்கெட் ஆட்டத்தின் தொடக்கத்தில் யாழ்ப்பாணக் கல்லூரி அணித்தலைவர் எஸ்.எம்.திலீபனும் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணித்தலைவர் சி.ஆர்.எம்.கிரிஷாந்தனும் நாணயச் சுழற்சியின் போது...

## யாழ்.மாவட்ட கல்வி வலய

# உதைபந்தாட்டப் போட்டி கால் இறுதி ஆட்ட விவரங்கள்

யாழ்.மாவட்ட கல்வி வலயங்களிடையேயான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் கால் இறுதி ஆட்டங்கள நாளை ஞாயிற்றுக்கிழமை யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெறவுள்ளன.

காலை 8 மணிக்கு ஆரம்பமாகும் ஆட்டங்களின் விவரங்கள்:-

**16 வயதுப் பிரிவு**

மானிப்பாய் இந்துக் கல்லூரி எதிா காரைநகர் கலாநிதி தியாகராசா மத்திய மகாவித்தியாலயம்.

உடுப்பிட்டி கொற்றாவத்தை அ.மி.த.க. பாடசாலை எதிர் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி.

வேலணை துரைச்சாமி வைத்திலிங்கம் வித்தியாலயம் எதிர் யாழ்புனித யோசேப் வித்தியாலயம்..

**18 வயதுப் பிரிவு**

கரவெட்டி தேவரயாளி இந்துக் கல்லூரி எதிர் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி.

பிற்பகல் 1.30 மணிக்கு ஆரம்பமாகும் ஆட்டங்களின் விவரங்கள்:-

**16 வயதுப் பிரிவு**

நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் எதிர் ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயம்.

**18 வயதுப் பிரிவு**

இளவாலை புனித கென்றியரசர் கல்லூரி எதிர் ஸ்கந்த்வரோதய அல்லது நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்.

யாழ்மத்திய கல்லூரி எதிர் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி.

யாழ்.இந்துக் கல்லூரி எதிர் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் அல்லது ஸ்கந்தவரோதயக் கல்லூரி. (ஒ-5-86)

## இறுதியாட்டம்

யாழ்ப்பாணம்,மார்ச்15

யாழ்ப்பாண உதைபந்தாட்ட லீக் நடத்தும் 22 வயதிற்கு உட்பட்டோருக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக உதைபந்தாட்ட லீக்கின் உப தலைவர் பெஞ்சமின் ஜேக்சு கலந்துகொள்வார்.

இவ் இறுதியாட்டத்தில் மோதும் அணிகளின் விவரம் வருமாறு:-

ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம் எதிர் நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக் கழகம். (ஒ-5)

## தடகள போட்டிகள்

யாழ்ப்பாணம்,மார்ச்15

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவிலுள்ள பதிவுசெய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான தடகளப் போட்டிகள் இன்று சனிக்கிழமைமுதல் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இதன் இறுதி நிகழ்வுகள் எதிர்வரும் 18ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறும். அன்றையதினம் காலை 7 மணிக்கு வீதியோட்டம் (மரதன்), சைக்கிள் ஓட்டம் எனபன நடைபெறவுள்ளன. (ஒ-5)

## டிராக்டர் கொள்வனவு

சாவகச்சேரி பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் தனது சங்கத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகவும் விஸ்தரிப்பதற்காகவும் டிராக்டர் ஒன்றை கடந்த வாரம் கொள்வனவு செய்துள்ளது.

இதன்மூலம் சங்கம் அபிவிருத்தி அடைவதோடு அங்கத்தவர்கள் மற்றும பணியாளர்களும் பயன்பெறுவார்கள் என சங்கத்தின் பொது முகாமையாளர் தெரிவித்தார். (ம-75)

# சப்பிரகமுவ பல்க்லை. மாணவருக்கு!

யாழ்ப்பாணம்,மார்ச்15

சப்பிரகமுவ பல்கலைக்கழத்தில் சமூகவிஞ்ஞானப் பிரிவு வகுப்புக்கள் இன்று சனிக்கிழமை மீண்டும் ஆரம்பிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பல்கலைக்கழகத்தில் கடந்த ஒருமாத காலமாக மாணவர்கள் பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-5)


மீண்டும்......

*திருமதி சாந்தினி சிவநேசனின் நெறியாள்கையில்*

நாடக அரங்கக் கல்லூரி வழங்கும்



*ஜர்கொலோ சதுரர்*

- நடன நாடகம்

இன்னும் சில நாட்களில்.....



**கண் நோய்களுக்கான ஆலோசனையும், சத்திர சிகிச்சையும்**

**யாழ். வைத்தியசாலை**

*இல. 284, பலாலி வீதி, கந்தர்மடம்.*

*(ஆலடிச் சந்திக்கு அருகில்)*

**இன்று முதல் தினசரி மாலை 7.00 மணியில் இருந்து கண்களுக்கான அனைத்து நோய்களுக்கும் யாழ். போதனா வைத்தியசாலையின் பிரபல கண் சத்திர சிகிச்சை நிபுணரால் வைத்திய ஆலோசனையும், சத்திர சிகிச்சையும் வழங்கப்படும். தொலைபேசி மூலம் முற்பதிவு செய்யலாம். ஒரு நாளுக்கு குறிப்பிட்ட நோயாளர்கள் மட்டுமே பார்வையிடப்படுவர். ஆகவே, காலையிலே உங்கள் பெயர்களை நேரடியாகவோ தொலைபேசி மூலமாகவோ பதிவு செய்யவும்.**

**தொலைபேசி:**

**222 3533**
**222 5489**
**0777 164383**

(15623)


# 31 ஆம் நாள் நினைவும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம்
1950



மறைவு
14 02 2003

## நடராசா வன்மீகநாதன்

*(காங்கேசன்துறை)*

**கடந்த 15.02.2003 அன்று நடைபெற்ற எமது உடன்பிறப்பின் இறுதி நிகழ்வில் நேரில் கலந்துகொண்டு இரங்கற் செய்திகளை அனுப்பியும் எமது துயரில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றியறிதலைத் தெரிவிப்பதோடு, 16.03.2003 ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சி, கனகபுரத்தில் நடைபெறும் போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், போராளிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

**ந.பாண்டியனார்**
(கன்னி நிலம் பதிப்பகம்)
**வெ.இளங்குமரன்**
(தமிழீழக் கல்விக்கழகம்)

*கனகபுரம்,*
*கிளிநொச்சி.*

(15577)


**ORGAN NOTES**

* **பழைய, புதிய தமிழ் சினிமாப் பாடல்கள்.**
* **இசை பயிலும் மாணவர்களுக்கேற்றது**
* **Staff/ABCD Notation பாடல் வரிகளுடன்**

**49, Temple Rd., Jaffna.**
**0777 - 788127**

(15615)



**விற்பனையாகிறது**

**உயிரியல் - BIOLOGY**

'தொழிற்படும் தாவரம-1'
பரீட்சை வழிகாட்டி வினா - விடைகள்

**எஸ்.செல்வநேசன்**

**ஸ்ரீ லங்கா புத்தகசாலை,**
**284, கே.கே.எஸ். வீதி,**
**யாழ்ப்பாணம்.**
**தொலைபேசி 222 2573**

(15603)


# மரண அறிவித்தல்கள்

## கிட்டினர் சின்னத்துரை *(நடராசா)*

(ஓய்வுபெற்ற அலுவலகப் பணியாளர், யா/ஹாட்லிக் கல்லூரி)

துன்னாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் துன்னாலை தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கிட்டினர் சின்னத்துரை அவர்கள் 11.03.2003 செவ்வாய்க்கிழமை காலமானதை 13.03.2003 வியாழக்கிழமை நல்லடக்கம செய்யப்படும் என உதயனில் அறிவித்திருந்தோம். தவிர்க்கமுடியாத காரணத்தினால் அன்று நடைபெறவில்லை. இன்று 15.03.2003 சனிக்கிழமை வல்லை இந்து மயானத்தில் 10 மணிக்கு நல்லடக்கம் நடைபெறும்.

அன்னார் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் சுசிலாதேவி, சாந்தாதேவி (லண்டன்), சித்திராதேவி (கனடா), உமாகாந்தன் (சுவிஸ்), மனோ ஆகியோரின் அன்புத் தந்தையும், சுந்தரராஜ், ராதாகிருஸ்ணன் (லண்டன்), ரவீந்திரன் (கனடா), சுசிலா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் மாணிக்கம், சின்னமணி, தெய்வானை ஆகியோரின் அன்புச் சகோதரரும் நரேஸ், நிவேதா, சனுவிகா, துவாரகன், ஆதனி, விதுர்ஷன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இமையாணன் கிழக்கு,*
*இமையாணன்.*
(15624)
தகவல்:
மனோ (மகன்)

## நமசிவாயம் ஆனந்த விநாயகன்

**(வண்ணை ஆனந்தன்)**

யாழ்ப்பாணம், வண்ணார் பண்ணையைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வதிவிடமாகவும் கொண்ட நமசிவாயம் ஆனந்த விநாயகன் 11.03.2003 அன்று ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருணாசலம் - அமிர்தாம்பிகை தம்பதியினரின் அன்பு மருமகனும் அரியதேவியின் அன்புக் கணவரும் தமிழ்வேந்தனின் பாசமிகு தந்தையும் செல்வராசா - யோகராணி (பளை), குமாரவேலு இராசம்பிகை (பளை), தெய்வேந்திரம் (ஜேர்மனி), லோகநாதன் (லண்டன்), லோகபாலன் (கனடா), கருணாநிதி - வனஜாம்பிகை (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஜேர்மனியில் 17.03.2003 அன்று 11-12 மணிக்கிடையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*நிரந்தர முகவரி:*
*"அமுத சுரபி"*
*புலோப்பளை,*
*பளை.*

*தற்காலிக முகவரி:*
*பதிவாளர் லேன்,*
*திருநெல்வேலி கிழக்கு,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
திருமதி இ.குமாரவேலு
(மைத்துனி)

(15621)

# கிளிநொச்சியில் பரிசளிப்பு

கிளிநொச்சி,மார்ச்15

தமிழீழ வரலாறும் சமூகக் கல்வியும் தேர்வில் சிறப்புத் தேர்ச்சி பெற்ற வர்களுக்கான பரிசளிப்பு விழா இன்று சனிக்கிழமை மாலை 1.30 மணிக்கு கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

வன்னி பெருநிலப்பரப்பில் வெற்றி பெற்ற 9 மாணவர்களுக்கு பணப்பரிசும் சான்றிதழும் இப்பரிசளிப்பு விழாவில் வைத்து வழங்கப்படவுள்ளது.

வடக்கு - கிழக்க மாகாண மட்டத்தில் தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையால் உலக ஆசிரியர் நாளை யொட்டி ஆசிரியர்களிடையே நடத்தப்பட்ட தமிழ் மொழித்திறன் தேர்வில் பரிசுபெற்ற வன்னி பெரு நிலப்பரப்பு ஆசிரியர்களுக்கும் கடந்த ஆண்டு நடைபெற்ற ஜி.ச.ஈ உயர்தரத் தேர்வில் திறமைச் சித்திபெற்ற வன்னி பெருநிலப்பரப்பு மாணவர்களுக்கும் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (ம-8)

## நல்லூர் பிரதேச செயலர் பிரிவில்

# ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் 50 வீடுகளை அமைக்கத் திட்டம்

யாழ்ப்பாணம்,மார்ச்15

நல்லூர் பிரதேச செயலர் பிரிவல் வறுமை நிலையில் உள்ள - வீடுகளற்ற - 50 குடும்பங்களுக்கு ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் (ஜி.ரி.இசற்) வீடுகள் அமைத்துக்கொடுக்கவுள்ளது.

மேற்படி பிரதேச செயலர் பிரிவில உள்ள வண்ணார்பண்ணை, வடமேற்கு (ஜே/99), கோண்டாவில் வடகிழக்கு (ஜே/119), அரியாலை மத்தி வடக்கு (ஜே/94), கோண்டாவில் தென்மேற்கு (ஜே/127) ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளிலேயே 50வீடுகள் அமைக்கப்படவுள்ளன.

இந்தத் திட்டத்தினால் பயன்பெறும் பயனாளிகள் பிரதேச செயலகத்தினால் கோரப்படும் தகைமையுடையவராக இருந்தால் மட்டுமே பயன்பெற முடியும் எனவும்-

சமூக மேம்பாட்டுத்திட்டத்தைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்துவதே இந்த நிறுவனத்தின் நோக்கம் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

(எ-180)

# வெங்காயம் விலை வீழ்ச்சி

வடமராட்சி,மார்ச்15

வடமராட்சிப் பிரதேசத்தில் வெங்காயத்தின் விலை வீழ்ச்சியடைந்துள்ளதால் விவசாயிகள் பெரிதும் நஷ்டத்தை எதிர்நோக்கியுள்ளனர்.

தற்போது அறுவடை செய்யப்பட்டு வரும் வெங்காயம் ஒரு அந்தர் ஆயிரத்து 300 ரூபா தொடக்கம் ஆயிரத்து 500 ரூபா வரை கொழும்புக்கு எடுததுச் செல்லப்படும் வர்த்தகர்களால் கொளவனவு செய்யப்பட்டுவருகிறது.

உற்பத்திச் செலவை ஈடுகொடுக்காத இவ்விலையினால் விவசாயிகள் பெரும் நஷ்டத்தை எதிர்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ம-173)

# இந்திய அணிக்கு...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

திராவிட்டும் உள்ளனர். இவர்கள் இருவரும் துடுப்பாட்டம் தொடர்பான மதிப்புமிக்க 'டிப்ஸ்'களை சக வீரர்களுக்கு வழங்குகின்றனர்.

பந்துவீச்சுக்கு ஸ்ரீ நாத்தும், கும்ப்ளேயும் தலைவர்களாக உள்ளனர். பயிற்சி நேரங்களின்போது பந்து வீச்சாளர்கள் எவ்விதம் வீசுகிறார்கள், அவர்களது செயற்பாடுகள் எப்படி உள்ளன என்பதைக் குறித்து இவர்கள் கவனம் செலுத்துகின்றனர், பந்து வீச்சாளர்களுக்கு அறிவுரை வழங்குகின்றனர்.

களத்தடுப்பு தலைவர்களாக யுவராஜ் சிங்கும், முகமது கைபும உள்ளனர். அணி வீரர்கள் பயிற்சியில் ஈடுபடும்போது களத்தடுப்புக் குறித்த விவகாரங்களில் இவர்கள்தான் ராஜாக்கள். அணியின் மூத்த வீரர்களிடம் கூட வேலை வாங்குவதில் இவர்கள் தயக்கம் காட்டுவதில்லை.

இறுதிக் கட்டத்தில் ஒவ்வொரு பிரிவின் முன்னேற்றம் குறித்தும் நிஜத் தலைவர் கங்குலி பயிற்சியாளர் ஜோன் ரைட் தலைமையில் ஆலோசிக்கப்படுகிறது.

இந்த மாதிரி புதுமையான முறைகளால்தான் உலகக் கோப்பையில் இந்தியா வெற்றிகரமாக விளையாடி அரை இறுதிக்குள் நுழைந்துள்ளது என அந்த இணையத் தளம் தெரிவிக்கிறது.

மேலும் ஒவ்வொரு வீரரையும் மற்றவர்கள் மாற்றிமாற்றி ஊக்குவிப்பதும், அனைத்து வீரர்களும் ஒன்றாக ஒரே இடத்தில் தோள் மேல் தோள் சேர்த்துக் கொண்டாடுவதும் கூட புதிய யுக்தியின் வெளிப்பாடுகள்தான் என அடித்துக் கூறுகிறது இந்த இணையத்தளம்.

(ம)

## அன்டி...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

னரே அன்டி பிளவர் அறிவித்துள்ளார். அவர் கலந்துகொள்ளும் கடைசி சர்வதேச ஒரு நாள் ஆட்டமாக இன்றைய ஆட்டம் இருக்கும்.

"அவருடைய நிலையை நீங்கள் பார்த்தீர்களானால், அவருடைய திறமை, அவருடைய அனுபவம் என்பன, இந்த உலகின் எந்த மூலைககுச் சென்றாலும் அவர் நினைவுகூரப் படுவார். சிம்பாப்வே கிரிக்கெட்டுககு அவர் மிகப் பெரிய சேவை செய்துள்ளார். எங்கள் அணிக்கு கடந்த சில வருடங்களாக அவர் மிகப் பெரும் மலையளவு பலமாக இருந்துள்ளார்.

"ஒவ்வொருவரும் அவரைப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அவர் வெளியேற்றம் எங்களுடைய உணர்வுகளைத் தொடுகின்றது. எங்கள் அணியில் அவரது காலம் ஒரு மிக முக்கிய பதிவு. அவர் விலகுவது எமக்கு மிகப் பெரிய இழப்பு. எனினும் அவர் சிம்பாப்வே கிரிக்கெட்டை இழந்துவிட மாட்டார் என்றே நினைக்கின்றேன்.

"நாங்கள் அனைவரும் அவரை நலமுடன் வாழ வாழ்த்துகின்றோம். நான் நிச்சயமாகச் சொல்கின்றேன், அவர் சிம்பாப்வேக்கும் அதன் கிரிக்கெட் அணிக்கும் ஒரு சிறந்த நபராக இருந்தார்" - என்றார் அணித் தலைவர் ஹீத் ஸ்ரீக்.

## இந்திய...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

இறுதி ஆட்டத்தில் நுழைந்தால் இந்தய பரிசு தொகை இரண்டு மடங்காக அதிகரிக்கப்படும் (ரூபா 3 கோடியே 50 லட்சம்) இறுதி ஆட்டத்தில் வெற்றி பெற்று உலகக் கிண்ணத்துடன் வந்தால் இந்தப் பரிசுத் தொகை மேலும் இரண்டு மடங்கு ஆக்கப்படும். அதாவது மொத்தம் ரூபா 7 கோடியே 50 லட்சும் ஆகும்.

இதன்படி கிண்ணத்துடன் திரும்பி வரும் இந்திய அணியின் ஒவ்வொரு வீரருக்கும் தலா 50 லட்சம் ரூபா பாிசாகக் கிடைக்கும். இத்தகவலை நேற்றுமுன்தினம் கொல்கத்தாவில் இந்திய கிரிக்கெட் சபைத் தலைவர் ஜக்மோன் டால்மியா அறிவித்தார்.

(ம-5)

## சஹீட்...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒழுங்கன நடத்தைகள் - சகித்துக் கொள்ளப்பட முடியாதவை என்பதை தென்னாபிக்காவுக்குச் செல்வதற்கு முன்னரே எமது வீரர்களுக்கு அறிவித்திருந்தோம்.

ஆனால், துரதிர்ஷ்ட வசமாக அவ்ரிடி ஒழுங்கு விதிகளை மீறியுள்ளார். அவருக்கு இந்தியாவுடனான ஆட்டத்திற்கான ஊதியத்தில் 50 சத வீதம் அபராதமும் விதிக்கப்படுகிறது.

- இவ்வாறு பாக்.கிரிக்கெட் சபை ஊடக அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது.

சார்ஜா சுற்றுப் போட்டி ஏப்ரல் முதலாம் திகதி ஆரம்பமாகவுள்ளது. பாகிஸ்தான், தென்னாபிரிக்கா, இலங்கை அணிகள் இவ்வாட்டங்களில் பங்குபற்றவுள்ளன.

மார்ச் 24 ஆம் திகதி சார்ஜா போடடிகளுக்கான பாக். அணியும் நிர்வாகிகள் விவரமும் அறிவிக்கப்படும் எனத தெரிவிக்கப்பட்டுள்ளது.

15 பேர் கொண்ட அணி முதலில் அறிவிக்கப்படும். அதன்பின் அணித் தலைவர் தெரிவுசெய்யப்படுவார். இவ்வாறு பாக். கிரிக்கெட் சபைத் தலைவர் ஜெனரல் தாரிக்ஸியா கூறினார்.

(ம-5)

# தென்மராட்சியில் சீருடைத்துணிகள் விநியோகம்

தென்மராட்சி,மார்ச்15

சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பின்வரும் கிளைகளில் வைத்து மாணவர்களுக்கான இலவச சீருடைத் துணிகள் நாளையும் நாளைமறுதினமும் வழங்கப்படவுள்ளன.

டச்சு வீதி, பொலீஸ்நிலைய ஒழுங்கை, நுணாவில் ஜோதி, கைதடி - நுணாவில், மட்டுவில் சோமஸ்கந்தா, சரசாலை - மட்டுவில், சரசாலை தெற்கு, புத்தூர் சந்தி, மீசாலை புதிய ஸ்ரேசனடி, சங்கத்தானை, கோயில்குடியிருப்பு ஆகிய பதினொரு கிளைகளில் வைத்தே சீருடைத் துணிகள் வழங்கப்படவுள்ளன.

இந்தத் தினங்களில் சீருடைத் துணிகளைப் பெற்றுக்கொள்ளாதவர்களுக்கு எதிர்வரும் 19ஆம் திகதி சங்கத் தலைமை அலுவலகத்தில் வைத்து வழங்கப்படுமென சங்கப் பொதுமுகாமையாளர் சி.தேவகுமார் அறிவித்துள்ளார். (எ-117)

## குருபூசை தின போட்டிகள்

வடமராட்சி,மார்ச்15

சதாவதானி கதிரைவேற்பிள்ளை குருபூசை தினத்தை ஒட்டிய மாணவர்களுக்கான போட்டிகள் இன்றும் நாளையும் மேலைப் புலோலி சதாவதானி கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலையத்தில் நடைபெறும்.

மாணவர்களிடையே நடத்தப்படும் பேச்சு, மனனம், பண்ணிசைப் போட்டிகளில் வெற்றிபெறுவோர்களுக்கான பரிசில்கள் குரு பூசைதின விழாவில் வைத்து வழங்கப்படும். (ம-173)

## குப்பை அகற்ற டிராக்டருக்கு கோரிக்கை

வலி.மேற்கு,மார்ச்15

வலிகாமம் மேற்குப் பிரதேசத்தல் குப்பை கூளங்களை அகற்றும் பணியில் ஈடுபடுத்த டிராக்டர் ஒன்றையும் லாண்ட் மாஸ்ர் ஒன்றையும் பெற்றுத் தருமாறு வலி. மேற்கு பிரதேச சபை கோரிக்கை விடுத்துள்ளது.

வலிகாமம் மேற்குப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இவ்வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

(ம-175)

## கிராம அபிவிருத்தி குறித்த கலந்துரையாடல்

வலிமேற்கு,மார்ச்15

வலிகாமம் மேற்குப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணியளவில் கிராம அபிவிருதி தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் கலந்துகொள்ளவுள்ளார்.

கிராமங்களின் அபிவிருத்தி புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு நடவடிக்கைகள் தொடர்பாக இதில் ஆராயப்படவுள்ளது. வலி.மேறகு பிரதேசத்திலுள்ள சமூக மட்ட அமைப்புக்களின் தலைவர், செயலாளர் ஆகியோரைத் தவறாது இக்கலந்துரையாடலில் பங்குபற்றுமாறு உதவிப் பிரதேச செயலர் கே.தர்மராசா கேட்டுள்ளார்.

(ம-175)


நிறைஞ்சனாஸ் சங்கானை

பிரபு, வைஜெந்தி நடித்த

வண்ணத்தமிழ் பாட்டு (ரீலஸ்)

காட்சி நேரம் : 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு, இரவு 8.45 (பு.நே.)

ஜக்கிஜான் நடித்த
RUSH HOUR - 2 (C-26838)

ராஜா யாழ்ப்பாணம்

"காசி" புகழ் விக்ரம், லைலா, விவேக், வையாபுரி, நாசர் நடித்த

தில் (ரீலஸ்)

காட்சி நேரம் :10.30, 2.30, 6.30, 9.30 (C-26856)

லக்ஷ்மி இணுவில்

இளைய தளபதி விஜய், ரீமாசென் நடித்த

பகவதி

தினசரி மூன்று காட்சிகள்
11.00, 3.00, 7.00 (பு.நேரம்) (15571)

நாகம்ஸ் சுன்னாகம்

அர்ஜுன், பூஜா, ரகுவரன் நடித்த

சூரியபார்வை (ரீலஸ்)

காட்சிகள் தினசரி : 11.00, 3.00, 7.00 (பு.நேரம)
16ஆம் திகதி முதல சொக்கத் தங்கம் (15612)


# இலங்கை அரையிறுதிக்கு....

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

விட்டால் அடுத்த சுற்றுக்கு முன்னேறி விடும். இதனால் இன்றைய ஆட்டம் அவர்களுக்கு ஜீவமரணப் போராட்டம்.

இன்றைய ஆட்டத்தில் எத்தகைய அதிசயத்தையாவது செய்து வெல்ல வேண்டிய இக்கட்டான சூழ்நிலையில் சிக்கித் தவிக்கின்றது இலங்கை. அது தோல்வி அடையுமாக இருந்தால் நியூஸிலாந்து அதிர்ஷ்டவசமாக அரையிறுதிக்குள் நுழைந்துவிடும். இலங்கையின் நிலை தர்மசங்கடந்தான்.

நேற்று நடைபெற்ற இந்திய - நியூஸிலாந்து அணிகளுக்கிடையிலான ஆட்டம் இலங்கைக்கு எவ்வாறு எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருந்ததோ அதே போன்றதொரு நிலையை இன்றைய ஆட்டம் நியூஸிலாந்திற்கும் அவர்கள் சார்ந்த ரசிகர்களுக்கும் எதிர்பார்பபை ஏற்படுத்தும் என்பதில் சந்தேகமில்லை.

இன்று ஆடும் இரு அணிகளும் டெஸ்ட் அந்தஸ்துப் பெறாத கென்யா அணியிடம் இந்தத் தொடரில் மண் கௌவியுள்ளன. அதாவது, இலங்கை ஆரம்பச் சுற்றிலும், ஸிம்பாப்வே 'சுப்பர் சிக்ஸிலும்' கென்யாவிடம் வாங்கிக்கட்டின. அதுமட்டுமல்லாது 'சுப்பர் சிக்ஸின்' முதலிரு ஆட்டங்களிலும் இவ்விரு அணிகளும் படுதோல்வி அடைந்துள்ளன.

உலகக் கிண்ண ஆரம்ப ஆட்டங்களில் பந்து வீச்சு துடுப்பாட்டம், களத்தடுப்பு ஆகிய மும்முனைகளிலும் சிறந்து விளங்கிய இலங்கை அணியின் தற்போதைய நிலை பரிதாபத்துககுரியது.

தனது அதிரடியான ஆட்டத்தின் மூலம் ஓட்டங்களைக் குவித்து அணியை ஸ்திர நிலைக்குக் கொண்டுவரும் அணித் தலைவர் சனத்தும் 'சுப்பர் சிக்ஸில் ஆஸ்திரேலியாவுடனான ஆரம்ப ஆட்டத்தில் கையில் படுகாயமடைந்தமை அணிக்குப் பெரும் பாதகமாக்கியுள்ளது.

இலங்கையின் நடுவரிசைத் துடுப்பாட்டம் தொடர்ந்தும் மிக மோசமான நிலையிலேயே தொடர்கிறது. அதிலும் ஜயவர்த்தன வீணாகவே அணிக்கு பாரமாகவுள்ளார். இவர் இதுவரை நடைபெற்ற ஆட்டங்கள் எதிலும் இரட்டை இலக்கத்தைத் தாண்டவில்லை. அணித்தேர்வில் இது குறித்து கவனம்செலுத்துவதாகத் தெரியவில்லை.

இன்றைய ஆட்டத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து அணியின் அனைத்து வீரர்களும் மும்முனையிலும் தமது பங்களிப்பை வழங்க வேண்டும். வெற்றிக்கு அதுவே அவசியம்.

இலங்கை - ஸிம்பாப்வே இரு அணிகளும் இதுவரை 27 ஒரு நாள் ஆட்டங்களில் மோதியுள்ளன. இவற்றில் 21 இல் இலங்கையும், ஸிம்பாப்வே 5 இலும் வென்றுள்ளன. ஓர் ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்துள்ளது.

இதில் நடுநிலை மைதானங்களில் 12 ஆட்டங்கள் நடந்துள்ளன. இவற்றில் 9 ஆட்டங்களில் இலங்கையும் 2ஆட்டங்களில் ஸிம்பாப்வேயும் வெற்றிபெற்றுள்ளன.

உலகக் கிண்ணத் தொடரில் ஸிம்பாப்வேக்கு எதிரான 3 ஆட்டங்களில இலங்கை வென்றது. ஸிம்பாப்வேயுககு எதிராக இறுதியாக நடைபெற்ற 7 ஆட்டங்களிலும் இலங்கையே வெற்றியீட்டியுள்ளது.

இன்று நடைபெறவுள்ள மற்றொரு 'சுப்பர் சிக்ஸ்' ஆட்டத்தில் ஆஸ்திரேலியா - கென்யா அணிகள் மோதுகின்றன. டர்பன் நகரில் பகல் - இரவு ஆட்டமாக இது நடைபெறுகின்றது.

இவ்விரு அணிகளும் ஏற்கனவே அரையிறுதிக்குத் தகுதி பெற்றுள்ளன. இந்த நிலையில், இன்றைய ஆட்டத்தின் முடிவுகள் எந்தவோர் அணியின் நிலையிலும் மாற்றத்தை ஏற்படுத்தப் போவதில்லை என்பது குறிப்பிடத்தககது.

இவ்விரு அணிகளும் இதுவரை 3 ஆட்டங்களில் மோதியுள்ளன. இம் மூன்றிலும் ஆஸ்ரேலியாவே வென்றது.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி வைத்தி பூரணம்

மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட வைத்தி பூரணம் நேற்று (14.03.2003) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இளையவி வைத்தியின் அன்பு மனைவியும் கனகரத்தினம் (கனடா), விமலாதேவி (கனடா), சறோஜினிதேவி, இந்திராதேவி (கனடா), நாகரத்தினம், மல்லிகாதேவி, தேன்மொழி (ஜேர்மனி), அகிலன் ஆகியோரின் அன்புத் தாயாரும் குருசாமி (கனடா), மகேஸ்வரி (கனடா), ஈஸ்வரன், கந்தசாமி (கனடா), சுமதி, பாஸ்கரன், கருணா (ஜேர்மனி) ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.03.2003) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் சின்னத்தா மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கண்ணன் கோயில் வீதி,*
*மட்டுவில் தெற்கு,*
*சாவகச்சேரி.*

(15625)

தகவல்:
ச. கிருஷ்ணன்
(சகோதரர் - ஆசிரியர்)
யா/சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வி.,
சாவகச்சேரி.

## திருமதி இளையதம்பி மனோன்மணி

குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இளையதம்பி மனோன்மணி 11.03.2003 செவ்வாய்க்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் குரும்பசிட்டியைச் சேர்ந்த ஆறுமுகம் இளையதம்பி (சென்ரர்) யின் அன்பு மனைவி ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.03.2003) சனிக்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*குப்பிளான் தெற்கு,*
*குப்பிளான்.*
*கனடா T.P. No.: 905 - 4959514*

(சி-26975)

தகவல்:
ச.ஜெயசக்தி
(மகள்)

## செல்லையா கனகம்மா

புலோலி தெற்கு, கலட்டிக் கிணத்தடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா கனகம்மா நேற்று (14.03.2003) வெள்ளிக்கிழமை 5 மணியளவில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையாவின் அன்பு மனைவியும் இராசேந்திரம் (யாழ்ப்பாணம்), யோகம்மா, இந்திரா (யாழ்.போதனா வைத்தியசாலை), விமலாதேவி (மேரி - ஆசிரியை, உசன் மகாவித்தியாலயம்), கிருஷ்ணபவான் (மூர்த்தி), பகவதி (உமா) ஆகியோரின் அன்புத் தாயும் அலெக்ஸ் சந்திரிகா ஜெயக்குமார் (வலி.கிழக்கு பிரதேச சபை), பாலசுப்பிரமணியம் (நகரசபை, பருத்தித்துறை), கீதாஞ்சலி, சிங்கராசா (வர்த்தகர், கொடிகாமம்) ஆகியோரின் அன்பு மாமியும் சுகனியா, அறோயன், அஜந்து, யதுர்ஷன், நிதர்ஷன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.03.2003) காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக புலோலி ஆனைவிழுந்தான் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கலட்டி கிணற்றடி,*
*புலோலி தெற்கு,*
*புலோலி.*

(சி-26974)

தகவல்:
ஜெயக்குமார்
(மருமகன்)

## World Cup Score card - 2003




ரூ. 16910 முதல்
தொலைக்காட்சிப் பெட்டிகள்
சிங்கர்
புதிய பார்வை
இல. 1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P:021-222 5408


நாணயச் சுழற்சி : இந்தியா
ஆட்டநாயகன் : ஷஹீர்கான்
முடிவு : 7 விக்கெட்டுக்களால் இந்தியா வெற்றி

### நியூஸிலாந்து

| பெயர் | ஆட்டமிழப்பு | | ஓட்டம் | பந்து | 4 | 6 |
|---|---|---|---|---|---|---|
| சி.மக்மிலன் | c/ஹர்பஜன் | b/கான் | 00 | 02 | 0 | 0 |
| எஸ்.பிளமிங் | c/டெண்டுல்கர் | b/ஸ்ரீநாத் | 30 | 59 | 4 | 0 |
| என்.ஆஸ்லே | lbw | b/கான் | 00 | 01 | 0 | 0 |
| எஸ்.ஸ்ரைரிஸ் | c/திராவிட் | b/நேஹ்ரா | 15 | 21 | 1 | 0 |
| பி.மெக்கலம் | | b/கான் | 04 | 16 | 0 | 0 |
| எல்.கெய்ன்ஸ் | c/கான் | b/ஹர்பஜன் | 20 | 26 | 1 | 0 |
| சி.ஹரிஸ் | lbw | b/கான் | 17 | 37 | 2 | 0 |
| ஏ.ஓராம் | | b/ஷேவாக் | 23 | 54 | 1 | 0 |
| டி.விட்டோரி | c/கங்குலி | b/ஹர்பஜன் | 13 | 40 | 2 | 0 |
| டி.டஃப்பி | c&b/மொங்கியா | | 11 | 13 | 2 | 0 |
| எஸ்.பொண்ட் | not out | | 00 | 06 | 0 | 0 |
| உதிரிகள் | | | 13 | | | |
| மொத்தம் | (45.1ஓவர்கள்) | | 146/10 | | | |

ஷஹீர்கான் : 08-00-42-04, ஸ்ரீநாத் : 08-00-20-01, நேஹ்ரா : 10-03-24-01, ஹர்பஜன் : 10-02-28-02, கங்குலி : 02-00-04-00, டெண்டுல்கார்: 05-00-20-00, ஷேவாக் : 02-01-03-01, மொங்கியா: 0.1-01-00-01

### இந்தியா

| பெயர் | ஆட்டமிழப்பு | | ஓட்டம் | பந்து | 4 | 6 |
|---|---|---|---|---|---|---|
| எஸ்.டெண்டுல்கர் | c/ஓராம் | b/டஃப்பி | 15 | 16 | 3 | 0 |
| வி.ஷேவாக் | c/ஸ்ரைரிஸ் | b/பொண்ட் | 01 | 06 | 0 | 0 |
| எஸ்.கங்குலி | | b/பொண்ட் | 03 | 06 | 0 | 0 |
| எம்.கைவ் | not out | | 68 | 129 | 8 | 0 |
| டி.திராவிட் | not out | | 53 | 89 | 7 | 0 |
| உதிரிகள் | | | 10 | | | |
| மொத்தம் | (40.4 ஓவர்கள்) | | 150/3 | | | |

களமிறங்காதவர்கள் : ஏ.நேஹ்ரா, ஜே.ஸ்ரீநாத், ஷஹீர்கான், டி.மொங்கியா, ஹர்பஜன், யுவராஜ்சிங்.

டஃப்பி: 10-01-41-01, எஸ்.பொண்ட்: 08-02-23-02, ஓராம்: 05-00-20-00, விட்டோரி: 05-00-18-00. மக்மிலன்: 02-01-04-00, ஸ்ரைரிஸ்: 6.4-00-29-00, ஹரிஸ்: 04-01-15-00.

## சந்திப்பு

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் வவுனியா மாவட்டத்துக்கான புதிய தலைவராகப் பொறுப்பேற்றுள்ள எஸ்.கே. அலா விடுதலைப் புலிகளின் வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலனுடன் நேற்றுக் கலந்துரையாடினார்.

வவுனியாவின் தற்போதைய நிலைமைகளை அவர் கேட்டறிந்தார்.

வவுனியா மாவட்டத் தலைவராக இருந்த யுக்கா பொலினன் ஓய்வு பெற்றுக்கொண்டதை அடுத்து இவர் பதவி ஏற்றுள்ளார். (ஒ-3-164)

## உண்ணாவிரதம்

களுத்துறைக் கைதிகள் விவகாரம், முல்லைத்தீவு கடற்பரப்பில் புலிகளின் கப்பல் தாக்கப்பட்டமை, தொண்டர் ஆசிரியர் உண்ணாவிரதப் போராட்டம், மட்டக்களப்பு கல்வியியல் கல்லூரியில் 40 மாணவர்கள் உடற்பயிற்சி பாடநெறிக்கான நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு அனுமதி மறுக்கப்பட்டமை ஆகியவற்றை முன்வைத்து களுவாஞ்சிக்குடியில் நாளை உண்ணாவிரதப் போராட்டம் இடம்பெறவுள்ளது.

## 140 மருத்துவர்கள் நியமனம்

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் நிலவும் வைத்தியர்கள் பற்றாக்குறையை நீக்குவதற்கு சுகாதார அமைச்சு 140 வைத்தியர்களை நியமித்துள்ளது.

அத்துடன், வடக்குக் கிழக்குப் பகுதிகளிலுள்ள வைத்தியசாலைகளுக்கு அன்புலன்ஸ் வாகனங்களும் வழங்கப்படவுள்ளதாக வடக்கு கிழக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளர் குமாரவேற்பிள்ளை தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் 72 டாக்டர்கள் சேவையிலுள்ளனர். இன்னும் 25 பேர் அங்கு தேவைப்படுகிறனர். 10 வைத்திய நிபுணர்கள் கடமையாற்றும் மட்டக்களப்பு ஆஸ்பத்திரிக்கு 10 வைத்திய நிபுணர்கள் தேவை. இந்த பற்றாக் குறையைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை இரண்டு வாரங்களுக்குள் மாகாண சுகாதார அமைச்சு மேற்கொள்ளுமென அவர் மேலும் தெரிவித்தார். (ஒ)

## வவுனியாவில் வேவு நடவடிக்கை

வவுனியா,மார்ச்15

இலங்கை விமானப்படைக்குச் சொந்தமான தானியங்கு வேவு விமானம் நேற்றுக் காலை 9.00 மணியளவில் வன்னியில் ஏ-9 பாதையை அண்டிய பகுதிகளில் பறந்து வேவு நடவடிக்கையில் ஈடுபட்டதாக விடுதலைப் புலிகள் குற்றஞ் சாட்டியுள்ளனர்.

வன்னி மேற்கு மற்றும் கிழக்குப் பகுதியில் இந்த விமானம் நோட்டமிட்டதாகக் கூறப்பட்டது.

கடந்த சில தினங்களாக இந்த வேவு விமானம் வவுனியா பகுதியிலும் வேவு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது.

(ஒ-3-169)

## பேச்சுக்களில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தானப் பேச்சுக்களின்போது களத்தில் தமது உறுப்பினர்களின் பாதுகாப்புக்கு அரசிடமிருந்து உத்தரவாதத்தைப் பெறுவது என்ற அடிப்படையில் அப்பேச்சுக்களில் பங்குபற்ற வேண்டுமென விடுதலைப்புலிகள் தீர்மானிக்கலாம் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன்படி, ஜப்பானில் நடைபெறும் ஆறாவது சுற்றுப்பேச்சுக்களுக்கான நிகழ்ச்சி நிரல் மாற்றியமைக்கப்பட வேண்டும் என்று விடுதலைப் புலிகள் கோருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

கிழக்குக் கடலில் விடுதலைப் புலிகளின் படகு கடற்படையினரால் தாக்கப்பட்ட சம்பவம் காரணமாக ஜப்பானில் நடைபெறும் சமாதானப் பேச்சுக்களில் புலிகள் பங்குபற்றுவார்களா என்ற நிச்சயமற்ற நிலை நிலவுவது தெரிந்ததே.

இப்பேச்சுக்களில் பங்கு பற்றுவதா, இல்லையா? என்பதை கடந்த சில தினங்களாக ஆராய்ந்து வந்த புலிகளின் தலைவர்கள், நேற்றுமுன்தினம் இரவு கூடி மீண்டும் மந்திராலோசனை நடத்தினர்.

புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன், அரசியல் ஆலோசகர் அன்ரன்பாலசிங்கம், அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் ஆகியோரும் மற்றும் சில தலைவர்களும் நேற்றுமுன்தினமிரவு கிளிநொச்சியில் ஒன்றுகூடி இந்த மந்திராலோசனையில் ஈடுபட்டனர்.

சமாதானப் பேச்சில் புலிகள் பங்குபற்றுவதற்காக அப்பேச்சுக்களுக்கான நிகழ்ச்சிநிரல் மாற்றியமைக்கப்பட வேண்டும் என்ற கருத்து இந்தக் கூட்டத்தில் முன்வைக்கப்பட்டதாகத் தெரிகிறது.

கடந்த காலங்களில் புலிகள் இயக்கம் எதிர்நோக்க நேரிட்ட சிரமங்களுக்குத் தீர்வு தேடவும் கிழக்குக் கடலில் புலிகளின் கப்பல் தாக்கப்பட்டது போன்ற சம்பவங்கள் எதிர்காலத்தில் நடைபெறாதிருக்க அரசிடமிருந்து உறுதிமொழி பெறவும் ஜப்பான் பேச்சுக்களின்போது அரசுப் பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்த வேண்டும் எனற அபிப்பிராயங்களும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன.

ஜப்பானில் நடைபெறும் ஆறாவது சுற்றுப் பேச்சுக்களில் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கமும், அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனும் கட்டாயம் கலந்துகொள்ள வேண்டுமெனவும் அப்பேச்சுக்களில் பங்குகொள்ளும் ஏனைய உறுப்பினர்களை பாலசிங்கம் பெயர் குறிப்பிட வேண்டுமென ஒரு யோசனையும் இக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது எனவும் அறியப்படுகிறது.

(ஐ)

## மாற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிறார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தலைமையிலான தூதுக்குழுவில் நாடாளுமன்ற உறுப்பினர்களான திருமதி பேரியல் அஷ்ரப், நூர்டீன் மசூர் ஆகியோரும் இடம்பெற்றிருந்தனர்.

அரசுக்கும் - விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இடம்பெற்று வரும் பேச்சுக்களில் ஹக்கீம் அரசுப் பிரதிநிதியாகவே பங்குபற்றுகின்றார். முஸ்லிம் மக்களின் சார்பில் தனிக்குழு பேச்சில் பங்குபற்ற ஏற்பாடு செய்யவேண்டும் என்று தூதுக்குழுவினர் ஜனாதிபதியிடம் கேட்டுக்கொண்டனர்.

இது குறித்து முடிவு ஏதும் எட்டப்படவில்லை. (ஐ-3)

## புதிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னர் இணைக்கப்பட்ட வடமாகாண பலகலைக்கழகக் கல்லூரியின் பணிப்பாளராகவும் விவசாய பீடத்தின் படாதிபதியாகவும் பணியாற்றிய இவர், யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாக முதல்வராக இதுவரை பதவி வகித்து வந்தார். (ஒ-3-9)

## தமிழ்மக்களுக்கு சுயாட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றது.

பேச்சுகள் நடக்கலாம்; போராட்டங்கள் நடக்கலாம் ஆனால், யதார்த்தம் என்னவென்றால் தமிழர்களுக்கென்று ஓர் அரச நிர்வாகம் இருக்கின்றது. அந்த நிர்வாகத்துக்கொரு தலைமை இருக்கின்றது என்பதே ஆகும்.

இப்படி ஒரு விவரமான கட்டுரையை அந்தப் பத்திரிகையாளர் எழுதியிருந்தார்.

'அப்படியென்றால் தமிழர்களுக்கு என்ன குறை? இனி என்ன தேவை? ஒரு சில பகுதிகள் குறிப்பாக யாழ்ப்பாணப் பிரதேசம் மற்றும் சில நகரங்கள் ஸ்ரீலங்கா இராணுவத்திடம் இருக்கின்றன. அதை மீட்டெடுக்கவேண்டும். அப்படி மீட்டெடுத்தால் ஒரு முழுமையான தமிழர் அரசு வடக்கு - கிழக்கில் உருவாகும். அடுத்ததாக சர்வதேச அங்கீகாரம் அவர்களுக்குத் தேவை. இது ஒன்றுதான் எஞ்சியிருக்கின்ற ஒரே தேவை. வேறு ஒன்றும் அவர்களுக்குத் தேவையில்லை என்று அந்தப் பத்திரிகையாளர் தனது கட்டுரையில் விவரித்தார்.

சில தினங்களுக்கு முன்னர் கிளிநொச்சியில் மாவட்ட நீதிமன்றத்தை நான் திறந்துவைத்தேன். இப்போது பளையில் வைப்பகத்தை திறந்து வைத்துள்ளேன். இதில் இருந்து ஓர் உண்மை எனக்குப் புரிகின்றது. எமது நிர்வாக அலகுகள் பலப்பட்டு வருகின்றன.

யுத்தம் நடந்தாலும் சரி, சமாதான சூழ்நிலை இருந்தாலும் சரி எமது நிர்வாகம் தொடர்ந்து இங்கு இருக்க வேண்டும். எமது நிர்வாகம் தொடர்ந்து பலப்பட்டு வரவேண்டும். எமது நிர்வாக அலகுகளில் மக்களின் பங்களிப்பு இருக்கவேண்டும்.

அப்படியானால் ஏன் பேச்சு நடத்து கின்றீர்கள் என்று நீங்கள் கேட்கலாம். பேச்சை நாம் நடத்துவதற்குக் காரணம் இருக்கின்றது. பேச்சு நடத்துவதற்கு ஒரேயொரு காரணம், எமக்குச் சர்வதேச அங்கீகாரம் வேண்டும்.

எம்மைப் பொறுத்தவரையில் - தமிழீழ மக்களைப் பொறுத்தவரையில - இரண்டு நிலைமைகள் சாத்தியம். தமிழீழ அரசு அல்லது தமிழீழ சமஷ்டி அரசு. இந்த இரண்டு தீர்வுகளே சாத்தியப்பாடாக இருக்கின்றன என்று வைதுக்கொள்வோம். இந்த இரண்டு தீர்வுகளையும் தவிர வேறு மாற்றுவழி எமக்கு இல்லை.

தமிழீழ சமஷ்டி அரசு இங்கு உருவாவதற்கு சிங்களவர்கள் இணங்கவேண்டும். எம்மைப் பொறுத்தவரையில், அப்படியான சிந்தனை சிங்கள தேசத்தில் இல்லை. அதாவது, தமிழ் மக்களை அரவணைத்து அவர்களுக்கு சுயாட்சி அதிகாரம் வழங்கி, அவர்களின் தாயகத்தில் அவர்கள் நிம்மதியாக, கௌரவமாக, நிரந்தரமாக தம்மைத்தாமே ஆளும் ஒரு கட்டமைப்பை உருவாக்கிக் கொடுக்கவேண்டும் என்ற அந்த உணர்வு சிங்களவர்களிடம் இல்லை. ஆகவே, சிங்களவர்களுக்கு இறுதியான சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தை ஏற்று தமிழ்மக்களுக்கு அவர்களது தாயகத்தில் ஒரு சுயாட்சி அதிகாரமுடைய நிர்வாகத்தை உருவாக்கிக் கொடுக்க வேண்டும். இல்லாதுபோனால், புலிகளின் நிர்வாகம் தனி அரசாக மாறுவதை எவராலும் தவிர்க்கமுடியாது போய்விடும்.

- இவ்வாறு பாலசிங்கம் அங்கு தெரிவித்தார்.

(ஐ-3-8)

## தமிழக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லில் மூழ்கடிக்கப்பட்டும் உள்ளன.

தீக்குளித்து இறக்கப் போவதாக இராமேஸ்வரம் மீனவர்கள் எச்சரித்திருப்பதால் ராமேஸ்வரத்தில் தொடர்நது பதற்றம் நிலவிவருகிறது. (ஐ)


இந்திய ஜோதிடர் யாழ்.விஜயம்

ஸ்ரீ சோடா நிகரை பகவதி அம்மன் அருள்பெற்று ஸ்ரீ வெட்டுடைய காளி அம்மன் வாக்குப் பெற்ற இந்தியப் பரம்பரை ஜோதிடர் யாழ்.வருகை தந்துள்ளார். கைரேகை, ஜாதகம், எண்கணிதம், மகப்பேறு, குடும்பப் பிரச்சினையா? கல்வி, வெளிநாடு செல்லத்தடையா? தொழிற்பிரச்சினையா? காதல் பிரச்சினையா? திருமணப் பிரச்சினையா? தீராத நோயா? எந்தவிதமான பிரச்சினைகளுக்கும் தக்க பரிகாரம் மூலம் தீர்வுகாணலாம்.

ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள்!

மணிசாமி P.T.R.

யாழ். உல்லாசப் பயணிகள் விடுதி.
இல. 54, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம் (வெலிங்டன் சந்தி அருகில்).
பார்வையிடும் நேரம்: காலை 9.00 மணிமுதல் மாலை 4.00மணிவரை
(இந்த மாதம் 19ஆம் திகதி வரையும்)
(15441)

UNIVAC
College Of Computer
Information Technology

புதிய கணனி
கற்கை நெறிகள்
ஆரம்பம் : 19.03.2003 4.00 p.m.
Note:- குறிப்பிட்ட எண்ணிக்கையான மாணவர்களுக்கே அனுமதிகள் வழங்கப்படும்.
17.03.2003 இற்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளவும்.
Mavadi Road, Sithankerny.
Director, UNIVAC

SPECIAL ENGLISH COURSE
FOR GRADE 9,10&11
SPOKEN ENGLISH WITH GRAMMAR
Lectures By:
Mr. S.B.SASI
புதிய பிரிவுகள் ஆரம்பம்
15.03.2003 Sat. 3.00 p.m.
NEW HARY'S INSTITUTE
Mavadi Road, Sithankerny.
(15521)

தென்னிந்தியாவில் இருந்து



முதன்முறையாக யாழ்ப்பாணம் என்னும் புண்ணிய பூமிக்கு வருகைதந்துள்ள பரம்பரை சோதிடக் கலையில் புகழ்பெற்ற சிவபால ஜோதிடர்
ராஜகுருசாமி அவர்கள்
★ கைரேகை ★ ஜாதகம் ★ எண்கணிதம்
★ பெயர்ராசி ★ திருமணப்பொருத்தம்
இவற்றில் பலவருட அனுபவமும் புகழும் பெற்றவர்.
காலை 9 மணிமுதல் பிற்பகல் 2 மணிவரை கைரேகை பார்க்கப்படும். இம்மாதம் இறுதிவரை மட்டுமே தங்கியிருப்பார்.
ராஜகுருசாமி
மிலேனியம் மல்ரி கொம்பிளக்ஸ்
60/1 (112), TEMPLE ROAD [Near ICRC], JAFFNA.
(15530)

LIONAIR
LANKA'S PRIDE IN THE SKY
யாழ்ப்பாணம் – கொழும்பு – யாழ்ப்பாணம்
பாதுகாப்பான ~ சௌகரியமான பயணம்
★ பலாலி விமான நிலையத்திலிருந்து யாழ்.நகருக்கும் யாழ்.நகரிலிருந்து பலாலி விமான நிலையத்திற்கும் இலவச போக்குவரத்துச் சேவை.
★ இரத்மலானை விமான நிலையத்திலிருந்து பம்பலப்பிட்டி சந்திக்கும் பம்பலப்பிட்டி சந்தியிலிருந்து இரத்மலானை விமான நிலையத்துக்கும் இலவச போக்குவரத்துச் சேவை.
பதிவுகளுக்கு :
லயன்எயர் ரிக்கெற் அலுவலகம்
யாழ்ப்பாணம்
# 1-T, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 0777-733992
(C/26688)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 15.03.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# ஈராக் தொடர்பாக மற்றுமொரு தீர்மானம் கொண்டுவர முயற்சி!

## அமெரிக்க, பிரிட்டிஷ் முயற்சி தோல்வி

நியூயோர்க்,மார்ச் 15

ஈராக் விவகாரத்தால் ஐ.நா. பாதுகாப்புச் சபையில் ஏற்பட்ட குழப்பம் நீடிக்கின்றது. பிரிட்டன் மற்றும் ஸ்பெயினின் ஆதரவுடன் ஈராக் மீது போர் தொடுக்கக் கோரி கொண்டு வந்த தீர்மானம் நிறைவேறாத நிலையில் அதனை வாபஸ்பெற வேண்டிய இக்கட்டுக்குள் அமெரிக்கா தள்ளப்பட்டுள்ளது. எனினும், சதாமிடம் இருந்து பேரழிவு ஆயுதங்களைக் களைவது தொடர்பாகப் பாதுகாப்புச் சபையில் புதிய பிரேரணை ஒன்றைக் கொண்டு வருவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்த நிலையை அடுத்து ஈராக் விவகாரம் தொடர்பாக இன்னும் ஒரு வாரகாலத்துக்கு, தான் காத்திருக்கத் தயார் என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது. அதேவேளை, வளைகுடாவில் யுத்தத் தயாரிப்புக்களை புஷ் நிர்வாகம் மேலும் தீவிரப்படுத்தியிருக்கின்றது. எந்த நேரமும் தாக்குதல் நடத்தக்கூடிய முழுத் தயார் நிலையில் 800 விமானங்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

முன்னதாக, வியாழனன்று பாதுகாப்புச் சபையில் நடந்த கூட்டத்தில் ஈராக் விவகாரம் குறித்து எந்த முடிவும் எட்டப்படவில்லை. கூட்டத்தின் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய ஐ.நாவுக்கான தூதர்கள் பலர் சமரசம் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் எதுவும் இல்லை என்று கூறினர்.

ஈராக் தொடர்பான 2ஆவது தீர்மானத்தை பாதுகாப்புச் சபையில் வாக்கெடுப்புக்கு விடுமாறு அமெரிகா, பிரிட்டன் மற்றும் ஸ்பெயின் ஆகியவை தொடர்ந்து வற்புறுத்துவதால் எந்தப பயனும் ஏற்படப்போவதில்லை என்று அவர்கள் தெரிவித்தனர்.

தீர்மானம் வாக்கெடுப்புக்கு விடப்பட்டிருந்தால் தம்மால் பெரும்பான்மையை நிரூபிக்க முடிந்திருக்கும் என்று அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் கொலின் பவல் கூறினார். ஆனால், தீர்மானம் நிறைவேறாமல் இருக்க தமது வீட்டோ அதிகாரத்தை பயன்படுத்துவோம் என்று ரஷ்யாவும் பிரான்ஸும் திட்டவட்டமாக முன்னமே தெரிவித்திருந்தன.

இதேவேளை -

நேற்று வெள்ளிக்கிழமை பின்னதாக தம்வசம் இருக்கும் ஆயுதங்களின் முழுமையான விவரங்களை ஈராக் ஐ.நா. ஆயுதக் கண்காணிப்பாளர்களிடம் ஒப்படைக்க இருந்தது.

இந்த இக்கட்டு நிலைகளைத் தொடர்ந்து ஈராக் ஆயுதக் களைவு தொடர்பாக மற்றொரு தீர்மானத்தை உருவாக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இனிவரும் வாரம் முழுவதும் இதற்கான ராஜீய முயற்சிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இந்த முயற்சி வெற்றிபெற்றால் அடுதத வாரமளவில் புதிய தீர்மானம் பாதுகாப்புச் சபையில் சமர்ப்பிக்கப்படும்.

இதற்கிடையில் - போருக்கான திகதியை மட்டுமே எதிர்பார்த்திருப்பதாக அமெரிக்கப் படைகள் கூறுகின்றன. விரைவிலேயே அதிபர் புஷ் அதற்கான திகதியைக் குறித்துவிடுவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

ஈராக்கில் உள்ள இராணுவ முகாம்கள், அரண்மனைகள் மற்றும் பதுங்கு குழிகள் என்பவற்றை இரவு நேரத்திலும் செய்திமதிகளின் உதவியுடன் கண்டுபிடித்து அவற்றின் மது குண்டுகளை வீசுவதற்கான மிக நவீன ஏற்பாடுகளை அமெரிக்கா செய்துள்ளது.

மக்கள் அதிகம் வசிக்கும் பகுதிகள், மசூதிகள், எண்ணெய் சேமிப்பு கிடங்குகள் என்பவற்றின் மீது குண்டு வீசக்கூடாது என்பதில் அமெரிக்கப் படைகள் அதிக கவனம் செலுத்தி வருவதால் இத்தகைய நவீன ஏற்பாடுகளில் அது மிகத் தீவிரம் காட்டி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.



வடகொரியாவின் நடவடிக்கைகளால் கொரியக் குடாவில் பதற்றம் அதிகரித்துள்ளதை அடுத்து தென்கொரியாவும் அமெரிக்காவும் இணைந்து போர்ப் பயிற்சியில் ஈடுபட்டுவருகின்றன. பயிற்சிக்கு முன்பாக தமது உபகரணங்களைச் சரிபார்க்கும் தென்கொரியச் சிப்பாய்களைப் படத்தில் காணலாம்.

## காஷ்மீரில் தீவிரவாதிகள் தாக்கு!

புதுடில்லி,மார்ச்15

இந்தியாவின் காஷ்மீர் மாநிலத்தில் ஆயுததாரிகள் சந்தை ஒன்றின் மீது நடத்திய துப்பாக்கிச் சூட்டில் பொலீஸ் அதிகாரி ஒருவர் கொல்லப்பட்டார்; மேலும் பல பொதுமக்கள் காயமடைந்தனர்.

பூஞ் நகரில் நேற்று இந்தச் சம்பவம் இடம்பெற்றது. இந்த நகரம் பாகிஸ்தானின், எல்லையை ஒட்டி அமைந்திருக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

அருகில் இருந்த ஹோட்டல் ஒன்றில் இருந்து வெளியே வந்த ஆயுததாரிகள் சிலர் சந்தையை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்ததுடன் கிரனேட்டுக்களையும் வீசினர்.

சமபவம் இடம்பெற்றதை அடுத்து அப்பகுதியில் பெரும் பதற்றம் ஏற்பட்டது. கடைகள் மூடப்பட்டன. நகரம் வெறிச்சோடியது. முன்னதாக, காஷ்மீரில் தாம் 5 தீவிரவாதிகளை சுட்டுக்கொன்றதாக இராணுவம் தெரிவித்தது. காஷ்மீரின் கோடை காலத் தலைநகர் அருகே அந்தச் சம்பவம் இடம்பெற்றது. (ம)

## இந்திய மாணவன் அமெரிக்காவில் கைது!

வாஷிங்ரன்,மார்ச்15

அமெரிக்காவின் வாஷிங்ரன் மாகாணத்தில் உள்ள பர்டியூ பல்கலைக்கழகத்தில் இந்தியாவைச் சேர்ந்த மாணவர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். பல்கலைக்கழகத்தில் அணுகுண்டு வெடிக்கும் என்று ஈ-மெயில் மூலம் மிரட்டல் விடுத்ததன் காரணமாகவே இவரைக் கைதுசெய்ததாக அவர் தெரிவித்தார்.

ராஜேஷ் ஜி.மன்யர் (வயது 23) என்ற இளைஞரே கைதுசெய்யப்பட்டவராவார். அந்தப் பல்கலைக்கழகத்தின் இரசாயனவியல்துறை ஆராய்ச்சி உதவியாளராகவும் அவர் உள்ளார்.

கடந்த 7ஆம் திகதி அவர் தன்னுடன் கற்கும் மற்றொரு மாணவரின் ஈ-மெயில் முகவரி மூலம், அந்தப் பல்கலைக்கழகத்தின் உதவித் தலைவருக்கு ஒரு கடிதம் அனுப்பியுள்ளார். அதில் பல்கலைக்கழக வளாகத்துக்குள் அணுகுண்டு வெடிக்கும் என்று மிரட்டல் விடுத்திருந்தார்.

அமெரிக்க சிறப்புப் பொலீஸார் இதுபற்றி விசாரணை நடத்தினார்கள். ராஜேஷ்தான் அந்த மிரட்டல் ஈ-மெயிலை அனுப்பியதை அவர்கள் கண்டு பிடித்தார்கள். அவரைக் கைதுசெய்தனர். (ம)



ஜெருசலேமுக்கு அருகே உள்ள கபுஸா சோதனை நிலையத்தில் பலஸ்தீனர் ஒருவரை தீவிரமாகச் சோதனை செய்யும் இஸ்ரேலியச் சிப்பாய். நேற்று இஸ்ரேலியப் படைகள் ஜெனின் அகதி முகாமில் நடத்திய தேடுதலில் வழமைபோன்று குறைந்தது 5 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர். எங்கும் சோதனைகள் ஒரேமாதிரியானவைதான்.

## செயற்கை மூளை உருவாக்கப்பட்டது!

### அமெரிக்க விஞ்ஞானிகள் சாதனை

லண்டன்,மார்ச்15

நினைவாற்றல், மனநிலை, விழிப்புணர்வு ஆகியவற்றை கட்டுப்படுத்தக்கூடிய பகுதிகளை மட்டும் கொண்ட செயற்கை மூளை ஒன்றை விஞ்ஞானிகள் உருவாக்கி உள்ளனர்.

அமெரிக்காவின் கலிபோர்னியா பல்கலைக் கழகத்தின் ஆராய்ச்சியாளர்கள் இந்த செயற்கை மூளையை வடிவமைத்துள்ளனர்.

'சிலிக்கன் சிப்'தான் இந்த செயற்கை மூளையின் அங்கம் ஆகும். மூளையில் உள்ள ஹிப்போகேம்பஸ் என்ற பகுதியின் செயற்பாடுகளை இது செய்யும். விபத்துக்களில் சிக்கி மூளை பாதிப்படைந்தவர்களுக்கு இந்த செயற்கை மூளை உதவியாக இருக்கும் என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

இது முதலில் எலிகளின் உடலில் பொருத்தப்பட்டு பரிசோதிக்கப்படும். அந்தச் சோதனை வெற்றி பெற்ற பின்னர் பக்கவாதம், மூளைக்காய்ச்சல் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இந்த செயற்கை மூளை பொருத்தப்பட்டு சோதிக்கப்படும். (ம)

## இஸ்ரேலியரின் தாக்குதலில் ஐந்து பலஸ்தீனர்கள் பலி!

ஜெருசலேம்,மார்ச்15

இஸ்ரேலிய இராணுவத்தினர் மேற்குக்கரையின் ஜெனின் நகரில் உள்ள அகதி முகாமில் நடத்திய தேடுதல்களின் போது குறைந்தது 5 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர்.

கவச வாகனங்கள் பின்தொடர வந்த 10 இஸ்ரேலிய டாங்கிகள் இந்தத் தாக்குதலை மேற்கொண்டதாக நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர். டாங்கிகளுக்கு உதவியாக இரு ஹெலிகளும் தாக்குதலில் ஈடுபட்டன.

இந்தத் தாக்குதல் குறித்து கருத்துத் தெரிவித்த இஸ்ரேலிய இராணுவத் தரப்பு அகதி முகாமில் இருந்து தம்மை நோக்கி கடும் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதாகத் தெரிவித்தது. அதனைத் தொடர்ந்து தாம் நடத்திய தேடுதலில் எம்-16, ஏ.கே-47 ரக துப்பாக்கிகளும் வெடிப்பொருள்களும் கைப்பற்றப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. இஸ்ரேலிய இராணுவச் சீருடைகளும் கைப்பற்றப்பட்டதாக இராணுவப் பேச்சாளர் கூறினார்.

மற்றொரு சம்பவத்தில் நப்லஸுக்கு அருகே வடகிழக்கே உள்ள தமூன் நகரத்திற்குள் நுழைந்த இஸ்ரேலிய இராணுவத்தினர் அங்கு 5 பலஸ்தீனர்களைச் சுட்டுக்கொன்றுள்ளனர். அவர்கள் அனைவரும் ஆயுதக் குழுக்களைச் சேர்ந்தவர்கள் என்று இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர். தம்மைத் தாக்குவதற்கு அவர்கள் திட்டமிட்டுக் கொண்டிருந்தபோது தாம் அவர்கள் மீது தாக்குதல் நடத்தியதாக அவர்கள் மேலும் கூறினர்.

மறறொரு சம்பவத்தில் இரு இஸ்ரேலியச் சிப்பாய்கள் உயிரிழந்தனர். தற்செயலாக துப்பாக்கி வெடித்ததில் இந்தச் சம்பவம் இடம்பெற்றதாகக் கூறப்பட்டது. (ம)

## 200பேர் கைது!

பெல்கிரேட்,மார்ச்15

சேர்பியப் பிரதமர் ஜிண்ட்ஜிக் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக இதுவரை 200 பேர் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

முன்னாள் ரகசியப் புலனாய்வுத் துறைத் தலைவர் மற்றும் பயங்கரவாதத் தடுப்புக் குழுவின் முன்னாள் தளபதி ஆகியோரும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். சேர்பிய துணைப் பிரதமர் இத்தகவல்களை வெளியிட்டார். (ம)



வடகொரியா தன் அணுஉலைகளை கடந்த மாதம் மீண்டும் இயக்க ஆரம்பித்ததைத் தொடர்ந்து கொரியக் குடாவில் பதற்றம் அதிகரித்துள்ளது. அந்த உலைகளில் அணுவாயுதங்களை வடகொரியா தயாரிக்கிறதா என்பதை தனது உளவு விமானங்கள் மூலம் உளவறிந்து வருவதாக அமெரிக்கா கூறிவருகின்றது. விரைவில் வடகொரியா பலஸ்டிக் ஏவுகணைப் பரிசோதனை ஒன்றில் ஈடுபடும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. இதனை அடுத்து உளவு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. அவ்வாறு அமெரிக்காவால் உளவறியப் பயன்படுத்தப்படும் உளவு விமானம் ஒன்றே இது.

### ஈராக் போரை ஆதரித்துப் பேசியதன் எதிரொலி

## ஆஸ்திரேலியப் பிரதமர் மீது நேற்று முட்டை வீச்சு!

ஈராக் மீதான போரை ஆதரித்து நாட்டு மக்களுக்கு உரையாற்றியதற்காக ஆஸ்திரேலியப் பிரதமர் ஜோன் ஹவார்ட் மீது போர் எதிர்ப்பாளர்கள் முட்டை மற்றும் தக்காளிகளை வீசித் தாக்கினர்.

வியாழனன்று நாட்டு மக்களுக்கு உரையாற்றிய ஹவார்ட் ஈராக் மீது போர் தொடுக்கவேண்டியதன் அவசியம் குறித்து வலியுறுத்தினார். இந்த விடயத்தில் அமெரிக்காவின் நிலைப்பாட்டை ஆதரித்தும் அவர் பேசினார்.

பினனர், நேற்று வெள்ளிக்கிழமை நாட்டின் தென் பகுதியில் உள்ள அடிலெய்ட் நகரில் ஆஸ்திரேலியப் பழங்குடியின மையத்தில் ஒரு நிகழ்ச்சியில் கலந்துகொள்வதற்காக அவர் வந்திருந்தார்.

அங்கு கூடியிருந்த போர் எதிர்ப்பாளர்கள் நூற்றுக்கணக்கில் கூடி பிரதமரின் முதல் நாள் பேச்சுக்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர். அத்துடன் நிற்காமல் பிரதமர் மீது முட்டைகள் மற்றும் தக்காளிகளை வீசியும தாக்கினர். இதனை அடுத்து பிரதமரின் மெய்ப்பாதுகாவலர்கள் அவரைப் பாதுகாப்பாக அங்கிருந்து அப்புறப்படுத்தினர். (ம)

## நீல் ஆம்ஸ்ரோங் வாழ்க்கை சினிமாவாக எடுக்கப்படுகிறது

லொஸ்ஏன்ஜெல்ஸ்,மார்ச்15

சந்திரனில் முதன் முதலில் கால் பதித்த அமெரிக்கரான நீல் ஆம்ஸ்ரோங்கின் வாழ்க்கை முழு நீள சினிமாவாக எடுக்கப்படவிருக்கின்றது.

ஹொலிவூட் நடிகர் கிளிண்ட் ஈஸ்ட் வுட் தயாரித்து இயக்குகின்றார்.

ஏற்கனவே ஆம்ஸ்ரோங்கின் வாழ்க்கைச் சரிதத்தை ஜேம்ஸ் ஆர்.ஹானசன் புத்தகமாக எழுதி வெளியிட்டுள்ளார். 'முதல் மனிதன் நீல் ஆம்ஸ்ரோங்கின் ஒரு வாழ்க்கை' என்ற அந்தப் புத்தகத்தின் சினிமா உரிமையை கிளிண்ட் ஈஸ்ட்வுட் வாங்கி இருக்கிறார்.

இந்தப் புத்தகத்தின் அடிப்படையிலேயே சினிமாவை தயாரிக்கவும் அவர் திட்டமிட்டுள்ளார். ஆம்ஸ்ரோங் சந்திரனில் காலடி வைத்தது என்பதே அமெரிக்க விஞ்ஞானிகளின் கட்டுக்கதை என்று பரபரப்பான செய்திகள் வெளியாகி வரும் இவ்வேளையில் ஆம்ஸ்ரோங்கின் வாழ்க்கை சினிமாவாகப் போகின்றது. (ம)

## விற்பனைக்கு

PROFISSIONAL VIDEO EDITING செய்யக்கூடிய Canada தயாரிப்பான MATROX - RT - 2000 Card உடன் இரண்டு கணனிகள் சகல விதமான VIDEO EDITING SOFTWAREகளுடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: S.அரவிந்தன்
309, நாவலர் வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
T.P.: 222 2190
(15605)

## மணமகள் தேவை

1966, 68, 76ஆம் ஆண்டுகளில் பிறந்த லண்டன், கனடா, நோர்வே சிற்றிசன் உள்ள மணமகன்களுக்கும் 1974, 1968ஆம் ஆண்டுகளில் பிறந்த வெளிநாட்டிலுள்ள எஞ்ஜினியர் மணமகன்களுக்கும் 1967ஆம் ஆண்டு பிறந்த யாழ்ப்பாண டாக்டருக்கும் மணமகள்கள் தேவை. யாழ்ப்பாண டாக்டருக்கு டாக்டர் மணப்பெண் விரும்பத்தக்கது.

சந்திக்கும் நேரம்: பி.ப.2.00மணி - மாலை 6.00மணி

துரைசிங்கம் - ரவீந்திரன்
C/o ஐயரம்மா
70, சட்டநாதர் வீதி, நல்லூர்.
T.P.: 222 3873 (15606)

## சண்டிலிப்பாய் கோட்ட மெய்வல்லுநர் போட்டி

வலி.தெற்கு,மார்ச்15

சண்டிலிப்பாய் கல்விக்கோட்டப் பாடசாலைகளின் கனிஷ்ட, சிரேஷ்ட தரங்களுக்கான வருடாந்த மெய்வல்லுநர் போட்டி மானிப்பாய் இந்துக கல்லூரி மைதானத்தில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2மணிக்கு நடைபெறவுள்ளது.

சண்டிலிப்பாய் கல்விக்கோட்ட கல்விப்பணிப்பாளர் க.தனபாலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டிகளில் வலிகாமம் கல்விவலய கல்விப் பணிப்பாளர் திருமதி றெ. இருதயநாதன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். வலிகாமம் வலய கல்வி அபிவிருத்தி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி சந்நாகராசா சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்வார். (ம-152)

## தொழிலாளர்கள் தேவை

1. கட்டட மேற்பார்வையாளர்கள்
2. மேசன்
3. தச்சுத் தொழிலாளர்
4. கூலித் தொழிலாளர்

தகுதியானவர்கள் சுயவிவரங்களுடன் உடன் அலுவலகத்திற்கு சமுகம் தரவும். தகுந்த வேதனம் வழங்கப்படும்.

மனிதவள முகாமையாளர்
யூரோவில், 866, பருத்தித்துறை வீதி, நல்லூர்.
(சி-26960)

## IBMS போட்டிப் பரீட்சை - 2003

**முதல் 10 இடங்களைப் பெறுவோர்**

| | | | |
|---|---|---|---|
| 1.N.Kiritharan | Sch vi 631 | 6.A.Sivajini | sch vi 503 |
| 2.M.Thivakaran | Sch vi 844 | 7.R.Anusha | sch vi 501 |
| 3.R.Thurkesananthini | Sch vi 1010 | 8.T.Thivaananth | sch vi 546 |
| 4.K.Ramanakaran | Sch vi 1008 | 9.K.Jeyanthiny | sch vi 132 |
| 5.B.Thayaparan | Sch vi 600 | 10.T.Suthargini | sch vi 116 |

வகுப்புக்கள் ஆரம்பம்
**18-03-2003**
**22-03--2003**

உங்களுக்குரிய கற்கை நெறிக்கான கட்டணம் முற்றிலும் இலவசம்.



உ

பருத்தித்துறை வியாபாரிமூலை பழவத்தை
**ஸ்ரீ காளிகாதேவி ஆலய வருடாந்த மஹோற்சவம்**

*அம்பிகை அடியார்களே!*

ஸ்ரீ காளிகாதேவி அம்பாளின் வருடாந்த மஹோற்சவமானது 09.03.2003 ஞாயிற்றுக்கிழமைமுதல் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

இன்று (15.03.2003) சனிக்கிழமை தேர் வெள்ளோட்டமும்
நாளை (16.03.2003) ஞாயிற்றுக்கிழமை வேட்டைத் திருவிழாவும்
17.03.2003 திங்கட்கிழமை தேர்த்திருவிழாவும்
18.03.2003 செவ்வாய்க்கிழமை சமுத்திரத் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

*சிவாச்சாரியர்கள்:*

ஆலய பிரதமகுரு:
**பிரம்மஸ்ரீ கிருஷ்ணமூர்த்திக் குருக்கள்**
கரவெட்டி சிந்தாமணி ஆலய பிரதமகுரு:
**பிரம்மஸ்ரீ சபாபதிக் குருக்கள்**

*இத்திருவிழா நாள்களில் அடியார்கள் வந்து தேவியைத் தரிசித்து இஷ்ட சித்திகளைப் பெற்று உய்வார்களாக.*

*வியாபாரி மூலை,*
*பருத்தித்துறை.*

பொ.சின்னையா
அறங்காவலர்.

*அருளாசி வேண்டிப் பிரார்த்திக்கும்:*
**யோகாஸ் கிறீம் ஹவுஸ்**
மந்திகை, புலோலி. (15600)

உ

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நம

# திருமண அழைப்பு

**அன்புடையீர்!**

நிகழும் மங்களகரமான சித்திரபானு வருடம் பங்குனித் திங்கள் 3ஆம் நாள் 17.03.2003 திங்கட்கிழமை பகல் 12.21 முதல் 1.50 வரை வரும் பூர நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய சுப முகூர்த்த வேளையில்,

*திரு. திருமதி சுப்பிரமணியம் – ஜெகசோதிமலர் தம்பதிகளின் செல்வப் புதல்வன் திருவளர் செல்வன்*
**சிவனேசன் (சிவா)**
*அவர்களுக்கும்*

*திரு. திருமதி சந்தனராஜா – சந்திரலேகா தம்பதிகளின் செல்வப் புதல்வி திருவளர் செல்வி*
**மேனகா**
*அவர்களுக்கும்*

கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலயத்தில் திருமாங்கல்ய தாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதிக்கும்வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**இங்ஙனம் தங்கள் நல்வரவை இனிதே விரும்பும்:**

திரு.திருமதி சுப்பிரமணியம் குடும்பம்,
திரு.திருமதி விக்னேஸ்வரன் குடும்பம்,
*சிவகுமார், விக்னேஸ்வரா ஜுவல்லர்ஸ்,*
*கே.கே.எஸ்.றோட், இணுவில்,*
*த.மு.2ஆவது லேன்,*
*மானிப்பாய் வீதி, மருதனார்மடம்.*



(இருவீட்டார் அழைப்பு)

திருமதி சந்தனராஜா (ராசு)
சகோதரர்கள்: தயா, ரமேஸ், சுஜாதா, ஜீவா குடும்பம்
*148, சிவப்பிரகாசம் வீதி,*
*நாச்சிமார் கோயிலடி,*
*யாழ்ப்பாணம்.*
(15597)

EXCELLENT COMPUTER EDUCATION @ AFFORDABLE PRICE

# யாழ் நகரில்

MARCH 15 முதல்

# GLOBAL VILLAGE
## COMPUTER EDUCATION

(A unit Of Soverign Infortech Pvt. Ltd.)

குறைந்த கட்டணத்துடன் சர்வதேச தரம்மிக்க சான்றிதழ் III

GV GV

**தரமான கணனி கல்வியுடன் சர்வதேச தரமுள்ள சான்றிதழ்**

**சிறப்பு சலுகைகள்**

★ சர்வதேச தரம்மிக்க சான்றிதழ்
★ தரம்மிக்க இலவச கைந்நூல்கள்
★ இலகு கட்டண முறை
★ வசதிக்கேற்ற நேர ஒழுங்கு
★ பயனுள்ள முறையில் செயன்முறைகள்
★ சிறந்த கணனி கூடம் மற்றும் நூலகம்

பெற்றோர்களே!
உங்கள் பிள்ளைகள்
சவால்மிக்க கணனியுலகில்
வெற்றிகான G.V.உடன் இணையுங்கள்.

தமிழ்நாடு எங்கும் 142 கிளைகளைக் கொண்டு வெற்றிகரமாக இயங்கும் ஒரே கல்வியகம்.

**COURSES**

HARDWARE Engineering
JAVA HTML & DHTML

OAC Office Automation Course
DOA Diploma Office Automation
DTP Desktop Publishing

தொடர்புகளுக்கு [New Distric Franchisee]

**GLOBAL VILLAGE COMPUTER EDUCATION**
**College Of Computer Studies**
302/1, நாவலர் வீதி,
ஆனைப்பந்தி (தபால் நிலையத்துக்கு அருகில்),
யாழ்ப்பாணம். T.P.: 0777 279034

| CORPORATE HEAD OFFICE BRANCH | BRANCH | FRANCHISEE |
|---|---|---|
| 19/2, FARM ROAD, COLOMBO - 15. | 116, SEA STREET, NEGOMBO. 031-35955, 38645 | 365, TRINCO RD., BATTICALOA. |

GLOBAL VILLAGE - QUALITIY IS TO OUR BRAND

# எதற்காக புதிய அரசு?

**சமாதான முயற்சிகள் மற்றும் பொருளாதார அபிவிருத்தி ஆகிய விடயங்களில் தற்போதைய அரசு முன்னைய அரசைவிட குறிப்பிடத் தக்களவு முன்னேற்றம் கண்டுள்ளது. இருப்பினும், இந்த அரசைக் கவிழ்க்க முயற்சிக்கும் எதிரணி, நாட்டுப் பிரச்சினைக்கு தெளிவான விளக்கத்தை நாட்டுமக்களுக்கு வழங்காது வெறுமனே புள்ளி விவ ரங்கள் மற்றும் அரசமைப்பு ரீதியான அதிகாரம் குறித்துப் பேசிவரு வது அரசியல் சந்தர்ப்பவாதம் என்கிறார் கட்டுரையாளர் காமினி வியன்கொட. "ராவய" வார இதழில் வெளியான கட்டுரையின் தமி ழாக்கத்தை இங்கு தருகிறோம்.**

அரசொன்று ஆட்சிக்கு வந்து ஓராண்டு முடிந்துள்ள வேளையில் புதிய அரசொன்றை நிறுவுவது குறித் துப் பேசுவது இன்று அரசமைப்புத் தேவையாக அமைந்துள்ளது. இதன் பின்னணியில் நான்கு முக்கிய கார ணங்களைக் காணக்கூடியதாயுள்ளது.

முதலாவது, அரசொன்று அமைக் கப்பட்டு ஓராண்டு முடிவடைந்ததும் அந்த அரசைக் கலைப்பதற்கு அர சமைப்பு ரீதியாக ஜனாதிபதிக்குக் கிடைக்கும் அதிகாரம்.

இரண்டாவது காரணம், ஜே.வி. பியுடனும் முஸ்லிம் காங்கிரஸிலுள்ள கிளர்ச்சியாளர்களுடனும் சேர்ந்து அரசை அமைக்கலாம் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள்ள நம்பிக்கை.

மூன்றாவது காரணம், சமாதான முயற்சிகளின்மூலம் விடுதலைப் புலி களிடம் நாட்டைக் கையளிக்காவிடி னும் நாட்டின் ஒருமைப்பாட்டிற்குப் பங்கம் ஏற்படாத விதத்தில் தற் போதைய அரசு செயற்படுமா என்ற அச்சம்.

நான்காவது காரணம், நாட்டிலுள்ள சாதாரண பொதுமக்கள் பொருளா தார ரீதியாக தரித்திரதாரிகளாகி இருக்கும் நிலையில் அந்த மக்களை அந்த நிலையில் இருந்து மீட்பது பொறுப்புள்ள எதிர்க்கட்சி என்ற வகையில் தமது கடமை என எதிர்க் கட்சியினர் தெரிவிக்கும் கருத்து.

அரசையோ அல்லது நாடாளு மன்றத்தையோ கலைப்பதற்கு ஜனா திபதிக்குள்ள அரசமைப்பு ரீதியான அதிகாரம் என்பது அரசைக் கலைப் பதற்கான காரணமாக அமையாது. ஆனால், இன்று எதிர்க்கட்சித் தலை வர்கள் ஜனாதிபதிக்குள்ள இந்த அதிகாரம் குறித்து அளிக்கும் விசேட முக்கியத்துவத்தைக் கவனத்தில் எடுக்கும்போது, வேறுவிதமாகச் சிந் திக்கத் தோன்றுகிறது. அதாவது, அர சைக் கலைப்பது தொடர்பான அரச மைப்பு அதிகாரம் என்பது நாடாளு மன்றத்தையோ அல்லது அரசையோ கலைப்பதற்கான அரசியல் காரணம் என்று அர்த்தம் கற்பிக்கப்படுகிறது.

இந்தக் கருத்திற்கு எவ்வளவு முன் னுரிமை அளிக்கப்பட்டாலும் ஜனாதி பதியிடமுள்ள இந்த அதிகாரத்தை ஒழிப்பதற்காக அரசு மேற்கொள்ள விருந்த அரசமைப்பிற்கான 19ஆவது திருத்தம் ஒன்றை உறுதி செய்தது. அதாவது, அரசு கலைக்கப்படமாட்டது என ஜனாதிபதி எழுத்துமூலம் உறுதி வழங்கினார். அந்த வாக்கு றுதிக் கடிதத்தை அரசு நம்பவில்லை எனவும் - அவ்வாறு அவர்கள் சந்தேகிப் பதால் அந்தக் கடிதத்தில் அளிக்கப் பட்ட வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டிய கடமைப்பாடு ஜனாதிப திக்கு இல்லை எனவும் - இப்போது ஒரு சிலர் கூறுகின்றனர்.

புதிய அரசொன்றை அமைப்ப தற்கு இரு விடயங்கள் கவனத்திற் கொள்ளப்படவேண்டும். முதலாவது விடயம் ஆட்சியிலுள்ள அரசின் இய லாமை. இரண்டாவது விடயம் ஆட்சி யிலுள்ள அரசின் இயலாமையை மற்றும் தவறுகளை நேர்சீர் செய்வது தொடர்பாகப் புதிதாக அமைக்கவுள்ள அரசிடமுள்ள மாற்று ஏற்பாடுகள்.

இந்நாட்டு மக்கள் தற்போதைய அரசை ஆட்சிபீடம் ஏற்றியது மூன்று முக்கிய காரணங்களின் அடிப்படை யிலேயே. இதில் முதலாவது யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவருதல். இரண் டாவது பொருளாதார சிக்கல்களிலி ருந்து நாட்டை மீட்டெடுப்பது. மூன் றாவது காரணம் சமூக மற்றும் அரசி யல் செயற்பாடுகளை ஜனநாயக மயப் படுத்தல் (ஊழலை ஒழிப்பது, நீதித் துறை மற்றும் பொலீஸ் சேவை ஆகியவற்றை அரசியலில் இருந்து விடு விப்பது போன்றவை)

மேலே குறிப்பிடப்பட்ட 3 விடயங் களில் மூன்றாவது விடயம் தவிர்ந்த ஏனைய விடயங்கள் தொடர்பாகத் தற்போதைய அரசு காட்டிவரும் ஒப் பீட்டு ரீதியான முன்னேற்றத்தை எவ ராலும் மறுக்கமுடியாது. சிஹல உறு மய மற்றும் ஜே.வி.பியினரின் கருத் துப்படி சமாதானப் பேச்சுக்கள் என் பது எமது (சிங்களப் பௌத்தர்களின்) தாயகத்தை புலிகளிடம் தாரைவார்த் துக் கொடுக்கும் முதலாவது ஒழுங் காகும்.

ஆனால், அண்மையில் நாட்டில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு கணிப் பீடுகளில் தற்போது மேற்கொள்ளப் பட்டுவரும் சமாதான முயற்சிகள் குறித்து பெரும்பாலான மக்கள் திருப்தி தெரிவித்துள்ளனர்.

இருப்பினும், இவ்வாறான இரு வேறு கருத்துக்கள் நிலவுவதைத் தவிர்க்க முடியாது. மக்களின் தீர்மா னம் எப்போதும் சரியாகவே இருக்கும் எனக் கூறமுடியாது. எனவே, பெரும் பான்மையினர் நிகழ்கால நிகழ்வுகளை ஏற்றுக்கொள்வதால் எதிர்காலம் சிறப் பாகவே அமையும் என எவராலும் பலாபலன் கூறமுடியாது.

ஆனால், மறுபுறத்தில் பேச்சுக் களை விட யுத்த ரீதியான நடவடிக் கைகளே பொருத்தமானவை என இதுவரை சிஹல உறுமயவோ அல் லது ஜே.வி.பியோ அவர்களது கோணத்தில் எதிர்ப்பைத் தெரிவித் துள்ளனவே தவிர எந்தவொரு யதார்த் தமான வழிமுறைகளையும் நாட்டிற்கு எடுத்துக் கூறவில்லை.

சகல வரலாற்று அனுபவங்களும்

**தமிழில்: கஜனி**

(ஸ்ரீலங்காவைப் போன்று ஏனைய நாடுகளிலும்) எதை எடுத்துக்காட்டு கின்றன? யுத்தத்தைவிட சமாதானப் பேச்சுக்களே நல்ல பிரதிபலனை அளிக்கும் என்பதையே அவை நிரூ பித்துள்ளன. ஆனால், இலங்கையின் சமாதானப் பேச்சுக்களின் எதிர்காலம் குறித்து தீர்க்கமாக எதையும் கூறமுடி யாதுள்ளது என்பது உண்மையே. இது சமாதான முயற்சிகளில் ஈடுபட் டுள்ளவர்களுக்கு மாத்திரமன்றி சமா தான முயற்சிகளை எதிர்ப்பவர்களுக் கும் பொருந்தும்.

அடுத்ததாக, பொருளாதார நிலை குறித்து நோக்கும்போது தற்போதைய அரசு ஆட்சிக்கு வந்தபோது இருந்த நிலைமையை கவனத்தில் எடுத்தால் பொருளாதார வளர்ச்சி மூன்று சத வீதத்தால் அதிகரித்துள்ளதைக் காண முடிகிறது. இது குறிப்பிடத்தக்க வளர்ச்சியாகும். இருப்பினும், நாட்டின் பொருளாதார அபிவிருத்தி வேகத்தின் மூலம் பொதுமக்களுக்கு தேவையான அனைத்துப் பொருளாதார சலுகை களையும் வழங்கிவிடமுடியாது. அதேபோல் பொருளாதார நடவடிக் கைகளில் திட்டமிட்ட ஊழல்கள் இடம்பெறின் பொருளாதார வளர்ச்சி யில் கிடைக்கும் நன்மைகள் எவை யும் பொதுமக்களைச் சென்றடைய மாட்டா.

மாவின் விலை அதிகரிப்பு மற் றும் சமையல் காஸின் விலை அதி கரிப்பு என்பன தொடர்பாக கடந்த அரசு சம்பந்தப்பட்ட நிறுவனங்களு டன் (பிறிமா மற்றும் ஷெல் நிறுவ னம்) மேற்கொண்ட ஒப்பந்தங்களே விலையுயர்வுக்குக் காரணம் எனத் தற்போதைய ஆட்சியாளர்கள் கூறு கின்றனர். முன்னைய ஆட்சி செய்த ஊழல்களை ஒழிப்பதற்காகவே நாட்டு மக்கள் தற்போதைய அரசை ஆட்சி பீடம் ஏற்றியுள்ளனர். நிலைமை இவ் வாறு இருக்கையில் கடந்த அரசு மேற்கொண்ட ஒப்பந்தங்கள் இந் நாட்டிற்கும் மக்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்துகின்றன எனக் கூறுவதை விடுத்து - அவர்களை விரல் நீட்டித் திட்டுவதை விடுத்து - தற்போதைய அரசு அந்த ஒப்பந்தங்களுக்கு திருத் தங்களைக் கொண்டுவருவதே பொருத் தமானதாகும்.

இவை அனைத்தையும் ஒன்று திரட்டிச் சிந்திக்கும் போது கடந்த அரசைவிடத் தற்போதைய அரசு சமாதான முயற்சிகளில் முன்னேற் றம் கண்டுள்ளதுடன் பொருளாதாரத் துறையிலும் ஒப்பீட்டு ரீதியில் ஓர ளவு வளர்ச்சி கண்டுள்ளதை அவ தானிக்கமுடிகிறது.

நிலைமைகள் இவ்வாறு இருக் கும்போது புதிய அரசு அமைக்கப் படவேண்டும் எனப் பொ.ஐ.முன்ன ணியும் ஜே.வி.பியும் கங்கணம் கட்டு வது ஏன்? அவர்கள் முக்கியமான இரு வினாக்களுக்கு விடையளித்தே யாக வேண்டும். யுத்தம் அல்லது சமாதான முயற்சிகள் தொடர்பாக அவர்கள் மேற்கொள்ள எதிர்பார்க்கும் திட்டங்கள் எவை என்பது முக்கிய மான கேள்வியாகும். யுத்தமா? அல் லது பேச்சா? பேச்சு எனில் யாருடன்? (ஜனாதிபதியுடன பேச்சுக்களை மேற் கொள்வதில்லை என விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.) அது என்ன தீர்வின் அடிப்படையில்?

இரண்டாவது வினா பொதுமக்க ளைப் பொருளாதாரச் சுமையில் இருந்து மீட்பது தொடர்பானதாகும். அவர்கள் தமது பொருளாதாரத் திட் டங்களை முன்வைக்கவேண்டும். அந்தத் திட்டங்கள் அவர்கள் ஆட்சி செய்த காலத்திட்டங்கள் (1994-2000) போன்றவை அல்ல என்பதை அவர் கள் உறுதிப்படுத்துவது அவர்களது பொறுப்பாகும்.

யுத்தம் மற்றும் பொருளாதார அபிவிருத்தி ஆகிய இரு விடயங்க ளில் ஆட்சியை அமைக்க முயற்சிக் கும் பொ.ஐ.முன்னணியும் ஜே.வி. பியும் இருவேறு துருவங்களில் உள் ளவை. உடன்பாடு எட்டப்படும் நிலையை அண்டிவிட்டதாகத் தெரி விக்கப்படுகிறது. அவை எவை? அதி காரங்களைப் பரவலாக்க ஜே.வி.பி. உடன்படுகிறதா? இல்லையேல் யுத் தத்தை மேற்கொள்வதற்கு ஸ்ரீல சு.கட்சி உடன்படுகிறதா? தனியார் மயமாக்கலுக்கு ஜே.வி.பி. உடன்ப டுமா? அல்லது தேசியமயமாக்கும் கொள்கைக்கு ஸ்ரீல.சு.கட்சி இணங் குமா?

இவை யாவற்றிற்கும் விளக்கம் அளிக்கப்படாவிடின் எட்டப்படும் புரிந்துணர்வு உடன்பாடானது கட்டா யமாக மீண்டும் பொதுமக்களை ஏமாற்றும் ஏமாற்று வித்தையாகவே அமையும்.

சமாதானம் மற்றும் பொருளா தார விடயங்கள் இவ்வாறு இருக் கையில் சமூகத்தை ஜனநாயகய மாக்கல் மற்றும் அரச நிறுவனங்க ளில் அரசியல் தலையீடுகளை ஒழித் தல் ஆகிய விடயங்களில் தற் போதைய அரசு குறிப்பிடத்தக்களவு வெற்றி காணவில்லை என்பது தெளி வாகிறது. லிப்டன் சுற்றுவட்டத்தில் ஆர்ப்பாட்டம் இடம்பெறுவதுபோல் உயர்நீதிமன்ற வளாகத்திற்குள் பதாதைகளைக் காட்சிக்கு வைக்கும் அளவிற்கு பிரதம நீதியரசர் சில்ல றையாகிவிட்டார். மனித உரிமைகள் மறுக்கப்பட்டவர்கள் நீதி கோரி நீதி மன்றம் செல்லும்போது அவர்கள் வீடு திரும்ப முடிவதில்லை; சிறைக்கு அனுப்பப்படுகிறார்கள். மேளதாளங் களுடன் ஆரம்பிக்கப்பட்ட ஆணைக் குழுக்கள் செயற்படாமல் முடங்கிக் கிடக்கின்றன. ஊழல் மற்றும் லஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு கூட ஊழல் நிறைந்ததாகக் காணப்படுகிறது. தேசத்தின் சொத்துக்களைப் பாது காக்கக் கடமைப்பட்டுள்ள அரச சொத்துக்களுக்குப் பொறுப்பான ஆணையாளர் பேருண்டிப் பிரியராகி விட்டார்.

இந்தத் தவறுகள் அனைத்தும் தொடர்ந்து இடம்பெற்றுவருவதற்கு அடிப்படைக்காரணம் கடந்த அரசே. எனவே, தற்போதைய அரசைக் கவிழ்ப்பதற்கு இந்தக் காரணங்களை நியாயப்படுத்த முடியுமாயினும் கடந்த அரசு மீண்டும் ஆட்சியைப் பொறுப் பேற்பதற்கு இவை போதுமானவை அல்ல. இந்த வினாக்களுக்கு, நாட்டு மக்களுக்கு தெளிவான பதில்களை வழங்காது புதிய அரசை அமைப்ப தற்கு தம்மிடமுள்ள புள்ளிவிவரங் கள் மற்றும் அரசமைப்பு ரீதியான அதிகாரங்கள் குறித்துப் பேசுவது அர சியல் சந்தர்ப்பவாதமாகும்.

★

# உலகக் கோடீஸ்வரர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி

உலகில் உள்ள கோடீஸ்வரர்க ளின் தொகை படிப்படியாகக் குறை வடைந்து வருவதாக அமெரிக்காவி லிருந்து வெளிவரும் ':.போபிஸ்' (Forbes) வர்த்தக சஞ்சிகையில் வெளி யிடப்பட்டுள்ள விவரங்களிலிருந்து தெரியவந்துள்ளது. இச்சஞ்சிகை யின் புதிய வெளியீடு அண்மையில் வெளியிடப்பட்டுள்ளது. அதன் முக் கிய கட்டுரையாக உலகத்தில் இன் றுள்ள கோடீஸ்வரர்கள் பற்றிய தக வல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

உலகின் பல நாடுகளிலும் வசிக் கும பில்லியன் டொலருக்கும் மேலதி கமான (நூறு கோடி டொலர்) சொத் துக்களுக்கு உரிமையாளர்கள் பற் றிய சுவையான விவரங்கள் இப் புதிய வெளியீட்டில் தரப்பட்டுள்ளன. உல கத்தில் உள்ள கோடீஸ்வரர்கள் தொடர்பான சரியான விவரங்களை வருடாவருடம் வெளியிடுவதே இப் ':.போபிஸ்' சஞ்சிகையின் நடவடிக்கை.

இச்சஞ்சிகையில் தெரிவிக்கப்பட் டிருக்கும் விவரங்களின்படி இவ்வரு டத்தில் உலகத்தில் உள்ள கோடீஸ் வரர்களின் எண்ணிக்கை 476. 2002 ஆம் ஆண்டில் இந்த எண்ணிக்கை 497ஆக இருந்தது. 2001ஆம் ஆண் டில் இந்த எண்ணிக்கை 538 ஆக இருந்ததாக சஞ்சிகை குறிப்பிட்டுள் ளது.

இன்று உலகத்தின் 43 நாடு களைச் சேர்ந்த 476 பேர் கோடீஸ் வரர்களாக வாழ்ந்து வருகின்றனர். அவர்களில் 222 பேர் அமெரிக்கப் பிரஜைகள். இந்த 476 கோடீஸ்வரர் களின் சொத்துக்களை ஒன்று சேர்த் தால் அது ஒருலட்சத்து 40 ஆயிரம் கோடி டொலராகும். அதாவது 14 ஆயிரம் கோடி அமெரிக்க டொல ராகும். இது ஐக்கிய இராச்சியத்தின் (பிரிட்டன்) நகர தேசிய உற்பத்தி யின் பெறுமதிக்குச் சமனாகும்.

':.போபிஸ்' சஞ்சிகையில் தெரி விக்கப்பட்டிருக்கும் விவரங்களின்படி உலகத்தில் வசிக்கும் கோடீஸ்வரர் களின் செல்வம், கடந்த வருடத்து டன் ஒப்பிடுகையில் இவ்வருடத்தில் பெருமளவில் வீழ்ச்சி கண்டுள்ளது. உலகம் முழுவதும் ஏற்பட்ட பொரு ளாதார சிக்கல்களும், பங்குச் சந்தை களின் விலை வீழ்ச்சியுமே இதற் கான காரணம்.

உலகக் கோடீஸ்வரர்களில் முதல் இடத்தை வகிப்பதில் அமெ ரிக்கப் பிரஜையான 'பில்கேட்ஸ்' வெற்றி கண்டுள்ளார். 47 வயதுடைய 'பில்கேட்ஸ்' அமெரிக்காவின் 'மைக்ரோ சொவ்ற்' நிறுவனத்தை ஆரம்பித்த வர். 'ஹவார்ட்' பல்கலைக்கழகத்தில் கல்வி கற்ற அவர் இரண்டு பிள்ளை களின் தந்தை. கடந்த வருடத்தில் இவரது வருமானம் 5ஆயிரத்து 280 கோடி டொலர். ஆனால், இவ்வருடத் தில் இத்தொகை 4 ஆயிரத்து 70 கோடி டொலராகக் குறைவடைந்துள் ளது.

உலகின் மிகப்பெரும் கோடீஸ் வரரான 'பில்கேட்ஸ்', உலகத்தில் இன்று வாழும் பணக்காரர்களில் முதன்மையானவர். பலதரப்பட்ட நட வடிக்கைகளுக்காக வருடம் ஒன்றுக்கு நன்கொடையாக இவர் வழங்கும் தொகை மட்டும் 100 கோடி டொலர். அதில் தடுப்பூசிகள் தொடர்பான ஆராய்ச்சிகளுக்காக பெரும் தொகைப் பணம் வழங்கப்படுகிறது.

உலகக் கோடீஸ்வரர்களில் இரண் டாவது இடத்தை வகிப்பவரும் ஓர் அமெரிக்கர். அவரது பெயர் வொரன் ஈ பவேட். 72 வயதான அவர் மூன்று பிள்ளைகளின் தந்தை. 'நேபிரஸ்காகி லிங்கன்' சர்வகலாசாலையிலும் கொலம்பியா சர்வகலாசாலையிலும் கல்விகற்றுள்ளார். அவர் கடந்த வரு டங்களில் உலகுக்கு நெருக்குதல் அளித்த பொருளாதார வீழ்ச்சிக்கு முகம் கொடுக்கமுடியாது சிரமமுற நேர்ந்தது. கடந்த ஆண்டு அவரது சொத்துகளின் மொத்தப் பெறுமதி 35 பில்லியன் டொலரானபோதிலும் (3500 கோடி டொலர்), இவ்வாண்டில் அது 30.5 பில்லியன் டொலராகக் (3050 கோடி டொலர்) குறைந்து விட்டது.

**தமிழில்: வீயெஸ்ரி**

உலகக் கோடீஸ்வரர்கள் பட்டிய லில் மூன்றாம் இடத்தை ஜேர்மனி யர்களான இரு சகோதரர்கள் பெற் றுள்ளனர். கார்ல் அல்பிறெட் மற்றும் தியோ அல்பிறெட் என்பவர்களே அவர்கள். 'அல்டி' என அழைக்கப் படும் வர்த்தக நிலையத் தொகுதி யின் உரிமையாளர்களான இவர்க ளது சொத்துக்களின் பெறுமதி 25.6 பிலலியன் டொலராகும் (2,560 கோடி டொலர்). அது கடந்த வருட பெறு மானத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது 120 கோடி டொலர் குறை வடைந்துள்ளது.

பில் கேட்ஸுடன் இணைந்து 'மைக்ரோ சொவ்ற்' நிறுவனத்தை ஆரம்பித்த மற்றொருவரான போல் ஜீ அலன், உலகிலுள்ள கோடீஸ்வரர் களில் நான்காம் இடத்தை வகிக் கிறார். 50 வயதுடைய அவர் ஒரு பிரம்மச்சாரி. இவரது சொத்துக்க ளின் பெறுமதி 2 ஆயிரத்து 10 கோடி டொலராகும்.


பில்கேட்ஸ்

சவுதிஅரேபிய அரச குடும்பத்தைச் சேர்ந்த இளவரசர் அல்வாலீட் பின் தலால் அலசவுத் என்பவர் இன்று உலகக் கோடீஸ்வரர்களில் ஐந் தாம் இடத்தில் இருக்கிறார். 46 வய தான இவரது சொத்துக்களின் பெறு மதி ஆயிரத்து 770 கோடி டொலரா கும். கடந்த ஆண்டில் இத்தொகை 2000 கோடி டொலராக இருந்தது. இரு பிள்ளைகளின் தந்தையான இவர் 'சிராகியூஸ்' பல்கலைக்கழகத் தில் எம்.எஸ்.ஸி. பட்டம் பெற்றவர்.

உலகக் கோடீஸ்வரர்களின் பட்டியலில் 61 ஆசிய நாட்டைச் சேர்ந்தவர்களும் அடங்கியுள்ளனர். கடந்த ஆண்டில் இத்தொகை 70 ஆக இருந்து வந்தது. ஆசிய நாட் டைச் சேர்ந்த கோடீஸ்வரர்களில் முதலிடம் வகிப்பவர் ஹொங் ஹொங் நாட்டைச் சேர்ந்த லீ-கா-சின்க் என்ற வியாபாரி யாவார். 'சுப்பர்மான்' என்ற பட்டப் பெயரால் அழைக்கப் படும் இவர் தொலைத்தொடர் புச சேவை, துறைமுக சேவை மற்றும் நிலவிற்பனை ஆகிய வற்றில் ஈடுபடும் பல நிறு வனங்களின் உரிமையாளர். உலகக் கோடீஸ்வரர்களின் பட்டியலில் இவர் 28ஆம் இடம் வகிக்கிறார். இவரது சொத் துக்களின் பெறுமதி 780 கோடி டொலர். கடந்த ஆண்டு இத்தொகை 100கோடி டொல ராக இருந்தது. இவர் 700 கோடி டொலர் பணத்தை சீன நாட்டில் முதலீடு செய்திருப் பதுடன் 400 உல்லாசப் பொழுதுபோக்கு நிலையங்க ளையும் நடத்தி வருகிறார்.

ஜப்பான் நாட்டைச் சேர்ந்த நொபுஸ் மாயா சாஜி என்ப வர் ஆசியாவின் கோடீஸ்வ ரர்களில் இரண்டாவது இடத்தை வகிக்கிறார். பியர் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள இவரது சொத்துக்களின் பெறுமதி 710 கோடி டொலராகும்.

இந்தியாவில் மென்பொருள் உற் பத்தியில் ஈடுபட்டுள்ள பிரமுகரான அசீம் பிறேம்பிட்ட உலகக் கோடீஸ் வரர்கள் பட்டியலில் 45 ஆவது இடம் வகிக்கிறார். இவரது சொத்துக்க

(IV ஆம் பக்கம் பார்க்க)

## சுஜெ சித்தமருத்துவ நிலையம்

ஆரம்பம் : இன்று (15.03.2003) சனிக்கிழமை
இடம் : 83, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

✳ சித்த மருத்துவ சிகிச்சைகள் (வெளிநோயாளர் பிரிவு மட்டும்) வழங்கப்படும்.
✳ சனி, ஞாயிறு தினங்களில் மட்டும். தொக்கண சிகிச்சை (*oilapplica-tion and massaging*) செய்யப்படும்.
✳ சிகிச்சை நேரம் - தினமும் மாலை 4.30 - 7 மணி வரையும்
சனி காலை 9.00 - 12.00 மணி வரையும்
ஞாயிறு மாலை 4.00 - 7.00 மணி வரையும்

(15609) நிர்வாகி
சு.சி.நி.



## மாவை கொல்லங்கலட்டி சிவன் கோவில் சுவர்ண பந்தன கும்பாபிஷேகம்

இலங்கையில் முதன் முதலாக நடைபெறும் சுவர்ணபந்தன கும்பாபிஷேகம் 19.03.2003 புதன்கிழமை காலை 6.30 - 7.30 மணிக்கிடையில் இடம்பெறும். 18.03.2003 செவ்வாய்க்கிழமை எண்ணெய்க் காப்பு நடைபெறும். சுவர்ண பந்தனத்தை இந்நாளில் பார்க்கலாம்.

இரண்டு நாள்களும் ஆலயத்திற்குச் சென்றுவர போக்குவரத்து ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. காலை 6.00 மணிக்கு தெல்லிப் பழை தடை முகாமிற்கு வரவும்.

(15608) -அறங்காவலர்.



## யாழ்ப்பாணம் - மாநகரசபை பகிரங்க ஏலவிற்பனை அறிவித்தல்

யாழ். செயலகத்திற்கு அருகிலுள்ள யாழ். மாநகரசபையின் பொது நூலகத்திலுள்ள பழைய பத்திரிகைகள் எதிர்வரும் 21.03.2003 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10.00 மணியளவில் பொது நூலகத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன என்பதை இத்தால் அறியத்தரு கின்றேன்.

*மாநகரசபை,*
*யாழ்ப்பாணம்.*
*2003.03.14* (சி-26965)

இ.இராமலிங்கம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.


## The 31[st] Day Remembrance

of



**Mrs. Daisy Ratnamma Navaratnam**

Born: 19.06.1927 Called to rest : 13.02.2003

You are still in my heart and mind
You are remembered in my prayers and thought
I will never forget you, my dearest sister
There is no one to fill your place - never
*fondly remembered and*
*Sadly missed by your only sister*

*ARK LANE,*
*UDUVIL.* (15592)

Baba,
PHILIPS FAMILY.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி செல்லர் சின்னம்மா

ஊரெழு மேற்கு, சுன்னாகத்தைச் சேர்ந்த திருமதி செல்லர் சின்னம்மா 13.03.2003 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சி.செல்லர் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற நாகலிங்கம் மற்றும் கருணாதேவன், சௌந்தரதேவன், மகேந்திரநாதன் (சுவிஸ்), இராசலிங்கம், சிறீதேவன், குலசிங்கம் (சுவிஸ்), யோகச்சந்திரன் (சுவிஸ்), ரவிச்சந்திரன், காந்தினிதேவி ஆகியோரின் அருமைத் தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நாகதம்பிரான் வீதி,*
*ஊரெழு மேற்கு,சுன்னாகம்.* (15618)

தகவல்:
இ.சிறீதரன் (மருமகன்)

## தம்பிஐயா சிதம்பரப்பிள்ளை

வெற்றிலைக் கேணியைப் பிறப்பிடமாகவும், பருத்தித்துறை நாகலிங்கம முதலி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற தபால் விநியோகஸ்தர் தம்பிஐயா சிதம்பரப்பிள்ளை கடந்த வியாழக்கிழமை இரவு காலமானர்.

அன்னார் ஓய்வுபெற்ற அதிபர் பாலாம்பிகையின் அருமைக் கணவரும் விக்கினேஸ்வரானந்தன் (ஜேர்மனி), சியாமளா, சுமங்களா, தயானந்தன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் வி. இராஜவதனி (ஜேர்மனி), காலஞ்சென்ற செல்வச்சந்திரன் மற்றும் சுந்தரலிங்கம், த.ஜோன்சின் நிலோனா (லண்டன்) ஆகியோரது மாமனாரும் ஜெயந்தன், பிரிந்தன், ஜசிந்தன், நந்தராசன், சிவாஜினி, விலாஜினி, விஜிதா, தேவகா, விஜிதரன, பிரியங்கா ஆகியோரின். அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.03.2003) சனிக்கிழமை பி.ப.4.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சுப்பர் மடம் மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*விநாயகமுதலி வீதி.*
*பருத்தித்துறை.* (15614)

தகவல்:
குடும்பத்தினர்.

## உலகக்...

(IIIஆம் பக்கத் தொடர்ச்சி)

ளின் பெறுமதி 590 கோடி டொலரா கும்.

ஆசிய நாடுகளின் கோடீஸ்வரர் களில் பெரும்பாலானோர் உலகத் தில் பொருளாதார முன்னேற்றத்தில் இரண்டாவது இடத்தை வகிக்கும் ஜப்பான் நாட்டைச் சேர்ந்தவர்கள். அந்த நாட்டைச் சேர்ந்த பெரும் கோடீஸ்வரர்களின் எண்ணிக்கை 19.

அதற்கடுத்த இடத்தை 11 பெரும் கோடீஸ்வரர்கள் வாழும் நாடான ஹொங்கொங் வகிக்கிறது. இந்திய நாட்டைச் சேர்ந்த கோடீஸ்வரர்களின் எண்ணிக்கை ஏழு. இந்த வகையில் சிங்கப்பூரைச் சேர்ந்த ஐந்து பேரும், மலேசியாவைச் சேர்ந்த நான்கு பேரும் தென்கொரியா, பிலிப்பைன்ஸ் மற்றும் தாய்லாந்தைச் சேர்ந்த தலா இருவரும், இந்தோனேஷியாவில் ஒரு வரும் என்ற வகையில் ஆசியாவில் கோடீஸ்வரர்கள் வாழ்ந்து வருகின்ற னர்.

75 ஆண்டுகளுக்கு மேலாக சமதர்ம நாடாக விளங்கிய ரஷ்ய நாட் டில் சமதர்மப் பொருளாதார முறை நலிவுற்றதையடுத்து பெரும் தொகை யில் கோடீஸ்வரர்கள் உருவாகத் தொடங்கினர். '.'.போப்ஸ்' சஞ்சிகை யின் கூற்றுப்படி 2000 ஆம் ஆண்டில் ரஷ்யாவில் கோடீஸ்வரர் என யாரும் இருக்கவில்லை. ஆனால், 2003 ஆம் ஆண்டில் ரஷ்யாவில் வாழும் கோடீஸ்வர்ர்களின் எண்ணிக்கை 17 ஆக உள்ளது.

அந்த வகையில் ரஷ்ய நாட்டில் வசிக்கும் பல கோடீஸ்வரர்களில் மிக அதிக பெறுமதியான சொத்துக் களை வைத்திருப்பவர் 'யூகொஸ்' பெற்றோலிய எண்ணெய் உற்பத்தி நிறுவனத்தின் உரிமையாளரான மிகாயில் கொதோர் கொவிஸ்கியா வார். அவரது தற்போதைய சொத் துக்களின் பெறுமதி 800 கோடி டொல ராகும். அதேவேளை, உலகத்துக் கோடீஸ்வரர்களின் பட்டியலில் அவர் 26ஆம் இடத்தில் உள்ளார்.


## இசை வகுப்புகள் ஆரம்பம்

தெல்லிப்பழை பாலர் ஞானோதய சபையினர் நடத்தும் இசை வகுப்புகள் மீண்டும் ஆரம்பமாகவுள்ளன.

உடுவில் சேவிஸ்ரேஷன் ஒழுங்கையில் எதிர்வரும் 18.03.2003 செவ் வாய்க்கிழமை ஆரம்பிக்கப்படவிருக்கும் வாய்ப்பாட்டு, வயலின், மிருதங்கம் முதலான வகுப்புகளில் சேர விரும்புவோர் காசி விநாயகர் தேவஸ்தானத் தில் சபைத் தலைவருடன் தொடர்புகொள்ளவும்.

*காசி விநாயகர் தேவஸ்தானம்,*
*தெல்லிப்பழை.* (15611)

தலைவர்,
பாலர் ஞானோதய சபை.



## உடன் தேவை

ஓவ்செற் மெசின்மைண்டா: HAMADA, DAVIDSON. ஓவ்செற் மெசின்கள் இயக்கத் தெரிந்தவர்களுக்கும் இரவு நேரத்தில் தங்கியிருந்து பணிபுரியக் கூடியவர்களுக்கும் முன்னுரிமை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப் படும்.

நேரில் வரவும்:- ஸ்ரீ விநாயகர்,
பிரதான வீதி, வழக்கம் பரை.
சுழிபுரம்.

(15616)



## வல்வெட்டித்துறை நகராட்சிமன்றம் தொடர்பாக 2003.02.16, 2003.02.27 ஆம் திகதிகளில் பிரசுரமாகிய கேள்வி அறிவித்தல்கள் விளம்பரம் தொடர்பானது

மேற்படி கேள்வி அறிவித்தல்கள் தொடர்பான கால எல்லையானது நீடிக்கப்பட்டுள்ளது. ,விண்ணப்பப் படிவங்கள் வழங்குதல் தொடர்பான விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

*நகராட்சிமன்ற அலுவலகம்,*
*வல்வெட்டித்துறை.*
*2003.03.14* (C-26966)

செயலாளர்
நகராட்சிமன்றம், வல்வெட்டித்துறை.



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கோவிலாக்கண்டி, J/296 கிராம உத்தியோகத்தர்
*திருவாளர்*
**கந்தையா ஸ்ரீ விக்கினேஸ்வரராசா**

அவர்கள் தரம் Iஇற்கு பதவி உயர்வு பெற்ற மையையிட்டு மகிழ்வுடன் அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம். அவர் இன்னும் பல பதவி உயர்வுகளைப் பெற்று சிறப்படைய வேண்டும் என இறைவனை வேண்டுகின்றோம்.

நாவற்குழி கிழக்கு, தச்சன்தோப்பு,
காந்தி சனசமூக நிலைய வாழ் மக்கள்.

(15593)



ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ!

## திருமண அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் மங்களகரமான சித்திரபானு வருஷம் நாளை மறுதினம் பங்குனித் திங்கள் 3ஆம் நாள் (17.03.2003) திங்கட்கிழமை பகல் 12.36 மணி முதல் 2.06மணி வரையுள்ள (பழைய நேரம்) பூர நட்சத்திரமும் மிதுனலக்னமும் கூடிய சுபமுகூர்த்த சுபவேளையில்

எமது கனிஷ்ட புத்திரன்
திருநிறை செல்வன்
**சந்தானகோபால் (செல்வம்)**
அவர்களுக்கும்



எமது புத்திரி
திருநிறை செல்வி
**சந்திரகலா (கலா)**
அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணைகொண்டு திருமாங்கல்யதாரணம் செய்ய பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு யாழ்ப்பாணம், வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலய திருமண மண்டபத்தில் (நாச்சிமார் கோவில்) நடைபெறும் திருமண வைபவத்திற்கு தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து அதனைத் தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை விரும்பும்

திருமதி சா.இராசரெத்தினம் குடும்பம்
1035, காங்கேசன்துறை வீதி,
நாச்சிமார்கோவிலடி மதவடி,
யாழ்ப்பாணம்.

திரு.திருமதி த.நாகராசா தம்பதிகள்
அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.
36-2/5, கொட்டாஞ்சேனை வீதி,
கொழும்பு - 13.

(இரு வீட்டார் அழைப்பு)

இதனையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.



## எஸ்.பி.என்ரபிறைசஸ்

(14.03.2003) வெள்ளிக்கிழமை காலை 7.00 - 8.00 வரையான சுபநேரத்தில் ஆரம்பித்துவைக்கப்பட்டுள்ளது.

எம்மிடம்

உள்ளூர், சர்வதேச (I.D.D), இணைப்பு (Connecting calls) அழைப்புக்கள் துல்லியமாகவும் துரிதமாகவும் குறைந்த கட்டணத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

சர்வதேச அழைப்புக்கள் 7/50 இலிருந்து 15/= இற்குள் பெற்றுக்கொள்ளலாம்.

# S.P.Enterprises

Communication, Stationery, Travels & Tours
# 379, Kasthuri yar Road, Jaffna.
Tel: 021 - 222 5735 Tel/Fax : +9421222 5736
Connecting your world.

(C26958)